Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 | விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493

சுடர் :35 கதிர் :79 மாசி 04ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 16 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051



**தூக்குத்துரை என்டா அடாவடி**

அரசாங்கத்தின்ர 'உள்ளூர்க்கைத்தடி' பெரும் சீன் போடுறாராம். அதுவும் அதிகாரியளோட அவர் காட்டுற பந்தாவை ஜனாதிபதி கூட காட்டுவாரோ தெரியேலை.

37 ▶

## ராக்கிங்கில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மாணவர்களின் வீடுகளுக்கு பாதுகாப்பு

### பல்கலைக்கழக நிர்வாகம் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற பாலியல் ரீதியான ராக்கிங் கொடுமையில் ஈடுபட்டதாகக் கருதப்படும் மாணவர்களின் வீடுகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி வளாகத்தின் புதுமுக மாணவிகளுக்கு அலைபேசி ஊடாக பாலியல்துன்புறுத்தல் விடுத்த 37 ▶

## மன்னாரில் ஒருவர் வெட்டிக் கொலை

### பெண் படுகாயம்

மன்னார், பெப். 16

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் செட்டியார் கட்டையடம்பன் பகுதியில் கூரிய ஆயுதத்தால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். பெண் ஒருவர் காயங்க 38 ▶

### ஐ.நாவில் அரசுக்கு

# கால அவகாசம் வழங்கக் கூடாது

### அடுத்த கட்டத்துக்கு நகரவேண்டும் என்கின்றனர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாது. இலங்கை விவகாரத்தை ஐ.நா. அடுத்த கட்டத்துக்கு – மாற்றுப் பொறிமுறைக்கு எடுத்துச் செல்லவேண்டும். அதற்கான சூழல் – நேரம் இப்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். 37 ▶

### ராக்கிங் விவகாரம்

## அலைபேசி இலக்க விவரங்களை வழங்க நிறுவனங்களுக்கு பணிப்பு

கிளிநொச்சி, பெப். 16

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடத்தில் மூத்த மாணவர்கள் சிலரால் புதுமுக மாணவிகள் சிலருக்கு அலைபேசியில் பாலியல் தொல்லை ஏற்படுத்தப்பட்டமை தொடர் 37 ▶

## ரூ. 13 கோடி பெறுமதியான 14 கிலோ நகை சிக்கியது

### திருட்டு நகைகளை உருக்கி கொண்டு சென்றபோது சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கையின் வடக்குப் பகுதிகளில் திருடப்படும் நகைகளை உருக்கி இந்தியாவுக்கு கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் மாதகலைச் சேர்ந்த இருவரை காங்கேசன்துறை கடற்படையினர் சந்தேகத்தில் கைது 37 ▶

## சவேந்திரவுக்குத் தடை சஜித் கொந்தளிப்பு

கொழும்பு, பெப். 16

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்துக்கு அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு பயணத் தடை விதிக்கப்பட்டமை வருந்தத்தக்கது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 38 ▶

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

மன்னார், பெப். 16

வங்காலை தோமஸ்புரி குதிரை குத்தி குளத்திலிருந்து 60 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வங்காலைப் பகுதியில் வசிக்கும் 60 வயதுடைய நபர் நேற்றுமுன்தினம் மாடு மேய்க்கச் சென்றுவீடுதிரும்பாததையிட்டு அந்தப் பகுதி மக் 37 ▶

## அமெ. – இலங்கை இடையே இராஜதந்திர மோதல் வெடிப்பு

### அமெரிக்கத் தூதுவரை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கிறது இலங்கை

கொழும்பு, பெப். 16

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்காவால் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும் 38 ▶

## அமெரிக்காவின் அதிரடித் தடைக்கு ஆட்சேபனை எழுப்பியது இலங்கை

38 ▶

## அமெரிக்காவுக்குச் செல்ல தான் விரும்பவில்லையாம்

### கூறுகிறார் சவேந்திர சில்வா

கொழும்பு, பெப்.16

எதிர்காலத்திலும் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு விண்ணப்பிக்க விரும்பவில்லையென இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்

சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத்தடை 37 ▶

அடகு வட்டி மேலும் குறைக்கப்பட்டுள்ளது

தங்கப்பவுண் ஒன்றிற்கு

அதிகூடிய முற்பணம் எம்மிடம் இருந்து

முற்பணத் தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது

LB FINANCE 0112 200 200

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிறைவேற்றுத்துறையின் முயற்சிகளுக்கு நீதித்துறை மூக்கை நுழைக்கக் கூடாது

## ஜனாதிபதி கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

நீதித்துறையின் நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடைமுறைகளில் நிறைவேற்றுத்துறை அல்லது சட்டவாக்கத்துறை தலையிடுவது ஜனநாயகத்துக்குப் பாதிப்பானதாக அமையும். அதேபோன்று நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு நீதித்துறை தேவையற்ற தலையீட்டை செய்யாதிருப்பதும் முக்கியமானதாகும். நிறைவேற்றுத்துறையும் சட்டவாக்கத்துறையும் ஜனநாயக நடைமுறைகளினூடாக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக நிறைவேற்றுத்துறைக்கு (ஜனாதிபதி) மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான மக்கள் ஆணை உள்ளது. மக்களின் இருப்புக்காகவும் சுபீட்சத்துக்காகவும் நிறைவேற்றுத்துறை (ஜனாதிபதி) மேற்கொள்ளும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு நீதித்துறை தடைகளை ஏற்படுத்தாது இருப்பது முக்கியமானதாகும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின், தேசிய சட்ட மாநாடு - 2020, நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே கோத்தாபய ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

துரித தொழில்நுட்ப மாற்றங்களுடன் உலகின் மிக முக்கிய சந்தையாக ஆசியா கேந்திர நிலையமாக திகழ்கிறது. ஆசியாவின் எழுச்சியை எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு அதிகபட்சம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக சிறிய நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் முறைமைகளை உருவாக்க வேண்டியதன் தேவையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தனது அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பத்துறை நிறுவனங்களுக்கு தற்போது குறிப்பி டத்தக்க வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இத்துறையின் முதலீட்டிற்கும் அதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார். தேசிய அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு பொருளாதாரத்தின் முழுமையான உள்ளாற்றலுக்கும் தேவையான சீர்திருத்தங்களை செய்வதற்கும் அரசு எதிர்பார்த்துள்ளது. வர்த்தக சட்டத்திட்ட முறைமையை முன்னேற்றுவதும் அவசியமானதாகும். அதன்மூலம் வர்த்தகத்துறையை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், முறைகேடுகளை தடுக்கவும் முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நீதித்துறை சுயாதீனமாக செயற்படுவது சட்ட ஆட்சிக்கு முக்கியமானதாகும். சட்டத்தின் உதவியை நாடுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள விலை குறித்தும் கவனத்திற்கொள்ள வேண்டிய காலம் உருவாகியுள்ளது. நாட்டின் சாதாரண மக்களுக்கு அவர்களது பிரச்சினைகளை உடனடியாகவும் இலகுவாகவும் கட்டுப்படியான விலையிலும் தீர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

### மறுக்கப்பட்ட நீதி

தாமதமாகும் நீதி நிராகரிக்கப்பட்ட நீதியாக கருதப்படும். அது நீதியை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக அக்கறை காட்டும் தரப்பினரை விருத்தியடைய செய்துவிடும். எனவே இலங்கையின் சட்ட முறைமையை உலகில் சிறந்த நிலைக்கு மாற்றுவதற்கு நீதித்துறையும் அரசும் சட்டத்துறையும் இணைந்து முழுமையான தீர்வை முன்வைக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளதென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுபீட்சமானதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு சட்டத்துறை சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஒ.5)

## மாங்குளம் மனித எச்சங்கள் 20 ஆண்டுகள் பழமையானதாம்

முல்லைத்தீவு, பெப். 16

முல்லைத்தீவு மாங்குளம் மருத்துவமனை வளாகத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 20 வருடங்கள் பழமையானவை என சட்டமருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளதாக, மாங்குளம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மாங்குளம் மருத்துவமனை வளாகத்தில் மறுவாழ்வுப் பிரிவுக்கான கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ள இடத்தில் கடந்த 12 ஆம் திகதி எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. துணிகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் இரண்டு என்பனவும் மீட்கப்பட்டிருந்தன. பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, நீதிமன்றத்தின் அனுமதியுடன் அங்கு அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கிளிநொச்சி சட்டமருத்துவ அதிகாரி, தடயவியல் அதிகாரிகள் கண்காணிப்பின் கீழ் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஒ.5,19)

## இரண்டு நாட்டு மீனவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக கைது

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை எல்லைக்குள் நுழைந்ததாக இந்திய மீனவர்கள் 7பேரும், இந்திய எல்லைக்குள் நுழைந்ததாக இலங்கை மீனவர்கள் மூன்று பேரும் இரு நாட்டுக் கடற்படைகளாலும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து நேற்றுக் காலை கடற்றொழிலுக்காகச் சென்ற மூன்று மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

லூவாஸ் அலோசியல், சுகந், சகாய வின்ஸ்ரோ ஆகிய மூன்று மீனவர்களே நேற்று அதிகாலை தனுஸ்கோடி அருகே இந்திய எல்லைக்குள் மீன்பிடித்து கொண்டிருந்ததாக சர்வதேச கடல் எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த இந்திய கடற்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி அவதானித்தது. அதற்கு அமைவாக அவர்கள் பிடிக்கப்பட்டு ராமேஸ்வரம் கடலோர பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேநேரம் இந்தியாவின் புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்ட மீனவர்கள் 7பேர் நெடுந்தீவு கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி நேற்று மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். (ஒ.5,105)



## கட்டுத்துவக்கு வெடித்து சகோதரர்கள் படுகாயம்

முல்லைத்தீவு, பெப். 16

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேராவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மிருகங்களை வேட்டையாடுவதற்காக கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் தம்பி காயமடைந்த நிலையில் அவரை மீட்கச் சென்ற அண்ணன் மற்றுமொரு சட்டவிரோத துப்பாக்கி வெடித்ததில் அவரும் காயமடைந்துள்ளார்.

தேராவிலைச் சேர்ந்த செல்வக்குமார் தமிழ்வேந்தன் (வயது-23) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், இவரது தம்பியான செல்வக்குமார் தமிழின்பன் (வயது-20) ஆகிய இருவருமே காயமடைந்து சிகிச்சைக்காக தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சகோதரர்கள் இருவரினதும் முழங்கால் பகுதிகளில் குண்டுபட்டு சிதறுண்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். (ஒ.5,19)

## வேலையாள் தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும் திறமையும் உடைய குடிசார் தொழில்நுட்பவியலாளர் (T.O - Civil), மற்றும் களஞ்சியக்காப்பாளர் (Store Keeper) தேவை.

யாழ்ப்பாணத்தை அண்மித்து வசிப்பவராகவும், வயது எல்லை 18-40ற்கு உட்பட்டவராகவும் உள்ள ஆண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:- 076 316 5730, 077 592 5371
E-mail- careers@decon.lk

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை. (CS31253) (11,17)

077 460 8795

## தங்க நகை மீட்பு

அடைவு வைத்து, மீட்க முடியாமல் அறுதியாகவுள்ள தங்கநகைகளை மீட்டு நல்ல விலைக்கு விற்று மேலதிக பணத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள நாங்கள் உதவுகிறோம். உங்களது பெயர், தொடர் இலக்கத்தை 0778661605 தொலைபேசிக்கு அனுப்பிவையுங்கள்.

## காணி தேவை

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் காணி தேவை.

077 714 8173

## வேலையாள் தேவை

கொழும்பில் வீட்டு வேலை செய்யக் கூடிய பெண்பிள்ளை தேவை.

077 714 8173







ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் பழிவாங்கும் படலம்

“இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவும், அவரது குடும்பத்தினரும் எங்கள் நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது” என்றொரு அதிர்ச்சி வைத்தியத்தை இலங்கைக்கு கொடுத்திருக்கிறது அமெரிக்க அரசு. இலங்கையின் அதியுயர் பதவிகளில் ஒன்றான இராணுவத்தளபதி பதவியையும், மேலதிகமாக பாதுகாப்புத் துறைத் தலைவர் என்ற பதவியையும் வகிக்கும் சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத்தடை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடியதொன்றல்ல. கிட்டத்தட்ட இலங்கையின் கன்னத்தில் அமெரிக்கா ஓங்கி அறைந்தமைக்குச் சமனானது இந்தத் தடை உத்தரவு.அதுவும் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெறுவதற்கான காலம் நெருங்கி வரும் சூழலில் , இலங்கையை அவமானப்படுத்துவது போன்ற இந்தத் தடை உத்தரவு , இராஜதந்திர வட்டாரங்களின் புருவங்களை ஆச்சரியத்தில் உயர்த்தியுள்ளது.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் , இலங்கையோடு கீரியும் பாம்புமான போக்கையே அமெரிக்கா கைக்கொண்டிருந்தது. போர் வெற்றியின் மமதையில் நின்ற மஹிந்த, அமெரிக்காவைக் காய்வெட்டிவிட்டு, சீனாவோடு காதல் கொண்டிருந்த காலம். இந்தக் காதலைக் கண்டு அமெரிக்கா அவ்வளவாக ரசிக்கவில்லை. அதனால் நம்பியார்த்தனமாக பல்லை நெரித்து, கையை நெரித்து களத்தில் இறங்கி, இறுதிப்போர்க்குற்ற விசாரணை என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்தது. ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் என்றாலே இலங்கைக்கு பேதி போகுமளவுக்கு தன் பங்குக்கு ஆட்டம் காட்டியது அமெரிக்கா. கூடவே இராஜதந்திர ரீதியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அமெரிக்கா கொடுத்த அழுத்தங்களை இலங்கையால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கடைசியில் மஹிந்தவின் ஜனாதிபதிப் பதவியை காவு வாங்கி, அவரை வீட்டுக்கு அனுப்பிய பின்னர் தான் அமெரிக்காவின் கோபம் தணிந்தது.

அதன் பின்னர் தம் போக்கை ராஜபக்ச குடும்பத்தினர் மாற்றிக் கொண்டு, பல காய்நகர்த்தல்களைச் செய்து மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். எந்த அமெரிக்கா ராஜபக்ச குடும்பத்தை ஆட்சியில் இருந்து முன்னர் அகற்றியதோ அதே அமெரிக்காவே இப்போது மீண்டும் அவர்களை ஆட்சிக் கட்டிலில் உட்கார வைக்க உதவியது. இப்போது இலங்கையின் ஜனாதிபதியாக உள்ள கோத்தாபய ராஜபக்ச, சில காலங்களுக்கு முன்னர்வரை இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்தவர். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் போட்டியிட முடியாது. எனவே தன்னுடைய அமெரிக்கக்குடியுரிமையை அவர் ரத்துச் செய்தாலே போட்டியிட முடியும். ஆனால் அதை அவர் நினைத்தவுடன் செய்ய முடியாது. பல மாதங்கள் எடுக்கும். ஆனால் அமெரிக்கா, கோத்தாபயவுக்காக அதனை வெகு வேகமாகச் செய்து, அவரின் குடியுரிமையை ரத்துச் செய்து, போட்டியிடும் சூழலை உருவாக்கியது. அமெரிக்கா நினைத்திருந்தால் கோத்தாபயவின் அமெரிக்கக் குடியுரிமையை ரத்துச் செய்யாமல் இழுத்தடித்து, அவரின் ஜனாதிபதிக் கனவைக் கலைத்திருக்க முடியும். ஆனால் அமெரிக்கா கோத்தாபயவுக்கு ஆதரவாக இருந்ததாலேயே சில காரியங்கள் மளமளவென்று நடந்து,இன்றைக்கு அவர்ஜனாதிபதியாகவும் மாறியிருக்கிறார்.

இப்படி பாலும் தேனுமாக மீண்டும் மாறிய அமெரிக்கா–இலங்கை நட்புறவு , பழையபடி கசக்கத் தொடங்கியிருக்கிருப்பதன் அறிகுறியே, திடீரென அமெரிக்கா விதித்துள்ள, சவேந்திர சில்வா மீதான பயணத்தடை. இந்தப் பயணத்தடையை ஜீரணிக்க முடியாமல் இலங்கை அரசு குய்யோ முறையோ என்று புலம்பத் தொடங்கியுமுள்ளது.

“தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஒருவரை பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நியமிப்பதை சர்வதேசம் கேள்விகளுக்குட்படுத்துவது ஏமாற்றமளிக்கும் விடயம்.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பான நம்பகத்தன்மையினை ஆராய்ந்து அமெரிக்கா மீள்பரிசீலைனைக்குட்படுத்த வேண்டும்” என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு கெஞ்சும் தொனியில் அறிக்கை ஒன்றை அவசரமாக வெளியிட்டிருக்கிறது. ஆனால் அதற்கும் அமெரிக்கா அசரவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகளுடன் சவேந்திர சில்வாவுகு தொடர்பு இருக்கிறது . அதனை உறுதி செய்ததாலேயே இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு பதிலளித்துள்ளார். ஆக, என்னதான் இலங்கை கெஞ்சினாலும் அமெரிக்கா இப்போதைக்கு இறங்கிவரப்போவதில்லை. யார் கண்டது, ஜெனிவானில் மீண்டும் போர்க்குற்றச்சாட்டு விசாரணையைத் தூக்கிப் பிடித்து, நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்சக்களை கவிழ்க்கத் தான் அமெரிக்கா அடிபோடுகிறதோ தெரியவில்லை. அதற்குள் அமெரிக்காவுக்கு ஏன் தங்களில் திடீர்க் கோபம் என்பதைக் கண்டறிந்து ராஜபக்சக்கள் தீர்க்காவிட்டால், வெள்ளைமாளிகையின் பழிவாங்கும்படலம் தொடரத்தான் செய்யும்.

# உலக சந்தை நிலைவரப்படி எரிபொருள் விலை மாறும்!

## இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.16**

**உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ளது. இது ஒரு குறுகிய கால நிலை மாத்திரமே. இந்தநிலை தொடருமானால் எரிபொருள்களின் விலைகளில் நிச்சயம் விலைக் குறைப்பை மேற்கொள்வோம்.**



இவ்வாறு அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்ட இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் குறைந்துள்ளது . அது இலங்கையில் எரிபொருள்களின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமானதாக இல்லை. சீனாவில் ஏற்பட்டுள்ள வைரஸ் தாக்கம் நிலைமை காரணமாக எரிபொருள்களின் கேள்வி குறைந்துள்ள நிலையில் விலையிலும் வீழ்ச்சி காணப்படுகிறது. எரிபொருள்களின் விலைகளில் தொடர்ந்தும் இந்த நிலைமை தொடர்ந்தால் அதன் பயனை நாட்டு மக்களுக்கு வழங்குவோம். கடந்த மாதங்களில் மசகு எண்ணையின் விலை அதிகரித்த போது இலங்கையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கக் கூடிய தேவை இருந்தது. எனினும் விலை அதிகரிப்பை மேற்கொள்ளவில்லை.

தற்போது மசகு எண்ணெய் முழுமையாக விலை குறையவில்லை. இது ஒரு குறுகிய கால நிலை மாத்திரமே. இதனால் எரிபொருளில் விலை குறைப்பை ஏற்படுத்த முடியாது உள்ளது - என்றார். (எ)

## சிறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் உதயங்க!

கொழும்பு, பெப்.16

மிக் விமான மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, நேற்றுமுன்தினம் காலை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த உதயங்க வீரதுங்க, சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

2006 ஆம் ஆண்டு மிக் 27 ரக விமான கொள்வனவின் போது இடம்பெற்ற சுமார் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி மோசடி தொடர்பாக உதயங்க வீரதுங்க சந்தேக நபராக பெயரிடப்பட்டு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அவர் வெளிநாட்டில் தங்கியிருந்ததால் கைது செய்யப்படவில்லை.

உதயங்க வீரதுங்க, நேற்றுமுன்தினம் அதிகாலை 4.37 மணியளவில், இலங்கை ஏர்லைன்ஸுக்கு சொந்தமான விமானம் ஊடாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். அவரிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு, கைது செய்தனர். அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய போது, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். (எ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்றும், நாளையும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, பஸார் வீதி, ஞானம்ஸ் விடுதி, லதுசியந் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், கமலேஸ்வரி, சிவராதா புடவையகம், ரொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அவசர நோயாளர் பிரிவு ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை **யாழ்ப்பாணம் மாவட்டத்தில்** வதிரி, தேவரையாளி, அல்வாய், திக்கம் ஆகிய இடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** புதுக்குளம் கோவில்குளம் கிராமம், இலுப்பைக்குளம் பகல அளுத்வத்த கிராமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

தொழில் நுட்பக் கல்லூரி வளாக

## தாக்குதலைக் கண்டித்து நாளையதினம் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்துக்குள் புகுந்து மாணவர்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நாளை காலை 9 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அதிகரிக்கும் வன்முறையின் உச்சமாக கல்லூரிகளுக்கு உள்ளே காடையர்கள் புகும் அளவுக்கு நிலைமை மோசமடைவது மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றும் என்பதனால் இதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-105)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

கல்குடா பொலிஸ் பிரிவிற் குட்பட்ட கல்மடு கடற்கரையில் இனந்தெரியாத வயோதிப பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்ட நிலையில் அவர் வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் விநாயகபுரத்தை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான கந்தன் தெய்வானை (வயது - 68) என்று இனங்காணப்பட்டுள்ளார். (ம)



# இங்கிலாந்து திரில் வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது ரி-20 போட்டியின் பரபரப்பான ஆட்டத்தில் 2 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது இங்கிலாந்து.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு இடையிலான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதனையடுத்து இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா அணி ஒரு ரன் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி-20 போட்டி டர்பனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

டாஸ் வென்ற தென்னாபிரிக்காவுக்கு முதலில் இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

அதன்படி, இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஜேசன் ராய், மொயின் அலி களமிறங்கினர். இருவரும் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 204 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காமல் 47 ரன்னும், ஜேசன் ராய் 40 ரன்னும், 39 ரன்னும், பேர்ஸ்டோவ் 35 ரன்னும், மார்கன் 27 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் லுங்கி நிகிடி 3 விக்கெட்டுக்களையும், பெலுக்குவாயோ 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டி குக் அதிரடியாக ஆடி 22 பந்தில் 6 சிக்சர், 2 பவுண்டரி அடங்கலாக 65 ரன்களைக் குவித்து ஆட்டமிழந்தார். பவுமா 31 ரன்னிலும், பிரெடோரியஸ் 25 ரன்னிலும், மில்லர் 21 ரன்னிலும் வெளியேறினார். பின்னர் களமிறங்கிய வான் டெர் டுசென் தாக்குப்பிடித்து ஆடி ஆட்டமிழக்காமல் 43 ரன்களைப் பெற்றார்.

இறுதி ஓவரில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற 15 ரன்கள் தேவைப்பட்டது. 4 பந்தில் 12 ரன்கள் மட்டுமே எடுத்தது. இறுதி 2 பந்தில் 2 விக்கெட் வீழ்ந்தது. இறுதியில், 2 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி திரில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணி வீரர் மொயின் அலி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் காணப்படுகின்றது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதிப் போட்டி இன்று செஞ்சூரியனில் மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

## போட்டி முடிவு

யாழ்ப்பாணம், பெப்.15

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் 21 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டம் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் பல்லசுட்டி காந்திஜீ விளையாட்டுக்கழக அணிக்கும், தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பல்லசுட்டி காந்திஜீ விளையாட்டுக் கழக 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெற்றது. (23)




## புதிய லோகோவை வெளியிட்டது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்

ஐ.பி.எல். ரி-20 லீக்கில் விளையாடும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி தனது புதிய லோகோவை நேற்று வெளியிட்டுள்ளது.

ஐ.பி.எல். ரி-20 லீக்கில் விளையாடும் அணிகளில் ஒன்று பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ். இந்த அணியில் விராட் கோக்லி, ஏபி டி வில்லியர்ஸ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம் பிடித்திருந்தும் அந்த அணியால் வெற்றி பெற முடியவில்லை. இந்த நிலையில் ஆரம்பமாகவுள்ள நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடருக்காக தனது புதிய லோகோவை நேற்று வெளியிட்டது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்.

## பாக்.எதிரான தொடர் தள்ளி வைப்பு

வீரர்கள் வேலைப்பளு காரணமாக பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாட இருந்த ரி-20 தொடரை தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தள்ளி வைத்துள்ளது.

பாகிஸ்தான் அணி சொந்த மண்ணில் கிரிக்கெட் தொடர்களை நடத்த முயற்சி எடுத்து வருகிறது. இலங்கை, பங்களாதேஷ் அணிகள் அங்கு சென்று விளையாடி விட்டன.

அடுத்ததாக தென்னாபிரிக்கா அணிக்கு அழைப்பு விடுத்தது. தென்னாபிரிக்கா அணியும் மார்ச் மாதம் பாகிஸ்தான் வர சம்மதித்திருந்தது. மேலும் பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்காக ஒரு குழுவை அனுப்பவும் ஏற்பாடு செய்து வந்தது.

இந்த நிலையில் வீரர்கள் எங்கள் நாட்டின் கோடை காலத்தில் இருந்து தொடர்ந்து கிரிக்கெட் விளையாடி வருகிறார்கள். அவர்களின் வேலைப் பளுவின் காரணமாக மார்ச் மாதம் பாகிஸ்தான் வர இயலாது. இதனால் பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான தொடர் தள்ளிப் போகின்றது.

தென்னாபிரிக்கா அணி தற்போது இங்கிலாந்துக்கு எதிராக விளையாடுகிறது. அதன் பின்னர் இந்திய அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

தென்னாபிரிக்கா அணி வீரர்கள் இடம்பெறவுள்ள ஐ.பி.எல் போட்டிகளில் அதிகமான வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதால் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை தள்ளிவைத்ததுக்கு அதுவும் ஒரு காணமாக இருக்கலாம்.



# ஓல்கோல்ஸ் வி.க. அபார வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.16
கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் வட்டுக்கோட்டை ஓல்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நேற்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஓல்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ் ஸ்ரார் அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் வாமணன் 57 ஓட்டங்களையும், மணிவண்ணன் 39 ஓட்டங்களையும், றுக்ஸ்மன், தனுஸ்ரன் ஆகியோர் தலா 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சிறிகுகன், நிலக்சன் ஆகியோர்தலா 2 இலக்குகளைக்கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஒல்கோல்ஸ் அணி 25.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் மதுஷன் 136 ஓட்டங்களையும், நிறோசன் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், பிரிய லக்சன் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உமேஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (23)

## றேஞ்சர்ஸ், பைவ்ஸ்டார் அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.16
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி, ஏழாலை பைவ்ஸ்டார் விளையாட்டுக் கழக அணிகள் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றன.

வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் ஆர்த்திகன் தெரிவானார்.

தொடர்ந்து மாலை 4மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏழாலை பைவ்ஸ்டார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக அணி மோதியது.

பரபரப்பான ஆட்டத்தின் முடிவில் ஏழாலை பைவ்ஸ்டார் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக ஏழாலை பைவ்ஸ்டார் அணி வீரர் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## மன்னார் பிறீமியர் லீக் இன்று ஆரம்பம்



மன்னார் மாவட்ட கால் பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் மன்னார் பிறீமியர் லீக் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மேற்படி போட்டிகள் தொடர்பில் நேற்று 'மன்னார் பிறீமியர் லீக்' தலைவரும், இலங்கை கால் பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும், மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் லீக்கின் நிர்வாக உறுப்பினப்பினர்கள், கழகங்களின் தலைவர்கள், செயலர்கள், அணிகளின் உரிமையாளர்கள், வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கான ஜெர்சிகள், வெற்றிக் கிண்ணம் போன்றன அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. அத்தோடு உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி உரிமையாளர்கள், முகாமையாளர்கள் அணியின் தலைவர்களின் அறிமுகமும் இடம்பெற்றது. இந்தச் லீக் சுற்றுப் போட்டியில் 10 உரிமையாளர்களினால் 10 அணிகள் ஏலத்தில் எடுக்கப்பட்டன. இந்த லீக்கின் முதலாவது போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (56)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.16
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,பெப்.16
சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண், பெண் இருபாலருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை சங்கானை உள்ளக அரங்கில் இடம் பெறவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,பெப்.16
மன்னார் மாவட்ட துடுப்பாட்டசங்கத்தினால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை 9மணிக்கு எருக்கலம்பிட்டி மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் நானாட்டன றீகன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வங்காலை சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,பெப்.16
கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண், பெண், இருபாலருக்குமான கரம் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கண்டாவளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. பூப்பந்தாட்டப் போட்டி பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி உள்ளக அரங்கில் இடம் பெறவுள்ளது. (23)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம்,பெப்.16
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் காலை 8.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஏபி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை ஒல்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (23)

சட்டவிரோத மண் அகழ்வு

# கிளிநொச்சியில் 9 பேர் கைது!



கிளிநொச்சி, பெப். 16

கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய இரு உழவு இயந்திரங்களும் பறிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுகுளம் நாச்சிகுடா பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (ம-214)

# சிறுவர், பெண்கள் உரிமையை வலியுறுத்தி யாழில் ஊர்வலம்




*யாழ்ப்பாணம், பெப் 16*

*"சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான உரிமையை வென்றெடுப்போம்" என்ற தொனிப் பொருளிலான அமைதியான விழிப்புணர்வு ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடத்தப்பட்டது.*



யுகசக்தி சமூக அமைப்பின் ஏற்பாட்டில், சிறுவர் கழகங்களின் பங்களிப்புடன் ஊர்வலம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பண்ணை வளாகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கைச் சென்றடைந்தது. இதில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

"எங்கள் குரலுக்குச் செவி கொடுங்கள் ,பெற்றோர்களே உங்களைத் தியாகம் செய்யுங்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதீர்கள், பெற்றோர்களே உங்கள் நேரத்தைப் பிள்ளைகளுடன் செலவிடுங்கள், பெற்றோர்களின் தியாகம் சிறுவர்களின் எதிர்காலம் போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கியவாறு ஊர்வலமாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினர். (க-7)

# உதவிகள் வழங்கல்



வவுனியா.பெப்.16

மன்னார் மடுப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஆலயம் மற்றும் விளையாட்டுக் கழகத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் நிதி ஒதுக்கீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைக்கான கூரைத்தகடுகள் மற்றும் பெரியபண்டிவிரிச்சான் மேற்கு வள்ளுவர் விளையாட்டுக் கழகத்துக்கான மைதான விளக்குகள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் மடுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஜீவா ஜெயதீசன் மற்றும் மடுப் பிரதேச செயலாளர் ப.ஜெயகரன் மற்றும் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-110)

# மார்ச் முதலாம் திகதி 1,000 ரூபா கிடைக்கும்

## தொண்டமான் அழுத்தம்

கொழும்பு, பெப். 16

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபாவையே வாங்கிக்கொடுக்க முதுகெலும்பற்ற செல்லாக்காசு அரசியல் வாதிகளுக்கு ஆயிரம் ரூபா தொடர்பில் கதைப்பதற்கு எவ்வித அருகதையும் கிடையாது. வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் மார்ச் முதலாம் திகதி முதல் நிச்சயம் ஆயிரம் ரூபா கிடைக்கும்' என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், சமூக வலுவூட்டல் மற்றும், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



கோத்தாபய ராஜபக்ஷ என்பவர் அரசியல்வாதி கிடையாது. அவர் சிறந்த நிர்வாகி. எனவே, அவருக்கு வாக்களித்தால் இலகுவில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதித் தேர்தலின்போது சுட்டிக்காட்டியிருந்தேன். எனினும் 140 ரூபா, 100 ரூபா, இறுதியில் 50 ரூபா என அறிவிப்புகளை மட்டுமே விடுத்து அதனைப் பெற்றுக்கொடுக்காத தரப்பின் வேட்பாளருக்கு வாக்குகளை அள்ளி வழங்கினீர்கள். ஆனால், தேர்தலில் கோத்தாபயவே வெற்றிபெற்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் தோல்வியடைந்திருந்தாலும்கூட, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கோரிக்கையை ஏற்று, சிறுபான்மையின மக்கள் மீதும் மதிப்புள்ளதால் மார்ச் மாதம் முதல் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் ஆயிரம் ரூபாவாக இருக்க வேண்டும் என்ற கட்டளையை ஜனாதிபதி பிறப்பித்தார்.

இதற்கான ஒப்பந்தம் பெப்ரவரி 13ஆம் திகதி கைச்சாத்திடப்படவிருந்தாலும், சில சரத்துகள் தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருந்ததால் அவற்றில் திருத்தம் மேற்கொள்ளுமாறு பணிப்பு விடுத்தேன். இதன்காரணமாகவே நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது. நான் எங்கும் ஓடி ஒளியவில்லை. இந்தியாவில் இருந்து திரும்பிய கையோடு இது தொடர்பில் வானொலி ஊடாக அறிவிப்பு விடுத்தேன். எது எப்படியிருந்தபோதிலும் மார்ச் முதலாம் திகதி முதல் ஆயிரம் ரூபா கிடைப்பது உறுதி - என்றார். (ம)

## மஹா சிவராத்திரி

யாழ்ப்பாணம்,பெப்.16

சண்டிலிப்பாய் ப்ரம்ம வித்யாம்பாள் சமேத சுவேதாரண்யேஸ்வர சிவன் அம்பாள் சகித ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் மஹா சிவராத்திரி விரதம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். முதலாம்காலம் மாலை 6.30 மணி முதல் அடியார்களின் கைகளால் விஷேட திரவிய ஹோமம், இரண்டாம்காலம் இரவு 9 மணி முதல் அடியார்களால் சிவலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சன அபிஷேகம் செய்தல், இரவு 10.30 மணி முதல் லிங்கோற்பவ கால வழிபாடுகள், 108 சுவர்ண புஸ்பஅர்ச்சனை, சுவர்ண புஷ்பம் பிரசாத மாகப் பெற்றுக் கொள்ளலாம், மூன்றாம் காலம் நள்ளிரவு 12.30 மணி முதல் அபிஷேக ஆராதனை, சிவநாம பாராயணம் லிகித ஜபம், நான்காம் காலம் அதிகாலை 4 மணி முதல் சிவன் அம்பாள் அபிஷேக ஆராதனை, சிவலிங்கப்பூசை, விரத சமர்ப்பணம், மங்கள ஆசீர்வாதம், சிவப்பிரசாதம் வழங்கல் என்பன நடைபெறும். சிவனடியார்கள் வருகை தந்து நான்கு கால அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு திருவருள் பெறுமாறு குருமுதல்வர் சிவஸ்ரீ.சு.பா.வாசுதேவக்குருக்கள் கேட்டுள்ளார். (க)

# பொலித்தீனைக் கட்டுப்படுத்த மாற்றீட்டுப் பைகள் அறிமுகம்



சாவகச்சேரி,பெப்.16

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையைக் கட்டுப்படுத்த மாற்றீட்டுப் பைகள் நேற்று சாவகச்சேரியில் அறிமுகப்படுத்தப்பட்டன.

சாவகச்சேரி நகராட்சி மன்றம் கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புகளின் இணையம் மற்றும்அபிவிருத்திக்கான உதவும் நிறுவனம் இலங்கை மையம் ஆகியவை இணைந்து தயாரித்த மாற்றீட்டுப் பைகளே அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் முதலாவது பையை வெளியிட்டு வைத்தார். (ஐ-9)

# இலவச தொழி நுட்ப சேவை

யாழ்ப்பாணம், பெப்.16

சேதன உரங்களை விவசாயத்துறையிலும், வீட்டுத் தோட்டத்திலும் பயன்படுத்துவதற்கான உக்கக்கூடிய கழிவுகளிலிருந்து மண்புழு உரவகைகள் தயாரித்தலுக்கான தொழிநுட்பத்தை இலவசமாகப் பெறமுடியும்.

இந்தத் தொழில் நுட்பத்தைத் தோட்டங்களில் பயன்படுத்துவதுடன் மண்புழு உரவகைகள் தயாரித்தலை தமது சுயதொழிலாக மேற்கொள்ளமுடியும். மேலும் வருமானம் ஈட்டவும் முடியும்.

இதனைப் பருத்தித்துறை பண்டாரி அம்மன் வீதி, தம்பசிட்டி பருத்தித்துறை எனும் முகவரியிலுள்ள விதாதா வள நிலையத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது பற்றிய தகவல்களுக்கு 021 2262288 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகளை மேற்கொள்ளலாம் என பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை அறிவித்துள்ளார். (ந)

# இடர்பாடாகவுள்ளது துணுக்காய் சாவடி

## அகற்ற வேண்டும் என்று உறுப்பினர் வலியுறுத்து

முல்லைத்தீவு, பெப். 16

முல்லைத்தீவு துணுக்காய் சந்தியில் அமைந்துள்ள இராணுவச் சோதனைச்சாவடி அகற்றப்படவேண்டுமென்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச.சுயன்சன் தெரிவித்துள்ளார்.

வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனைகள் இடம்பெறுவதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர்.

துணுக்காய்ச் சந்தியில் உள்ள மூன்று வீதிகளிலும், இராணுவத்தினர் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் துணுக்காய் அக்கராயன் வீதியைப் பயன்படுத்தும் அமைதிபுரம், ஆரோக்கியபுரம், தென்னியங்குளம், கோட்டகட்டி, அம்பலப்பெருமாள், உயிலங்குளம் உள்ளிட்ட இடங்களுக்குரிய பொதுமக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதேவேளை துணுக்காய் வெள்ளாங்குளம் வீதியிலும் இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் மன்னார், கல்விளான் உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்த மக்கள் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

துணுக்காய் மாங்குளம் வீதியிலும் இராணுவத்தினரின் சோதனைகள் இடம்பெறுகின்றன. இதனால் மல்லாவி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லும் மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

விவசாயிகள் அறுவடைசெய்யும் இயந்திரங்களைப் பார ஊர்திகளில் ஏற்றிச்செல்லும்போது சோதனைச் சாவடியில் இறக்கி ஏற்றுவதும் இடர்பாடாகவுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்களும் வழிமறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். இதனால் அவர்கள் பெரும் இடர்பாடுகளுக்கும், அச்சத்துக்கும் ஆளாகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் பலரும் சோதனைச் சாவடிகளால் அச்சமடைகின்றனர்.

வெள்ளாங்குளம் சந்தி மற்றும் மாங்குளம்சந்தி ஆகிய இடங்களிலும் இவ்வாறான சோதனைச் சாவடிகள் இருக்கின்றன.

துணுக்காய்ச் சந்தியில் மூன்று வீதிகளிலும் சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு, இராணுவத்தினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே மக்களை அச்சமடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ள, துணுக்காய் சந்தியில் அமைந்துள்ள சோதனைச்சாவடிகளை அகற்றுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (து-246)

## ஒரு லட்சம் பேருக்கான வேலைவாய்ப்பு

# வடக்கு மாகாணத்தில் 36,000 விண்ணப்பமே!

*யாழ்ப்பாணம்,பெப்.16*

**ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புக்கு, வடக்கு மாகாணத்தில் இருந்து மட்டும் 36 ஆயித்து 461 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.**

இலங்கை முழுவதும் ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு என்ற அடிப்படையில் விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில், ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு 350 பேர் உள்வாங்கப்படவுள்ளனர். அதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் 34 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 11 ஆயிரத்து 900 பேருக்கு நியமனம் கிடைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 771 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 124 பேரும், வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 806 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 354 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 406 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

ஏனைய மாகாணங்களை விட வடக்கின் 5 மாவட்டங்களில் இருந்தே இவ்வாறு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-105)

# புத்தகப் பைகள் கையளிப்பு

வவுனியா,பெப்.16

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் 21 பேருக்குப் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

கல்லூரியின் 132 ஆவது நிறுவுநர் தின நிகழ்வு அண்மையில் அதிபர் க.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது.

உதவிதேவைப்படும் மாணவர்களுக்கு முன்னுரிமைப் பட்டியலில் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

லண்டன் வாழ் ஹரிகரன் துசிதா தம்பதிகள் தமது மகன் ஆரியனின் 4 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு லண்டன் வீ 3 பவுண்டேசன் ஊடாக இந்த உதவியை வழங்கினர். (ஐ-222)





# பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம்

வவுனியா,பெப்.16

புதிய ஆண்டுக்கான முதலாவது வவுனியா பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தர்மபால செனவிரத்தின தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பிரதேசத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக வீட்டுத்திட்டம், மணல் அகழ்வு, வீதி சீரமைப்பு, காணி உறுதிப் பத்திரம் வழங்கல், நெற்கொள்வனவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைப்பாளர் பிறேம், வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரச உயரதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொலிஸார் உட்பட கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-18)

# கோத்தாபய முன்னுதாரணம்

## கூறுகின்றார் சவேந்திர சில்வா

கொழும்பு, பெப்.16

கொரோனா வைரஸ் நாட்டில் பரவாமல் தடுப்பதற்கு ஜனாதிபதி எடுத்த செயற்பாடு உலக நாடுகளுக்கு முன்னுதாரணம் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலால் பாதிக்கப்பட்டுள்ள சீனாவின் வுஹான் நகரில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு தியத்தலாவ இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 33 மாணவர்களையும் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே சவேந்திர சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுமார் இரண்டு வாரகாலம் தியத்தலாவ இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுச் சிறப்பு சிகிச்சைகளுக்கு. இந்த மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர்.

தற்போது அவர்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்தச் செயற்பாடு. இலங்கை இராஜதந்திர ரீதியில் பெற்றுக்கொண்ட மகத்தான வெற்றியாகும். நாட்டுமக்களைக்கருத்தில்கொண்டு செயற்பட்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாகும்-என்றார்.

அதேவேளை, இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளது. இலங்கையின் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அவருடைய கட்டளைப் பொறுப்பு காரணமாக பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற நம்பகத் தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டே இந்தப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)



யாழ்ப்பாணம் வண்.வட மேற்கு ஸ்ரீ விஸ்வலிங்க மஹா கணபதி மூர்த்தி ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் அப்போதைய யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கலந்து சிறப்பித்தார். (ஐ)

# தமிழரை அழித்தோர் இப்போது காப்பாற்றுகிறோம் என வேடம்!

## முன்னாள் வடக்கு அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 16**

**“தமிழர்களாக இருந்துகொண்டு தமிழ்ச் சமூகத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தவர்கள், தமிழர்களிடம் கப்பம் வாங்கியவர்கள் இப்போது தமிழ்ச் சமூகத்தைக் காப்பாற்றப்போகின்றோம் என்று வந்து நிற்கின்றார்கள்” என்று வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

விசுவமடுவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் உள்ள மக்கள் வவுனியாவுக்குச் செல்வதற்குப் பட்ட துன்பம் உங்களுக்குத் தெரியும். அவர்கள் இராணுவத்தினருக்கு அல்ல, வவுனியாவிலுள்ள சில ஆயுதக் குழுக்களுக்கே பயந்தார்கள். அவ்வாறு அட்டூழியம்செய்தவர்கள் இன்று தாங்கள்தான் தமிழ் மக்களைத் தூக்கி வைத்திருக்கும் அவதார புருசர்கள் போல் வந்து நிற்கின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் 18,20 வயதுடையவர்களும் நிற்கின்றார்கள்.

தமிழர்களை அழித்து காணாமல் போகச் செய்தவர்கள், தமிழர்களிடம் கப்பம் வாங்கியவர்கள் எல்லோரும்தான் இன்று மற்றவர்களைக் குறைசொல்லிக்கொண்டு தாங்கள் என்ன செய்தோம் என்று சொல்லாமல் கூட்டமைப்பு என்ன செய்தது என்று சொல்லிக்கொண்டு மக்கள் மத்தியில் வந்து நிற்கின்றார்கள்.

இவர்களுக்குப் பின்னால் செல்லும் இளைஞர்களைப் பார்க்க மன வேதனையாக இருக்கின்றது. தன்னுடைய சமூகம், தன்னுடைய சகோதரி, தன்னுடைய பெற்றோர்கள் போன்றோர் இத்தகையவர்களால் எவ்வளவுக்குப் பாதிக்கப்பட்டனர் என்று தெரியாத அவர்கள் சில சலுகைகளுக்காக தற்போது அத்தகையவர்களுடன் நிற்கின்றார் கள். இந்தச் சமூகத்தைப் பற்றி அறிந்தவர்கள் கடந்து வந்த பாதையை இளம் சமூகத்துக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

தமிழர்களின் பாரம்பரியங்களை கைவிட்டுவிட்டோம். இவற்றை மாற்றியமைக்கவேண்டும்.-என்றார். (து-19)




# பழையவற்றைக் கிளறி 2 வருடங்கள் வீணடிப்பு

## நகர சபை உறுப்பினர் கவலை

சாவகச்சேரி, பெப். 16

“ஒவ்வோர் அமர்விலும் பழைய விடயங்களைத் திரும்பத் திரும்ப பேசி இரண்டு வருடங்களை வீணடித்து விட்டோம். இனிவரும் காலத்திலாவது ஆக்கபூர்வமாக, மக்களுக்குப் பயன்தரக்கூடிய விடயங்களை முன்னெடுத்துச் சிறந்த சபையாகத் திகழ பாடுபட வேண்டும்.” என்று சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ந. திருக்குமரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையிலான ஆட்சிக் காலத்தில் ஒவ்வோர் அமர்விலும் அடுத்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய கலந்தாய்வு நடைபெறுமே தவிர, தவிசாளர் மற்றும் அலுவலர்களுக்கு எதிராகக் குறைகூறும் எந்தவொரு வார்த்தைகளும் பிரயோகிக்கப்படுவதில்லை. சபையில் எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் செயலாளரின் கடமை. அவருடைய கடமைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் முன்னைய சபையில் எந்தவோர் உரையாடல்களும் இடம் பெறவில்லை. எந்தவொரு அபிவிருத்தியையும் செய்வதற்கு இந்தச் சபை, சபையின் உறுப்பினர்கள் தடையாகத்தான் இருக்கிறார்களே தவிர, ஒத்துழைப்பு வழங்குவதாக கடந்த இரண்டு வருடங்களில் காண வில்லை என்று கூறினார்.

**குற்றம் காண்பது கடமையல்ல**

வீதிகளுக்கு விளக்குப் போடுவதும், வீதிகளைச் சீரமைப்பதும் தவிசாளர் மற்றும் அலுவலர்கள் ஆகியோரில் குற்றம் கண்டுபிடிப்பதும் எமது கடமையல்ல. நாங்கள் (சபை) இல்லாவிட்டாலும் செயலாளர்கள் இந்த வேலைத் திட்டங்களை வருடாவருடம் மேற்கொள்வார்கள். இந்தச் சபையால் மக்கள் பயன்பெறக்கூடியனவாக என்ன முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டோம் என்று ஒவ்வோர் உறுப்பினர்களும் சிந்தித்தால் பூச்சிய நிலையே காணப்படுகிறது.

ஒவ்வோர் உறுப்பினரும் மக்களுக்குச் சேவைசெய்வதை மனதில் நிறுத்தி எதிர்காலத்தில் செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக அமர்வுகளில் கலந்துரையாடி நேரத்தை வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (து-9)

# முதியோருக்கு அடிப்படை வசதிகள்

மூளாய்,பெப்.16

60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சமூகசேவைகள் திணைக்களம் பதிய செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.



யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமூக சேவைபிரிவு அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் அவர்கள் பயன்படுத்தும் கிணறு மற்றும் மலசலகூடம் ஆகியவற்றைத் திருத்தம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டால் அதற்காக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தேவை ஏற்படுபவர்கள் தமது பகுதி பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-121)

# இரு வீதிகளுக்கு விரைவில் காப்பெற்

நவாலி,பெப்.16

நவாலி வடக்கிலும், தெற்கிலுமாக இரு வீதிகள் விரைவில் “காப்பெற்” வீதிகளாகப் புனரமைக்கப்படவுள்ளன. 2016 இல் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில் நவாலியில் உள்ள பின்தங்கிய வீதிகளில் 5 வீதிகளை முதற்கட்டமாகமீள்புனரமைப்புச் செய்துவழங்குமாறு, நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அவசர கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

அதன் பிரகாரம் நவாலி வடக்கில் தலுவில் வீதி (590 மீற்றர்), நவாலி தெற்கில் ராஜராஜேஸ்வரி வீதி (490 மீற்றர்) ஆகிய இரு வீதிகள் காப்பெற் வீதிகளாகப் புனரமைக்கப்படவுள்ளன. (க-50)

# கல்மடு கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு



கல்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு கடற்கரையில் இனந்தெரியாத வயோதிப பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது என்று கல்குடாப் பொலிஸார் தெரிவித்தனர். கடற்கரைக்கு நேற்று முன்தினம் காலை மீனவர்கள் சென்ற போது சடலத்தைக் கண்டனர் என்றும், அதையடுத்து அவர்கள் கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சுமார் 55 முதல் 60 வயது மதிக்கத்தக்கவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் வேறு பகுதியில் இருந்து கல்மடு கடற்கரையில் அலைகள் மூலம் கரையொதுங்கி இருக்கலாம் என்றும், சடலத்தை அடையாளம்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# புனித நகர் வித்தியின் இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம்,பெப்.16

பருத்தித்துறை கற்கோவளம் புனித நகர் தமிழ் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

அதிபர் இ. குகன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறைக் கல்வி வலய தமிழ்ப்பாடப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மகாந்தன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.ஜென்சன் றொனால்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9)



# பெரமுனவுடனான கூட்டணி தொடர்பில் தீர்மானமில்லை

## இராஜாங்க அமைச்சர் விதுர தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.16**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி குறித்து இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப் படவில்லை. அனைத்து தரப்பினரது கோரிக்கைகள் முழுமையாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. கூட்டணியில் பங்குக் கொள்ளும் தரப்பினரது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.**

இவ்வாறு விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி தொடர்பில் வினவிய போது இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடக்கவுள்ள பொதுத் தேர்தலை மையப்படுத்தி பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் கூட்டணியின் ஊடாக குறிப்பிடப்படுகின்றன. சின்னம், இணைத் தலைமைத்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

மொட்டு சின்னத்திலேயே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் போட்டியிட வேண்டும் என்று பொதுஜன பெரமுனவினரும், சின்னத்தை மாற்றி பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என சுதந்திர கட்சியினரும் குறிப்பிட்டுக் கொள்வது கவனத்திற்குரியது.

உத்தேச கூட்டணியை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்படும் கருத்துக்கள்குறிப்பிடப்படுபவர்களின் தனிப்பட்ட கருத்தாகும் அவற்றை கட்சிகளின் உத்தியோகபூர்வ தீர்மானம் என்று குறிப்பிட முடியாது. பல கட்சிகளை ஒன்றுப் படுத்தி கூட்டணி அமைக்கும் போது இறுதியில் தலைமைத்துவத்தின் தீர்மானங்கள் தான் செயற்படுத்தப்படும் - என்றார். (எ)

## சிறு தேயிலைத் தோட்டங்களுக்கான
# உபகரணத் தொகுதிகளில் கோடிக் கணக்கில் மோசடி

பதுளை, பெப். 16

"சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கென, கடந்த அரசு பெற்ற உபகரணத் தொகுதிகளில், கோடிக் கணக்கான ரூபா நிதி மோசடி இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. 'தேசக்தி' அறக்கட்டளை நிதியத்திலும் ஊழல், மோசடிகள் இடம் பெற்றிருக்கின்றன. இது விடயத்தில் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பதுளை அஞ்சல் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தியைமேம்படுத்தும் பொருட்டிலான நிகழ்வில் உரை யாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் சிறு தேயிலைத் தோட்டங்கள், தேயிலை உற்பத்தியில் சாதனைகளை படைத்த வண்ணமுள்ளன. தற்போது அத்தகைய வளர்ச்சி காணப்பட்ட போதிலும், இன்னும் ஐந்து, ஆறு வருடங்களில் இந்த வளர்ச்சியை காண முடியாது.

தேயிலைத் தொழிற்றுறை மூலமே ஒருகாலத்தில் இந்த நாட்டுக்குப் பெருமளவில் அந்நியச் செலாவணி கிடைத்துவந்தது. தற்போது அது போன்ற ஆரோக்கிய சூழல் இல்லை. பெரும்நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

**'கட்டுப்பொல்'**

தேயிலைக்கு மாற்றீடாக 'கட்டுப்பொல்' என்ற பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு இடம்பெறுகின்றது. ஆனால், 'கட்டுப்பொல்' அபிவிருத்தியைத் தடை செய்யவும், துரித செயற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**63 தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன**

பெருந்தோட்டங்களை, 23 கம்பனிகள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றன. ஆனால், பெருந்தோட்டங்கள் முறையான பராமரிப்பின்றி, காடாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தேயிலைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு வருகின்றன. இதுவரையில் 63 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இன்னும் 50 தொழிற்சாலைகள் இயங்க வைக்க முடியாமல், மூடும் தறுவாயிலுள்ளன. தேயிலை உற்பத்தியிலும் பெரு வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால், தேயிலைத் தரத்திலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டங்களை மீண்டும் இயங்க வைக்கவும், மூடப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளை மீளத் திறக்கவும் ஏற்பாடு மேற்கொள்வோம். இது விடயத்தில் குறிப்பிட்ட பெருந் தோட்டங்களைப் பொறுப்பேற்றிருக்கும் கம்பனிகளுடன் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். பேச்சுக்குதோட்டக்கம்பனிகள் இணக்கம் தெரிவிக்காது விட்டால், அவர்கள் அரசுடன் செய்து கொண்டுள்ள குத்தகை ஒப்பந்தத்தையும் மறுபரிசீலனை செய்யவேண்டி ஏற்படும். - என்றார். (து)

# வேட்புமனுத் தாக்கல்



மன்னார்,பெப்.16


இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் நாவற்குழி அன்னை இளைஞர் கழக தலைவரால் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இளைஞர் நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் இவர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்தார். (ஜ-159)




யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால், மாணவர்களினுடைய கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தும் முகமாக, நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்குப் போட்டோக் கொப்பி இயந்திரம் கையளிக்கப்பட்டது. (க-222)

## உருளைக்கிழங்கு அறுவடை
# 3,600 மெ.தொன் இம்முறை எதிர்பார்ப்பு



யாழ்ப்பாணம்,பெப் 16

யாழ். மாவட்டத்தில் இந்த முறை 3 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு அறுவடையாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக விவசாய பிரிவினர் தெரிவித்தனர். கடந்த வருடத்தை விட, இந்த வருடம் அதிக நிலப்பரப்பில் உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரை மானிய விலையில் விதை உருளைகிழங்கு வழங்கப்படுவதால், விவசாயிகள் இந்தச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு பெட்டி விதை உருளைக்கிழங்கு அரை மானிய விலையில் 7 ஆயிரம் ரூபா வீதம் சுமார் ஆயிரத்து 200 விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் மூலம் 240 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இம்முறை அதிகளவான விதை உருளைக்கிழங்கு உடுவில்,கோப்பாய் ,சண்டிலிப்பாய்,தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்கே வழங்கப்பட்டது. தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனால் 3 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு அறுவடையாக எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடம் சுமார் 2 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விளைச்சலாக அறுவடை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)

# மடிக்கணினி அன்பளிப்பு

ஜேர்மனியில் இயங்கும் உதவும் இதயங்கள் நிறுவனத்தால் சாதனை மாணவி றோகிதாவுக்கு மடிக் கணினி அண்மையில் வழங்கப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த இந்த மாணவி இரத்த வகை, நீரழிவு நோய் ஆகியவற்றை கண்டறிவதற்கான தானியங்கி றோபோவை கண்டுபிடித்து சாதனை படைத்திருந்தார். இவரது சாதனையைப் பாராட்டி பிரான்ஸில் வசிக்கும் திருமதி மகேஸ்வரி ரவீந்திரன் 93 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினியை அன்பளிப்புச் செய்துள்ளார். இந்த உதவியை அமைப்பின் செயற்பாட்டாளர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர். (ஜ-159)



சூரியகாந்தி
உதயன்
16.02.2020
ஞாயிறு சிறப்பம்சம்




# போராட்டங்களை தனிமைப்படுத்தும் சதிகள்!

சந்திரசேகர ஆசாத்

அண்மையில்காணாமல்போனோர் தொடர்பான அலு வலகம் விடுத்த அறிக்கை ஒன்றில், இதுவரை இலங்கை அரசிடம் காணாமல்போனோர் தொடர்பான உத்தியோகபூர்வமான பட்டியல் எதுவும் இல்லை எனவும் தாங்கள் தங்களுக் குக் கிடைத்த முறைப்பாடு களில் இருந்து மாவட்டச் செயலகங்களில் பெறப்பட்ட தகவல் களைக் கொண்டும் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைக் குழுக்களில் மேற்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் அடிப்ப டையிலும் ஒரு தற்காலிக பட்டியலைத் தயா ரித்திருப்பதாகவும் அதை உறுதி செய்யவும் அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களின் உதவியைக் கோரியிருந் தது. மேற்படி உறுப்பினர்களை தொலைபேசி மூலமோ நேரிலோ தொடர்பு கொண்டு இந்தப் பணிக்கு உதவும்படியும் அவ்வமைப்புக் கேட் டுக் கொண்டிருந்தது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த காணாமல் போனோரின் உறவுகளின் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டத் தலைவி தாங்கள் விசாரணைக் குழுக்கள், மாவட்டச் செயலகங்கள் எனப் பல இடங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பதிவு கள் மேற்கொண்டுள்ளோம் என்றும் அவற் றின் மூலம் எவ்வித பயனும் கிட்டவில்லை என்றும் எனவே இந்தக் கோரிக்கையை நிராகரிப்பதாகவும் கூறியிருந்தார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக அவர் களின் உறவுகள் நடத்தும் போராட்டம் ஆயி ரம் நாள்களை, பல வருடங்களைத் தாண்டி யுள்ள நிலையிலும் எந்தவிதமான சாதக மான நிலைமையும் தென்படாத நிலையில் காணாமற் போனோரின் உறவுகள் அரச தரப்பினர் மீது முற்றாகவே நம் பிக்கை யி ழப்பது தவிர்க்க முடியாத தாகும். எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமா கவுள்ள நிலையில் காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்தின் இந்த அறிவிப்பு சர்வதேசத்தை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என அவர்கள் கருதினாலும்கூட அதையும் தவறென்று சொல்லிவிட முடியாது.



### நிராகரிப்புச் சரியானதா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு அமைவாகவே காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் இலங்கை அரசால் அமைக்கப்பட்டது. இந்த அலுவலகம் அமைக்க அதற்கான ஆணைக்குழுவை அமைப்பதில் இருந்து அலுவலகத்துக்குக் கட்டடம் தேடுவது வரை பெரும் திட்டமிட்ட இழுபறிகளின் மத்தியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுகள் பல கடந்தும் 34ஆவது கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் நிலையிலும் இதுவரை காணாமற் போனோர் தொடர்பான முழுமையடையாத தற்காலிகப் பட்டியலொன்றைத் தயாரித்ததைவிட வேறெதையும் உருப்படியாகச் செய்யவில்லை. போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது இலங்கை அரசைப் பொறுத்தவரையிலும் கூட விதிவிலக்கானதல்ல. இந்த நிலையில் காணாமற்போனோரின் அலுவலகத்தின் கோரிக்கையைப் புறந்தள்ளுவது என அவர்களின் உறவினர்களின் அமைப்பு எடுத்த முடிவு இலங்கை அரசின் மீதான நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடு என்பது மறுக்க முடியாத விடயமாகும்.

அதேவேளையில் எந்தவொரு சாதகமான விடயங்களையும் மனம் விரும்பிச் செய்ய தயாரற்ற இலங்கை அரசு சில சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாக ஒரு சில விடயங்களைச் செய்ய முயலும் போது அதை நிராகரிப்பது சரியா? என்றொரு கேள்வியும் எழத்தான் செய்கிறது. காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள சர்வதேச மன்றத்தின் தீர்மானத்தின் பேரில் அமைக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனம்தான் காணாமற்போனோர் அலுவலகம்.

நாம் அந்த ஒரேயொரு மார்க்கத்தையும் நிராகரிப்பதா? அல்லது அது மேற்கொள்ளும் எமக்குச் சாதகமான விடயங்களுக்கு ஒத்துழைத்து பணியாற்றி அதன் வழியாக அழுத்தங்களைக் கொடுத்து எம்மை ஏமாற்ற மேற்கொள்ளக்கூடிய முயற்சிகளை முறியடிப்பது அல்லது பலவீனப்படுத்துவதா? எம் முன்னால் உள்ள சரியான பாதை என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எந்தவொரு விடயத்திலும் எமக்குச் சாதகமான பகுதிகளை இறுகப்பற்றி பாதகமான பகுதிகளைக் களைய முனைவதே வெற்றியை நோக்கி நகரக் கூடிய தந்திரோபாயமாகும். அதைவிடுத்து நூறுவீதம் சரியானவற்றை மட்டும் ஏற்போம். ஏனையவற்றை நிராகரிப் போம் என்ற போக்கு இறுதியில் இலவுகாத்த கிளியின் நிலைக்கே எம்மைத் தள்ளிவிடும்.

### பேசு பொருளானது சரா எம்.பியின் உரை

இதேபோன்ற இன்னுமொரு விடயமாக காணாமற்போனோர் தொடர்பான அமைப்பின் தலைவி சுதந்தினி வெளியிட்ட கருத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காணாமற்போனோர் என எவருமில்லை எனவும் அவர்கள் இறந்திருக்கலாம் எனவும் அவர்கள் புலிகளால் கடத்தப்பட்டவர்கள் எனவும் தெரிவித்திருந்தார். அமைச்சர் விமல் வீரவன்சவும் அதேகருத்தை வெளியிட்டதுடன் காணாமற்போனோரை மண்ணுக்குள் தான் தேட வேண்டும் எனவும் கூறியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி, விமல் வீரவன்ச ஆகியோர் திமிர்த்தனமானதும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உணர்வுகளையும் வேதனைகளையும் தவிப்பையும் துச்சமாக மதித்து கீழ்மைப்படுத்தியமையையும் உண்மையாகக் கண்டித்திருந்தார். அது மட்டுமன்றி காணாமற் போனோர் இறந்து விட்டார்கள் என்றும் மண்ணுக்குள்தான் தேடவேண்டும் எனவும் விமல் உறுதியாகக் கூறும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கொன்று புதைத்தவர்கள் யாரென்று விமல் வீரவன்சவுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லது அந்தக் கொடுமையில் விமலும் பங்காளியாக இருக்க வேண்டும் எனவும் அடித்துக் கூறினார். அவரின் உரை காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தையிட்டு அலட்சியமான கருத்தை வெளியிடுபவர்களுக்குத் தலையிடியாக அமைந்திருந்தது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் உரை முதுகெலும்பற்றவரின் கோழைத்தனமான உரையெனவும் த.தே.கூட்டமைப்பினருக்கு காணாமலாக்கப்பட்டோர் பற்றிக் கதைக்க உரிமை இல்லை எனவும் காணாமற்போனோர் விவகாரம் தீர்க்கப்படாமைக்கு கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுமே காரணம் எனவும் காணாமற் போனோர் தொடர்பான ராஜபக்ஷாக்களை மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பதில்சொல்ல வேண்டியவர்களே என காணாமற்போனோர் அமைப்பின் தலைவியான சுகந்தினி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார். காணாமற் போனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட ஆதரவு வழங்கிமையே காரணம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.



வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உணர்வுகள், தவிப்புக்கள், வேதனைகள், துன்பதுயரங்கள் என்பன சாதாரணமானவையல்ல. அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியதும் அவர்களின் தொடர் போராட்டங்களுக்கு அர்ப்பணிப்புடனான ஆதரவையும் பங்களிப்பையும் வழங்க வேண்டியதும் எமது மண்ணில் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



### அனைவருக்கும் பொறுப்புண்டு

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உணர்வுகள், தவிப்புக்கள், வேதனைகள், துன்பதுயரங்கள் என்பன சாதாரணமானவையல்ல. அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டியதும் அவர்களின் தொடர் போராட்டங்களுக்கு அர்ப்பணிப்புடனான ஆதரவையும் பங்களிப்பையும் வழங்க வேண்டியதும் எமது மண்ணில் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும். காணாமற்போனோருக்காகக் குரல் கொடுப்பதோ போராடுவதோ அவர்களின் உறவுகளுக்கு மட்டுமேயான உரிமை என எவரும் வலியுறுத்துவார்களாயின் அவர்கள் இந்தப் போராட்டத்தை தெரிந்தோ தெரியாமலோ பலவீனப்படுத்துகிறார்கள் என்றே அர்த்தமாகும்.

நல்லிணக்க ஆணைக்குழு காணாமற்போனோர் விவகாரம் தொடர்பான பரணகம ஆணைக்குழு என்பனவற்றின் விசாரணையின்போது சாட்சியளித்த காணாமற் போனோரின் உறவுகளின் சாட்சியங்களின்படி அரச படையினர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், துணை இராணுவக் குழுக்கள், கருணா குழுவினர், பிள்ளையான் குழுவினர் ஆகியோர் மீதே குற்றம் சாட்டப்பட்டது. போர் முடிவடைந்த நாளில் வட்டுவாகலில் வைத்து காணாமற் போனோரின் உறவுகள் இராணுவத்தினரிடமே தங்கள் பிள்ளைகளையோ கணவன்மாரையோ ஒப்படைத்தனர்.

எனவே இந்த அனைத்துச்சக்திகளுக்கும் எதிராகப் போராடுவது நியாயமானது மட்டுமல்ல அவசியமானதும் கூட. அதேவேளையில் இவர்கள் அனைவருமே அரசின் அனுசரணையுடனே காணாமலாக்கும் விவகாரங்களை மேற்கொண்டனர் என்ற வகையில் போராட்டம் அரசுக்கு எதிராக நடத்தப்படுவதும் முக்கியமே.

ஆனால் இந்தப் போராட்டத்தை ஒரு சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக திருப்புவது இந்தப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்பது ஒரு புறமிருக்க உண்மையான குற்றவாளிகளைத் தப்பவைக்க மேற்கொள்ளப்படும் ஒரு மறைமுக முயற்சியா எனவும் கேட்கத் தோன்றுகிறது.

காணாமற்போனோரின் போராட்டத்தை மழுங்கடிக்கவும் திசை திருப்பவும் சில உளவு சக்திகள் காணாமற் போனோரின் உறவுகளின் அமைப்புகளுக்குள் ஊடுருவி திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்க முடியாததாகும்.

### கூட்டமைப்பின் நியாயப்பாடு

காணாமற்போனோர் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கியமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியமையைக் குற்றம் சொல்பவர்களும் சில விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் மேற்கொண்ட தந்திரோபாய நகர்வுகள் மூலமே இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியது. அத்தீர்மானத்துக்கமையவே காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. அதுதான் தீர்வு அல்ல என்ற போதிலும் அதன் அடிப்படையில் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். அதை நிறைவேற்ற கால அவகாசம் கொடுக்காவிட்டால் அதன் அர்த்தம் அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை மூடி விடுவதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம் எ்ள்ற வகையில் செயற்படமுடியாது. மக்களுக்கு தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆயுதபலமற்ற ஒரு சிறுபான்மையினராகிய நாம் எதிரிகளுக்கு இடையேயுள்ள முரண்பாடுக ளைப் பயன்படுத்துவது பொது எதிரிக்கெதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய சக்திகளை ஐக்கியப்படுத்துவது பெரிய விடயங்களைப் பெற சிறிய விடயங்களை விட்டுக் கொடுப்பது போன்ற தந்திரோபாய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதாயுள்ளது என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

காணாமற் போனோரின் உறவுகளின் அமைப்பைச் சேர்ந்த எமது மக்களுக்கு நாம் ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறோம். எவ்வாறு சர்வதேச வல்லரசுகளும் இந்தியாவும் இலங்கை அரசுக்கு ஆளணி, ஆயுத, புலனாய்வுத்தகவல்கள் போன்றவற்றை வழங்கியும் போராளிகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தியும் எமது விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்தனவோ அவ்வாறே காணாமற் போனோர் தொடர்பான போராட்டங்களை மழுக்கடிக்கவும் திசைதிருப்பவும் அமைப்புகளிடையே பிளவை ஏற்படுத்துவதும் அந்நிய உளவுநிறுவனங்களும் அரச புலனாய்வு முகவர்களும் தந்திரமான செயற்பாடுகளை மேற்கொள்வார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் காணாமற் போனோர் அமைப்புகளுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதும் இந்தச் சதியின் ஒரு பகுதியே. அதேபோன்று காணாமற் போனோர் அலுவலகம் போன்ற அமைப்புகளை முடிந்தளவு எமக்குச் சாதகமாகப் பாவிப்பதை நிராகரிப்பதும் நிச்சயமாக நல்ல நோக்கம் கொண்டதாக இருக்க முடியாது.

எனவே காணாமற் போனோர் தொடர்பான போராட்ட அமைப்புக்கள் இவர்களின் போராட்டத்தைத் திசை திருப்பி மழுங்கடித்தும் ஆதரவு சக்திகளுடன் முரண்பட வைத்துத் தனிமைப்படுத்தியும் அமைப்புக்களை துண்டு துண்டாக உடைத்துப் பலவீனப்படுத்தியும் சதி வேலைகளில் ஈடுபடும் நாசகார சக்திகளுக்கு எதிராக எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் என்பது எமது உரிமைப் போராட்டத்தின் ஒரு பகுதி என்பதைச் சகல தரப்பினரும் உணர்ந்து கொண்டு அதற்கேற்ற வகையில் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அபிலாசையாகும்.

# கொரோனாவின் மறுபக்கம்

## திகைக்கவைக்கும் சீனர்களின் உணவுப் பழக்கம்



உணவுக் கலாசாரம் நாட்டுக்கு நாடு மாறுபடுகிறது. ஒவ்வொரு நாட்டு மக்களும் அவரவர் நாட்டு சீதோஷ்ண நிலைக்கு தக்படியான, அவர்களின் உழைப்புக்கு தக்கபடியான உணவை உண்ணுகிறார்கள்.

பெரும்பாலும் அவர்களது உணவுகள் அந்த நாட்டில் விளைவதாகவே இருக்கும். கடல், ஏரி, குளங்கள் போன்று அந்த நாட்டு நீர்நிலைகள் வழங்கும் உணவாகவும் இருக்கும். நாம் 'உணவே மருந்து' என்று நமது நாட்டு உணவுப் பொருள்களுக்கு சிறப்பிடம் தருவதுபோல், எல்லா நாட்டினருமே அவரவர் நாட்டு உணவுகளை மிகச் சிறந்ததாகச் சொல்வார்கள். அது பொய்யில்லை. அனைத்து நாட்டு உணவுகளுமே ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டவைதான். அதுபோல் சீனர்களின் உணவும் பிரசித்திப்பெற்றதுதான். உலகில் உள்ள சிறந்தவைகளை தேர்ந்தெடுத்து அதை தங்கள் நாட்டு உணவுக்கலாசாரமாக மாற்றிக்கொண்ட பெருமை அவர்களுக்கு உண்டு.

இராணுவ வல்லரசாக சீனா இருக்கிறது. பொருளாதார வல்லரசாகவும் திகழ்கிறது. உலகமே அவர்களிடமிருந்து பொருள்களை வாங்கிக்கொண்டிருக்கிறது. உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவரும் அங்கே இருக்கிறது. அந்த வியப்போடு, 'உலகம் முழுக்க உள்ள எல்லா உணவுகளும் அங்கே எல்லா இடங்களிலும் கிடைக்கும்' என்று நினைத்துக்கொண்டிருந்தால், சீனாவில் நமது வயிற்றை காயப்போட வேண்டியதாயிருக்கும்.

பீஜிங்கில் போய் இறங்கி பிரெட், சாண்ட்விச், வாழைப்பழத்தை வாங்கி சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளலாம் என்று நினைத்தால், அது தவறாகிவிடும். அங்கு கிட்டத்தட்ட அனைத்து உணவுகளுமே அசைவம். நாம் பாசத்தோடு வளர்ப்பதும், பார்த்த உடன் மரண பயத்தோடு ஓடுவதும் கூட அங்கே உணவாகிவிடும். அதை அவர்கள் சுவைத்து ருசிப்பார்கள். இந்தியாவை போன்று அங்கும் அரிசியின் பயன்பாடும் அதிகம்தான். ஆனால் அது அடுப்பில் வேகும்வரைதான் நம்ம ஊர் சாதம். வெந்து முடிந்ததும் அந்த நாட்டில் உள்ள ஊர்வன, பறப்பன, நடப்பன எல்லாம் இணைந்துவிடும். அதனால் அரிசிச்சாதமும் அங்கே அடையாளம் மாறிவிடும்.


### நாமும் சீனர்களும்

அவர்கள் உயிருள்ளவைகளில் பலவற்றை உணவாக்கிவிடுகிறார்கள். நாம் கோழி இறைச்சியில் பத்துவகை உணவுகள் தயாரிப்போம். ஆட்டிறைச்சியில் பத்துவகை செய்வோம். அந்த 20 வகைகளையும் ஒரே இலையில்வைத்து விதவிதமாய் சுவைப்போம். சீனர்கள் உயிருள்ள 20 வகைகளைத் தனித்தனியாக சமைத்து, வரிசையாக அடுக்கிவைத்து உண்பார்கள். ஆனால் அவை அனைத்துமே வெந்திருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. அங்கு விடுதிகளுக்குக் குறைவில்லை. பெரும்பாலும் எல்லா நகரங்களிலும் பிரமாண்டமான விடுதிகள் இருக்கின்றன. விடுதி மேசைகளுடன் இணைந்தவாறு நீராவி அடுப்புகள் இருக்கும் அதில் நீர் கொதித்துக்கொண்டிருக்கும். இலைகள், தழைகள், காய்கறிகள், காளான்களை வகை வகையாக தருவார்கள். பிடித்ததை தேர்ந்தெடுத்து கொதிக்கும் நீரில் போட்டு, தேவைப்பட்டால் அருகில் இருக்கும் மசாலாக்களை சேர்த்து சுவைக்கவேண்டியதுதான்.

இப்போது உலகம் முழுக்க பேசும் விஷயமாக இருப்பது கொரோனா வைரஸ். தங்கள் நாட்டு வூஹான் நகருக்கு சீன அரசே 'சீல்' வைத்தது என்றால், உலக நாடுகள் பலவும் சீனாவுக்கு 'சீல்' வைக்கும் அளவுக்கு ஒவ்வொரு நாட்டையும் இந்த வைரஸ் பயம் தொற்றிக்கொண்டிருக்கிறது. பாதிப்பும், இறப்பு எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எங்கே இருந்து இந்த வைரஸ் வந்தது என்பதற்கு பல கதைகளை சொல்கிறார்கள். அதில் ஒன்று 'வைரஸ் பாதித்த வௌவால் ஒன்றை பாம்பு தின்றுவிட்டது. அந்தப் பாம்பை மனிதர்கள் உணவாக்கினார்கள். அதனால் பலருக்கும் தொற்றிக்கொண்டது' என்பதும் ஒன்று. இந்த கதை (!) சீனர்களின் உணவுப் பழக்கத்தில் கை வைப்பதாக இருக்கிறது.

வௌவால், பாம்பு இரண்டுமே சீனாவில் உணவாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளாக அங்கு வவ்வால்களை வறுத்தும், பொரித்தும், அவித்தும் அதிக அளவில் மக்கள் சாப்பிட்டார்கள். அதனால் நாம் வீடுகளில் நாட்டுகோழியை வளர்த்து உணவாக்குவதுபோல், சீனாவில் வீடுகளிலும் குறிப்பிட்ட இன வௌவால்களை வளர்க்கத் தொடங்கினார்கள். நிறையபேர் அதனை வீடுகளில் வளர்த்து வெளி இடங்களிலும், அசைவ உணவுச் சந்தைகளிலும் விற்று பணம் சம்பாதித்தார்கள். அதனால் சீன மக்கள் விரும்பிச் சாப்பிடும் உணவுப் பட்டியலில் வௌவால் இனமும் சேர்ந்துகொண்டது.

நாம் வூஹான் நகர வீதிகளில் இருக்கும் பெரிய ஹோட்டல்களுக்குள் நுழைந்தால் அங்கே நீர் நிறைந்த பெரிய கண்ணாடி தொட்டிகள் இருக்கும். அதன் உள்ளே விதவிதமான மீன்கள் நீந்திக் கொண்டிருக்கும். 'உங்களுக்கு பிடித்த மீனை நீங்களே தேர்வு செய்யுங்கள்' என்பார்கள். சுட்டிக்காட்டியதை, சில நிமிடங்களில் பொரித்து தட்டில் வைத்துவிடுவார்கள். இது பார்க்க ஆனந்தமாக இருக்கும். சாப்பிட்டு பார்க்கவும்



நாம் முயற்சிப்போம். அடுத்த கூண்டுக்குள் பாம்புகள் நெளிந்து கொண்டிருக்கும். அதை ஆர்வத்தோடு சீனர்கள் சுட்டிக்காட்டுவார்கள்.

சிறிது நேரத்தில் அதுவும் அவர்களுக்கு சுவையான உணவு பதார்த்தமாகி விடும். தவளை, நத்தை, வெட்டுக்கிளி, பூரான், பல்லி போன்றவைகளும் வாடிக்கையாளர்களை எதிர்பார்த்து கறியாவதற்காகக் காத்திருக்கும்.

### அன்று 'சார்ஸ்' இன்று கொரோனா

பூனை உணவும் அங்கு அதிக அளவில் விற்பனையாகும். 'சார்ஸ்' வைரஸ் சீனாவை தாக்கியபோது பூனைக் கறிக்கு தடை போட்டிருந்தார்கள். கொஞ்ச நாள்களில் மீண்டும் அதை சாப்பிடத் தொடங்கிவிட்டார்கள். நமது ஊரில் முயல்களை கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பார்கள்.

நாம் கேட்டால் கொன்று, உரித்து கறியாக்கி பொட்டலம் போட்டு தருவார்கள். அதுபோல் சீனாவில் கருங்குரங்குகளை கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பார்கள். அவைகளை கொன்று சுடச்சுட 'சூப்' தயாரித்து கொடுப்பார்கள். அதை சீனர்கள் விரும்பிப் பருகுவதுண்டு. இங்கே சூப் பருகிவிட்டு, பிரதான உணவை உண்பது வழக்கம். அங்கே பிரதான உணவை சாப்பிட்டுவிட்டு கடைசியாக சூப் பருகுவார்கள். அதில் நத்தை சூப்புக்கும் பெரும் வரவேற்பு உண்டு. கடல் உணவை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒக்டோபஸ், திமிங்கலம் போன்றவைகளையும் ருசிப்பார்கள்.

எல்லா உணவுகளுமே இயற்கையின் படைப்புகள்தான். எந்த உணவிலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அவரவர்களுக்கு பிடித்ததை உண்கிறார்கள். அதை விமர்சிப்பது சரியில்லை. சீனர்களின் உணவில் அடுத்த நாட்டினர் தங்களுக்கு பிடிக்காததையே பெரும்பாலும் விமர்சிக்கிறார்கள். ஆனால் சத்துக்கும், ஆரோக்கியத்துக்கும், சுவைக்கும் பெயர்பெற்ற பிரபலமான உணவுகளும் சீனாவில் நிறைய இருக்கின்றன. நாம் அங்கு செல்லும்போது, நம்மாலும் அதை தேடிப் பிடித்து சுவைக்க முடியும். பொதுவாகவே கொரோனா போன்ற வைரஸ்கள் உருவாகி, மரணத்தை உருவாக்கும்போது முதலில் அங்குள்ள உணவுகள்தான் விமர்சனத்திற்குள்ளாகின்றன. இது உலக நாடுகளுக்கு ஒரு பாடம். உண்ணும் உணவில் எல்லோருமே எப்போதுமே விழிப்புடன் இருக்கவேண்டும். 2003இல் 'சார்ஸ்' தாக்கிய போது, 'இனி சீனா அவ்வளவுதான்' என்றார்கள். உலகம் அப்படி சொன்னபோது சீன நாடே வெறிச்சோடிப் போயிருந்தது. இப்போதும் அது போன்ற நெருக்கடி நிலைதான் சீனாவில் ஏற்பட்டிருக்கிறது. அன்று மீண்டதுபோல் இன்றும் சீனா மீண்டுவிடும்! அதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும் நாம் எப்போதும் உண்ணும் உணவில் கவனமாக இருப்போம். உணவு சுவையோடு மருந்தாகவேண்டும். அது கொல்லும் விஷமாகி விடக்கூடாது.





ந.லோகதயாளன்

# நா.வேதநாயகன்

## காலத்தின் தேவையறிந்து பணிபுரிந்தவர்




29 ஆண்டுகால அரச சேவை நாயகனாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் அளவெட்டியை சேர்ந்த நா.வேதநாயகன் ஆற்றிய அரச பணிக்காலம் என்பது கரடுமுரடான பாதையைக் கொண்டது. ஆரம்பம் முதல் இறுதி வரையுமே போர்க்களத்தில் பணியாற்றிய நிலையில் இந்த அரசினால் இன்று தூக்கியெறியப்பட்டுள்ளார்.

தனது ஆரம்பக் கல்வியை தரம் 3 வரை அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் மேற்கொண்ட அவர் பின்னர் தரம் 8 வரையில் அருணோதயாக் கல்லூரியிலும், ஆண்டு 9 முதல் க.பொ.த உயர்தரம் வரையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் மேற்கொண்ட நிலையில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார். பல்கலைக் கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டப்படிப்பை 1984இல் நிறைவு செய்த அவர் 1985ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

இரு ஆண்டுகள் வரை பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய சமயம் 1986இல் ஆசிரிய சேவையில் இணைந்து 1991 ஆம் ஆண்டு வரை மல்லாவி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார்.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து 1991ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி வரையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பயிற்சியினை நிறைவு செய்தார். இக்காலப் பகுதியில் பொது முகாமைத்துவம் மற்றும் பொதுநிர்வாகத்துறையில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

**போர்க் காலத்தில் அரச சேவைகள்**

பயிற்சிக் காலத்தை நிறைவு செய்து அரச சேவையில் இணைந்து கொண்ட காலம் 2ஆம் கட்ட ஈழப் போர் உச்சம் பெற்றிருந்த காலகட்டமாகும். முதலில் நெடுந்தீவு பிரதேச செயலராக 1991ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

அந்த வேளையில் மண்டைதீவு பாலம் யாழ் கோட்டை மீதான தாக்குதல் காரணமாக முழுமையாக தகர்க்கப்பட்டிருந்தது. அதன் ஊடே பயணிக்க குறுக்காக இரு பனை மரக் குற்றிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்ட நிலையில் துவிச்சக்கர வண்டியில் சென்று குமுதினிப் படகின் மூலம் நெடுந்தீவுக்குப் பயணிக்க வேண்டிய சூழல் நிலவியது. அப்போது ஊர்காவற்றுறையில் அரச படையினர் நிலை கொண்டிருந்தனர். குறிகட்டுவானில் விடுதலைப் புலிகள், நயினாதீவில் கடற்படையினர் சோதனைகளின் பின்பே நெடுந்தீவுக்கு பயணிக்க வேண்டும். இத்தனை நெருக்கடிகளின் ஊடாக பயணித்து நெடுந்தீவில் 5 மாதங்கள் பணியாற்றிய நிலையில் மீண்டும் தீவகம் முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டில் வர சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு அவர் இடம் மாற்றப்பட்டார்.



அதன் பின்பு ஊர்காவற்றுறை பிரதேச செயலராக நியமிக்கப்பட்ட நிலையில் 1993ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார். இதன் பின்னர் 1996 முதல் 2002ஆம் ஆண்டின் முடிவு வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றி பின்னர் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அவ்வாறு மேலதிக செயலாளராக பணியாற்றிய காலத்தில் அப்போதைய மாவட்டச் செயலர் இராசநாயகம் 2007ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் மாவட்டச் செயலாளராக வேதநாயகன் நியமிக்கப்பட்டார்.

2007ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் இறுதி யுத்தம் காரணமாக பல நெருக்கடிகள் இடர்பாடுகள் உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு பணியாற்றி பின்னர் வவுனியா சென்றும் பணியாற்றிய போது இறுதி யுத்த காலத்துச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணையின் பெயரில் 2009 ஜூலை மாதத்தில் அவர் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் விசாரணையோ எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ இல்லாது தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2010 ஜனவரி 19இல் விடுவிக்கப்பட்டு 2010 முதல் அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவ்வாறு அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் மிகவும் நெருக்கடியான காலத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னார் மாவட்டத்துக்கு இடமாற்றப்பட்டார்.

இவ்வாறு மன்னார் மாவட்டத்துக்கு மாற்றப்பட்ட நிலையில் அதே ஆண்டு நவம்பர் மாதம் மீளவும் முல்லைத்தீவுக்கே இடமாற்றம் பெற்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றிய காலத்திலேயே 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளராகப் பதவியேற்றார். இவ்வாறு சேவையாற்றிய ஓர் நிர்வாக அதிகாரி அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டு ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களே இருக்கும் நிலையில் இந்த அரசினால் தூக்கியெறியப்பட்டமை அப்பட்டமான அரசியல் வெளிப்பாடாகும்.

# ஓர் அந்நியனின் சுதந்திர கீதம்

எஸ்.சிவசேகரன்
குடத்தனை


உன் அடிமைக் கோரிக்கைக்கு
செவிசாய்க்காத எனது நிலத்தில்
வீசிவிட்டுப் போனாய்
உனது களை விதைகளை

என் தேசமெங்கும் வேர் பதித்த
உனது களையின் கிளைகளை
நான் ஒவ்வொன்றாக வெட்டிக் கொண்டிருக்கையில்
நீ எழுதி முடித்திருந்தாய்
எனக்கெதிரான அடிமைச் சாசனத்தை

உனது அடிமைச் சாசனத்தில்
நான் ஒரு கள்ளத்தோணி..
நான் ஒரு கலகக்காரன்..
நான் ஒரு தேசத்துரோகி..
நான் ஒரு பயங்கரவாதி..

நீ பரப்பிய களைகளின்
முட்கள் குத்தி நிலமெல்லாம் ஊறிய
எனது குருதியின் வாசனையை முகர்ந்து
போதையேற்றிக் கொண்ட
உனது அகோர முகங்களில்
வழிந்து கொண்டிருந்தது
அழுகிப் போன உனது
புனிதத்தின் நாற்ற நிணம்..

உனது சுயமெனும் வன்மத்தின் ஈற்றில்
நீ அறுத்து மிஞ்சிய
எனது பாதிச் சிறகுகளோடு
பறக்கப் பழகிக் கொண்டிருக்கிறேன்
உனது தேசத்தில் தடை செய்யப்பட்ட
எனது தேசத்தின் சுதந்திரப் பாடலை
இசைத்தபடி...





# 1917

## முதல் உலகப்போரின் சாட்சி!

ஆங்கிலம் அல்லாத பின்னணியிலிருந்து முதன்முறையாகத் தென்கொரியாவிலிருந்து 'பேரசைட்' படம் சிறந்த திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதைப் பெற்றிருக்கிறது. இயக்கம், சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படம், அசல் திரைக் கதைக்காகவும் சேர்த்து நான்கு விருதுகளைப் பெற்றுள்ளது. நுகர்வு மோகத்தின் உச்சத்தில் வர்க்கங்களுக்கு இடையிலான பிரிவினையையும் அதனால் விளையும் மோதல்களையும் சிறந்த அங்கத நாடகமாக ஆக்கிய 'பேரசைட்' படத்துக்குக் கிடைத்த அங்கீகாரம் மகிழ்ச்சியை அளித்தது.

இருப்பினும், சர்வதேச அளவில் அதிக அளவு மனித சேதத்தையும் அழிவையும் உருவாக்கிய முதலாம் உலகப் போரில் அதிகம் பலியானது, அதில் பங்குபெற்ற இளைஞர்களின் களங்கமின்மையும் குழந்தைத் தன்மையும் தான் என்பதைத் தொழில்நுட்ப நேர்த்தியோடு கவித்துவமாகச் சொன்ன திரைப் படம் '1917' ஆகும். 'பேரசைட்' உடன் போட்டியில் இருந்த இத்திரைப்படத்துக்கு ஒளிப்பதிவு, கிராபிக்ஸ், ஒலிக்கலவை ஆகிய மூன்று தொழில்நுட்பப் பிரிவுகளில் மட்டுமே ஒஸ்கார் அளித்தது ஏமாற்றம்தான்.

'அமெரிக்கன் பியூட்டி', 'ஸ்பெக்டெர்' போன்ற புகழ்பெற்ற திரைப்படங்களின் இயக்குநரான சாம் மெண்டிஸின் தாத்தா ஆல்பிரட் மெண்டிஸ் முதல் உலகப் போரில் பங்குபெற்றவர். சேறு சகதியோடு பிணங்களைக் கடந்து ரத்த கோரங்களைப் பார்த்த அனுபவத்தில் அந்தத் தாத்தா வீடு வந்த பிறகும், அடிக்கடி தன் கைகளைக் கழுவிக்கொண்டே இருந்திருக்கிறார். அந்தப் போரின் கசப்பான அனுபவங்கள் அவரை 50 ஆண்டுகளுக்குப் பிறகும் துரத்தியதை சாம் மெண்டிஸ் கதைகளாகக் கேட்டதன் தாக்கமே இந்தப் படம்.

'1917' படத்தின் ஆரம்பக் காட்சியே நீளமான பதுங்கு குழிகள் வழியாக ஒரு செய்தியை எடுத்துக்கொண்டு வடக்கு பிரான்ஸின் இன்னொரு எல்லைக்குச் செல்லும் இரண்டு பிரிட்டிஷ் வீரர்களின் பயணத்திலிருந்துதான் தொடங்குகிறது. நாள் ஏப்ரல் 6, 1917. திரைப்படம் முழுவதுமே ஒரே ஷாட் என்று தோன்றும் வகையில், நாமும் அவர்களுடன் அதே கால அளவில் பயணிக்கும் உணர்வை ஏற்படுத்துகிறது.

ஜேர்மானியர் விரித்த பொறிக்குள், அது பொறியென்று தெரியாமல் நுழையவிருக்கும் 1,600 வீரர்களைக் காப்பாற்றுவதற்கான பயணம் அது. லான்ஸ் கார்ப்போரல்களாகக் குழந்தைத் தன்மை முகத்தில் மிச்சமிருக்கும் ப்ளேக்கும் ஷோபீல்டும் பயணிக்கும் பாதை சாதாரணமானதல்ல. சேறு, கம்பிவலை வேலிகள், கண்ணிவெடிகள், ஆழ்குழிகள், சடலங்கள், அபாயமான சுரங்க வெடிகள் இருக்கும் பாதாள அறைகள், நடுவே குறுக்கிடும் காட்டாறு கொண்ட வழி அது. காப்பாற்றப்படவிருக்கும் 1,600 வீரர்களில் ப்ளேக்கின் அண்ணனும் ஒருவர்.

நூற்றுக்கணக்கில் ஆயுதங்கள், டாங்கிகள் உட்படக் கைவிடப்பட்ட நிலங்கள், படைவீரர்கள் தங்கிய நிலவறைகள், அங்கு அவர்கள் விட்டுச்சென்ற வெடிகுண்டுகளோடு வசிக்கும் எலிகள், பண்ணை வீடுகள், வெட்டவெளிகள் எனப் பாழ்நரகம்போலத் தெரியும் இடங்களின் வழியாக ஒளிப்பதிவாளர் ரோஜர் டீகின்ஸ் வறண்ட சில்லிடலுடன் நம்மைப் பயணிக்க வைக்கிறார்.

திரைப்படம் முழுக்க வெட்டப்பட்ட செர்ரி மரங்கள், ஆற்றின் ஓரங்களில் பூத்திருக்கும் செர்ரிகள் காண்பிக்கப்படுகின்றன. பூத்து, கனிகளாகச் செழிக்க வேண்டிய இளைஞர்களின் பருவம் யுத்தத்தில் தீய்ந்து கருகும் சித்திரமாகச் செர்ரி மலர்கள் காற்றில் பறக்கின்றன. நடுவில் அதிர்ச்சிகளும் அதிசயங்களும் குறுக்கிடுகின்றன. பாழ்பட்ட ஒரு கட்டடத்தின் பாதாள அறையில் ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் நம்பிக்கையென இருட்டில் வெளிச்சத்தைப் போல் எதிர்ப்படுகின்றனர். தன் அண்ணனைக் காப்பாற்றக் கிளம்பும் ப்ளேக், நடுவழியில் ஜேர்மானிய விமானிக்குக் கருணை காண்பித்ததால் கத்திக் குத்துப்பட்டு இறக்கிறான். நண்பனிடம், 'நான் இறக்கிறேனா?'என்று கேட்கிறான்.

இறக்கிறோம் என்று தெரிந்துகொண்டே இறப்பதன் துயரம் அவனது முகத்திலிருந்து நமக்குக் கடத்தப்படுகிறது. இசையும் பின்னணிச் சத்தங்களும் மிகவும் அமைதியாக, ஆனால் தத்ரூபமான தன்மையைத் தருகின்றன. விளையாட்டுத்தனமும் உலகின் மீது நம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டிய பருவத்தில் துப்பாக்கியைச் சுமந்துகொண்டு அறியாத நிலங்களில் நான்கு திசைகளிலும் கண்களை ஊடுருவியபடி பார்க்கும் ஷோபீல்டாக நடித்திருக்கும் மெக்கேயின் கண்களில் அவநம்பிக்கை மெதுவாக வேர்கொள்கிறது.

நடிகர்கள் நடக்கும்போதும், பார்வையாளர்களை நிலத்தில் ஊர்ந்துசெல்ல வைக்கும்போதும் யுத்தத்தை மேலிருந்து காட்டும்போதும் ஒட்டுமொத்தமாக நடக்கும் யுத்தக் குழப்படிகளின் மத்தியிலேயே நம்மை இருத்திவிடுகிறார் இயக்குநர். ஒரு கட்டத்தில், நிலங்களும் கட்டடங்களும் இருண்ட தன்மையை அடைந்து, எதிரிகள் துரத்த நெருப்பில் ஓடும்போது 'பேரோல' ஓவியத் தன்மையைக் காட்சிகள் அடைந்துவிடுகின்றன. இப்படத்தின் காவியத் தன்மைக்கு இசையால் மகுடம் சூட்டியிருப்பவர் தோமஸ் நியூமேன். அடுத்து வரப்போகும் பயங்கரத்தை உணர்த்துகிறது இவரது இசை சங்கேதங்கள். சினிமா என்ற ஊடகத்தின் முழுமையான ஆற்றலையும் பிரம்மாண்டத்தையும் உணர்த்தும் படைப்புகள் ஹாலிவுட்டில் அரிதாகிவிட்டன. கிறிஸ்டோபர் நோலனின் 'டன்கிர்க்' படத்துக்குப் பிறகு, அந்தப் பிரம்மாண்டத்தை உள்ளடக்கத்திலும் தொழில்நுட்பத்திலும் சாதித்த திரைப்படம் '1917'.



அத்தனை அழிவுகள், நஷ்டங்கள், குரூரங்களுக்கு மத்தியில் மனித முயற்சியின் அசாத்தியத் தன்மையை யுத்தம்தான் வெளிக்கொண்டுவருகிறது. சினிமாவின் அதிகபட்ச விளைவு சாதிக்கப்பட்டிருப்பது போர் திரைப்படங்களில்தான். '1917' இன்னும் கூடுதலான அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

# ஜானு



## '96' போல் பேசுபடுமா?

'96' படத்தின் தெலுங்கு ரீமேக் தான் 'ஜானு'. தமிழில் இயக்கிய பிரேம்குமாரே தெலுங்கிலும் இயக்கியிருக்கிறார். விஜய் சேதுபதி கதாபாத்திரத்தில் சர்வானந்த், த்ரிஷா கதாபாத்திரத்தில் சமந்தா, பக்ஸ் கதாபாத்திரத்தில் வெண்ணிலா கிஷோர், ஆடுகளம் முருகதாஸ் கதாபாத்திரத்தில் ரமேஷ், தேவதர்ஷினி கதாபாத்திரத்தில் சரண்யா பிரதீப், கௌரி கிஷன் கதாபாத்திரத்தில் அவரே நடித்துள்ளார். மற்றும் ஆதித்யா பாஸ்கர் கதாபாத்திரத்தில் சாய் கிரண் குமார் ஆகியோர் நடித்துள்ளனர்.



தமிழில் எடுத்த கதையை காட்சிக்கு காட்சி மாற்றாமல் அப்படியே எடுத்துள்ளார் பிரேம்குமார். பள்ளி நண்பர்கள் அனைவரும் மீண்டும் ரீயூனியனில் சந்திக்கிறார்கள். அப்போது சர்வானந்த் பள்ளிக் காலத்தில் காதலித்த சமந்தாவும் வருகிறார். இருவரும் சந்திக்கும் போது என்னவானது, இருவரின் காதல் பிரிவு ஏன் என்பதுதான் கதை.

'96' படத்தில் காதலின் வலியை எப்படி பார்வையாளர்களுக்குக் கடத்தினார்களோ, அதை 'ஜானு' படத்திலும் உணர முடிகிறது. அதுதான் இந்தப் படத்தின் பெரிய வெற்றி என்று சொல்லலாம். சில படங்கள் ரீமேக் பண்ணும்போது அதை தவறவிட்டுவிடுவார்கள். ஆனால், இயக்குநர் பிரேம்குமாரே இதையும் இயக்கியிருப்பதால், அதைக் கச்சிதமாகக் கொண்டு வந்திருக்கிறார். '96' படத்தில் ராம் ஜானு இருவரும் சேருவார்களா என்று இருந்த டென்ஷனை, இந்தப் படத்திலும் க்ளைமாக்ஸ் வரை நீடித்திருப்பது வேறு லெவல்.



# வன்முறை கலாசாரம்

மாணவர்களா இவர்கள் ? ரவுடிகள் , பொறுக்கிகள்" என்று ஓயாமல் ஒப்பாரி வைக்கின்றனர் ஓட்டுக் கட்சிகள். மாணவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று பத்திரிகை தொலைக்காட்சி ஊடகங்களும் அலறுகின்றன. அரசோ, கல்லூரிகளில் பொலிஸை நிறுத்தி மாணவர்களை பீதியூட்டுகிறது. கல்லூரியை கலவரப் பகுதியாகக் காட்டுகிறது.

கல்லூரி மாணவர்களிடையே எப்போதாவது நடைபெறும் மோதல்களை வைத்துத்தான் மாணவர்களை ரவுடிகள்.பொறுக்கிகள் என்று முத்திரை குத்துகிறார்கள். இம்மோதல்களை பொலிஸும் செய்தி ஊடகங்களும் ஊதிப் பெருக்கி வருகின்றன.

கல்லூரி மாணவர்களிடையே நடைபெறும் இந்த மோதல்களால், சில மாணவர்கள் பாதிக்கப்படுகின்றமையும், இதைத் தொடர்ந்து சில மாணவர்கள் சிறையில டைக்கப்பட்டு கல்லூரி வாழ்வை இழக்கின்றமையும் நாம் மறுக்க முடியாது. இந்த நடவடிக்கைகள் மாணவர் ஒற்றுமையை சீர்குலைப்பவையே. இவைகள் சமூக அநீதிகளுக்கு எதிராக வீரம் செரிந்த பல போராட்டங்களை நடத்திய கடந்த கால மாணவர் வரலாற்றை கறைபடுத்துகின்ற செயல்கள். ஏழைக் குடும்பங்களில் பிறந்து பள்ளிப் படிப்பை முடிக்கவே கடன் பட்டு பல கனவுகளுடன் கல்லூரிக்குள் காலெடுத்து வைத்த நாம், 3 வருட டிகிரி முடிக்கும் முன்பே 'ரவுடிகள் ,பொறுக்கிகள்' என்று அவதூறு பட்டங்களை சுமப்பது கேவலமில்லையா? நண்பர்களாகப் பழக வேண்டிய நாம் ரூட்டுகள் - கல்லூரிகள் என்று எதிரிகளைப்போல் அடித்துக் கொள்வது எந்த வகையில் நியாயம்?. எனவே இதை உடனே கைவிடுவோம். நடந்த தவறுகளில் இருந்து பாடம் கற்போம்.



சூழ்நிலைதான் ஒரு மனிதனின் நடவடிக்கையை தீர்மானிக்கிறது என்பது உண்மையென்றால், சீரழிந்த இந்த சமூக சூழலில் ஒரு சிறந்த சமூகப் பற்றுள்ள மாணவன் எப்படி உருவாக முடியும் ? அரசுக் கல்லூரிகளின் சூழ்நிலையும் இப்படித்தான் உள்ளது. ஏழை மாணவர்கள் என்பதற்காகவே, அரசுக் கல்லூரிகளில் குடி நீரும் இல்லை ,கழிவறை வசதியும் இல்லை, கேண்டீனும் இல்லை, போதிய ஆசிரியர்களும் இல்லை, ஆசிரியர் திறனை வளர்க்க அரசு முயலுவதும் இல்லை. மாணவர்களுடைய தனித்திறனை வெளிப்படுத்த விளையாட்டோ, கலாசார விழாவோ ,கவிதை, கட்டுரைப் போட்டிகளோ அறவே இல்லை. இந்த ஜனநாயக உரிமைகளுக்காகப் போராட மாணவர் சங்கத்திற்கும், அதற்கான தேர்தலுக்கும் தடை. இந்த ஆரோக்கியமற்ற சூழ் நிலைக்கு மாணவர்களை தள்ளிவிட்ட இந்த அரசுக்கு அவர்களை ரவுடிகள்.பொறுக்கிகள் என்று கூறுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது ?

போதாக்குறைக்கு சினிமா கூத்தாடிகளும் சீரழிந்த ஊடங்களும் மஞ்சள் பத்திரிகைகளும் 'நோட்டு - புத்தகங்கள் வாங்கவே திண்டாடும் அரசுக் கல்லூரி மாணவர்களிடம் சூர்யாவைப் போல் சிக்ஸ் பேக் காட்டவும் , அதற்கேற்ற புதிய ,புதிய ஜீன்ஸ் ,டி -சர்ட் ,ஷூ போட்டுக் கொண்டு.அந்த நாயகனைப் போன்று பல மாணவிகளை வளைத்துப் போட பந்தா பண்ணும் ஆசையை வளர்க்கின்றன. 'தான் ஆசைப்பட்ட மாணவியிடம்' பிறர் பேசுவது பொறுக்காமல் அடித்துக் கொள்வதும்., மங்காத்தா அஜித், வானம் சிம்பு போன்று குறுக்கு வழியில் பணம் சம்பாதித்து ஜாலியாக வாழ பணம் பறிப்பதையும்(கட்டிங் போடுவது), பல பெண்களோடு சுற்றித்திரியும் 'டேட்டிங் 'எனும் பொறுக்கிப் பண்பாட்டையும் பரப்பி வருகின்றன. நண்பனுக்கு துரோகம் செய்து அவன் காதலியை தன்வசப்படுத்திக் கொள்வது, அடுத்தவன் மனைவியை எப்படியாவது அடைய முயற்சிப்பது என்ற நச்சுப் பண்பாட்டை இதை நியாயப்படுத்தும் ஒரு 'கொலைவெறிப் பண்பாட்டை உருவாக்கி விட்டிருக்கும் தனுசை மானசீக ஹீரோவாக ஏற்றுக் கொண்டு வலம் வர கற்றுத்தருகின்றன.


மேலும் ,புதுப் புது செல்போன்களையும் பைக்குகளையும் காட்டி ஏங்க வைத்து நுகர்வு வெறியை ஊட்டிவருகின்றன. அதோடு, நடிகர் நடிகைகளின் ஆபாச வக்கிர கூத்துக்களையும் இலவச இணைப்பாக கொடுத்து சீரழிவுப் பண்பாட்டுக்கு நிரந்தர அடிமைகளாக்கி வருகிறது, போராடும் குணத்தையும் மழுங்கச்செய்கிறது.

ஓட்டுப் பொறுக்கிகளும் தங்களுக்கான அடியாள்களை உருவாக்குவதற்காக சாராயம், பிரியாணி, தலைக்கு இவ்வளவு ரூபாய் என்று போட்டி போட்டுக் கொண்டு மாணவர்களை விலை பேசுகிறார்கள். இந்த சீரழிவுகளில் சிக்கும் மாணவர்கள்தான் யாருடைய கல்லூரி பெரியது யாருடைய ரூட் பெரியது,மாப் காட்டுவது,வெயிட் காட்டுவது,கெத்துக் காட்டுவது என்று தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்கின்றனர். சமீபத்தில் நடந்த மாநிலக்கல்லூரி மாணவர்களின் மோதல் இதற்கு ஓர் உதாரணம்

மாண்வர்களோ செயல் துடிப்புள்ளவர்கள், பயமறியாதவர்கள், அநியாயத்தை எதிர்த்துப் போராடுபவர்கள் என்பது உலக வரலாறு. நம் நாட்டிலும் அன்று இந்தி திணிப்பை எதிர்த்துப் போராடி வென்றது; ஈழத்தமிழர்கள் மீதான படுகொலைக்கு இந்திய அரசு துணைபோவதை கண்டித்து தமிழக அரசை முடக்கியது; தலைமைச் செயலகத்திற்காக ராணிமேரிக் கல்லூரி இடிக்கப்படவிருந்ததை தடுத்து நிறுத்தியது;இன்று மெட்ரோ ரயிலுக்காக பறிக்கப்படவிருந்த பச்சையப்பன் கல்லூரி இடத்தை மீட்டது போன்ற வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தியவர்கள். இத்தகையப் போர்குணத்தை இந்த அரசும், பொலிஸும் ,அரசியல்வாதிகளும்,சினிமாபத்திரிகை -தொலைக்காட்சி ஊடகங்களும் வளரவிடுமா ? விடாது.

நம்முடைய போர்குணத்தை மழுங்கடிக்கும் ஓட்டுப் பொறுக்கிகளையும் வகுப்புகளுக்குள் புகுந்து சுற்றி வளைத்து தாக்கும் பொலிஸும், நச்சுப் பண்பாட்டைப் பரப்பி சீரழிக்கும் மஞ்சள் பத்திரிகைகளையும்,ஊடகங்களையும் நம்மை நெருங்கவிடாமல் அடித்து விரட்டுவோம். இதற்கு மாணவர்களாகிய நாம் ஒரே வர்க்கமாக அணிதிரள்வோம். ரூட் என்று, கல்லூரி என்று ,ஏரியா என்று மோதிக் கொள்வதை நிறுத்து வோம். நமக்கு எதிரிகள் மாணவர்கள் இல்லை இந்த அரசும் - ஓட்டுப் பொறுக்கிகளும் ஊடகங்களும் தான் என்பதைப் பிரகட னப்படுத்துவோம்.

இவர்களுக்கு எதிராக ஒரு போராட்டக் களத்தை அமைப்போம். இதில் பெற்றோர் ஆசிரியர்களை இணைப்போம் மாணவர்களாகிய நம்மீது திணித்து வரும் ரவுடிகள் பொறுக்கிகள் என்ற அசிங்கத்தை அப்புறப்படுத்துவோம். நம்முடைய பெற்றோர்களின் வாழ்வையும், நமது கல்வி கற்கும் உரிமையையும் பறித்து வரும் 'ஆட்சியாளர்களால் அலங்கரிக்கப்படும்' மறு காலனியாக்கக் கொள்கையை முறியடிப்போம்.



# சூத்திரக் கிணறு

நவீன நீர் இறைக்கும் பம்பிகள் வருவற்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண விவசாயிகளால் தோட்ட நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதற்காக பயன்படுத்தப் பட்ட முறையே சூத்திரம் வளைத்து நீர் இறைக்கும் முறையாகும். உள்ளூர் வளங்களையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி எம்மவர்களால் இம்முறை உருவாக்கப் பட்டது. கப்பி பொறிமுறைகளை பயன்படுத்தி மாட்டின் உதவியுடன் நீரினை இறைத்தனர். பெரிய இரும்பு அச்சுடன் பிணைக்கப்பட்ட மாடுகள் கிணற்றினை சுற்றிவர கப்பிதொகுதிகள் இயங்கி கிணற்றினுள் வாளிகள் இறக்கப் பட்டு அவை நீரிணை அள்ளி வெளியேற்றின.

ஆதிகாலத்தில் பனைஓலைகளால் மிகவும் இறுக்கமாக பின்னப்பட்ட நீர் ஒழுகிவிடமுடியாதவாறான நீர் கோலிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றினை பட்டை என அழைத்தனர். இவை கடகத்தினை போன்ற அமைப்பினை ஒத்தவை. கடகம் நான்கு முனைகளை உடையது இதற்கு ஒரு முனையே காணப்படும். இதன்பின்னர் இரும்பு ஆலைகளின் வளர்ச்சியினை தொடர்ந்து இரும்பிலான வாளிகள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக 20/30 லீற்றர் கொள்ளவுள்ள இருவாளிகளே இப்பொறியில் அதிகமாக பயன்படுத்தப்பட்டுவந்தன. ஆனாலும் சில இடங்களில் 32 வாளிகள் கூட பயன்படுத்தபட்டுள்ளன. இப்பொறியா னது யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் காணப்பட்டா லும் (அளவெட்டி,ஏழாலை,கட்டுவன்,) நீர்வேலிப்பகுதிகளில் இவை அதிகமாக காணப்பட்டன.

நீர்வேலியில் அதிகளவான வாழைத்தோட்டங்கள் உள்ளன என்பதும் இவற்றிக்கு அதிகமான நீர் தேவையென்பதும் குறிப்பிடக்கூடியது. நவீன காலத்தில் அறிமுகமான எரிபொருள்மூலம் இயக்கப்படுகின்ற நீர் பம்பிகள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் நீர் பம்பிகளின்வரவு சூத்திர கிணற்றின் பொறிமுறையினை வழக்கிழக்கச் செய்தது.

ஆனாலும் 1990 - 1995 வரையான காலப்பகுதியில் குடாநாடு தமிழ்போராளி களின் கட்டுப்பாட்டில் இருந்த வேளை வடபகுதியெங்கும் இலங்கையரசால் பொரு ளாதாரத்தடை அமுல்படுத்தப்பட்டிருந்தது. இக்காலத்தில் எரிபொருள்களின் விலை விண்ணைதொட்டிருந்தன. இக்காலப்பகுதியில் விவசாய நீர்பாசன தேவைக்காக சூத்திரக்கிணறுகள் மீள்பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

ஆனாலும் 1995 பின்னர் யாழ் குடாநாடு இலங்கை அரசபடைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததை தொடர்ந்து மீளவும் இவை கைவிடப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணப் பொக்கிசங்களில் ஒன்றாக திகழும் சூத்திரக்கிணறு பொறியானது தற்போது வழக்கொழிந்தாலும் ஆங்காங்கே இதன் எச்சங்களை காணக்கூடியதாக உள்ளது. ஆனாலும் காலச்சக்கரத்தின் வேகத்திற்கு இவ்வெச்சங்கள் எவ்வளவு காலத்திற்கு தாக்குப்பிடிக்கும் என்பது ஐயமே.

எமது குழந்தைகளிற்கும் புலம்பெயர்ந்து அந்நிய தேசத்தில் வாழும் எமது அடுத்த தலைமுறைக்கும் இதனைபற்றி அறியும் வாய்பு இல்லாமல் போய்விடும் என்பது நிதர்சனம். ஏ9 பாதை மீண்டும் திறந்ததையொட்டி பழைய இரும்புகள் குடாநாட்டில் இருந்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன்மூலம் சூத்திரக் கிணற்றின் கப்பிதொகுகளும் ஏற்றுமதி செய்யப்படு கின்றன, செய்யப்பட்டுவிட்டன. எமது பொக்கிசங்களை நாங்களே பணத்திற்காக விற்பது வேதனைக்குரிய விடயமே. இந்த விடயத்தில் யாழ் . பல்கலைக்கழக சமூகம் முன்வந்து இவற்றில் ஒரு பொறியினையாவது வாங்கி பல்கலைக்கழகத்தில் அல்லது யாழ். நூதனசாலையில் வைப்பது அறிவார்ந்த விடயமாகும்.

**சூத்திரக்கிணறு:**

விவசாயத்துக்குத் தேவையான நீர்ப்பாசன முறைக்கு தமிழர்கள் பின்பற்றி சிறந்த தொழில்நுட்ப முறையில் ஒன்றாக சூத்திரக் கிணறு கருதப்படுகின்றது. தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக இதனுடைய எச்சங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. கப்பி ஒன்றில் தொடுக்கப்பட்ட சங்கிலிக் கோர்வையில் வாளி அல்லது பட்டையைப் பயன்படுத்தி மனிதர்களின் அல்லது மாடுகளின் உதவி கொண்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டது.



# அம்மா

அம்மா காற்றில் மிதக்கும் இன்னிசைச்சொல்.

கடவுளின் இன்னொரு பிரதி .
உயிரெனும் பரிணாமத்தின் உச்சம்

உள்ளிருந்தூட்டும் உயிர் .



என் உலகின்
முதல்காட்சி.
முதல் அழைப்பு .
முதல் இசை
முதல் பரிசம்
முதல் அமுதம்
முதல் தெய்வம் அம்மா.

அம்மா
அவள் வற்றாத அன்பின் பெருநதி.
குளிர் மழையின் பெரும் கொடை.


என்கனவுகள் மெய்ப்பட கண்விழிக்கும் கருணை.

காற்றின் தொடுதல் போல்
அருகிருக்கும் பேரன்பு.

விழிகளால் வழி காட்டும் ஒளி.
அன்பின் மொழிகளால்
உயர்வேற்றும் ஏணி.
அன்னை மடி நிம்மதியின் படுக்கை
அவள் வார்த்தை வாழ்வின் பொருள் கூறும் ஞானம்
அவள் தொடுகை பயமறியாக்காவல் .
அவள் ஆசை
என் உயர்வு.
என் கல்வி
என் வாழ்வு ....
நான் என்றால் அம்மா
அம்மா என்றால் அம்மா தான்...

அபிராமி சோதிதாசன்.

# அன்பால் உயர்ந்திடுவோம்....



பெண்ணியம் பேசுகின்றோம்
பல பெண்கள் சீரழிவில்
தடுக்க முடியவில்லை நாங்கள்
சமுதாயம் முன்னேற்றுவோம்.

கையடக்க தொலைபேசியில்
பல கற்புகள் சிதைகின்றன
சுவர்களுக்கு மட்டுமே நீதி
வெளிச்சமாய் தெரிகின்றது.

காமம் தலைக்கேறி கண்களும்
குருடாகி தாயும் தெரியவில்லை
தங்கை முறையும் புரியவில்லை.

பகிடிவதைகள் செய்ய
எந்த பள்ளிக்கூடத்திலும்
பாடமுண்டோ
கற்றலில் பெரியவர் சிறியவர் என்ற
பேதங்கள் கணக்குமுண்டோ.!
கற்றது கையளவு
கல்லாதவை உலகளவு
முன்னோர்கள் சொல்லியும் நாம்
முன்னேற முடியாமல்.

பிழைகள் உணர்ந்திடுவோம்
அன்பால் உயர்ந்திடுவோம்
தொலைபேசி என்பது
உடல் சுகத்திற்கு வேண்டாமே.......

காரையன் (சுதன்) காரைதீவு.

# காவியத்து காதலர்கள்



அழகிய பொழுதுகள்
அந்த நாள்களில் – அவளுடன்
நினைத்து பார்த்தேன்

நிதம் நிதம் – உன் நினைவுகள்
என் நெஞ்சத்தில்
அன்பே!
பள்ளிப்பருவ தோழியாக
பழகிய காலம்
பருவ மங்கையாகி
பக்கத்தில் வந்த என் வானதியே
காதல் மழை பொழிந்தாயே!

சன்னங்கள் விளையாடிய–அந்த
கரையோரம் சல்லாப
காதல் காவியம்.
குண்டுகள்மழைபொழியும்–அந்த
தெருவோரம் தென்றல் பாட்டு
என் தேவதையே – எல்லாம்
ஓர் பொழுதில்
இல்லை என்றாயிற்று
கனக்கிறது என் இதயம்
என் உயிரே....

ஈழத்து தேசமதை
காதலித்து – இதயத்து நேசமதை
ஓரமாய் ஒதுக்கி
புறப்பட்டோம் போராட
புலி மைந்தர்களாய்
காதல் புலிமைந்தர்களாய்....

காவியத்து காதலர்கள்
களத்தில் – நாங்கள்
ஈழ தேசம்தன்னை காதலித்தோம்
இறுதியில்
நீ ஈழத்தின் காதல் காவியமானாய்!
அன்பே
என் அன்பு காதலியே!

தசாப்தங்கள் கடக்கின்றன
தென்றல் – என்னை
தழுவுறது – தேசம்
உன்னை வணங்குகிறது
உன் நினைவுகள் தாங்கி...

உருத்திரபுரம் – இசை

# பாம்புக் காய்ச்சல்

வெளவால் உண்ட பாம்பாலே
விளைந்தது இந்த "கொரோனா"வாம்
பாம்பினூடே பரவி வந்து
பாரை இன்று உலுக்கிறதே!

சுவாச வழியது ஊடாக
சூட்சுமமாகத் தான் நுழைந்து
சுவாசப்பையையும் சிறுநீரகத்தையும்
சுட்டுப்போட்டிடும் வைரசாம்!

அச்சம் தவிர்த்து அறிவை விரித்து
ஆக்கம் செயலில் காட்டிடனும்
உச்சமான தனிநபர் சுத்தம்
உவப்பாய் கையது கொண்டிடனும்!

மக்கள் கூட்டம் சேரும் இடத்தை
மனதில் இருத்தித் தவிருங்கள்
பக்கமே இருக்க வேண்டி வந்தால்
பாங்காய் மூக்குவாய் மூடுங்கள்!

கைகள் சரியாய்க் கழுவிக்கொண்டு
கலந்தே உறவைப் பேணுங்கள்
மெய்யை மீறும் தும்மல் இருமல்
மேலே கைக்குட்டை பேணுங்கள்!

"பாம்புக்காய்ச்சல்" என்ற பெயரில்
பாரை வதைக்கும் தொற்றை வெல்ல
சோம்பலோடு 'தடிமன்' கண்டால்
சேராத் தனியிடம் ஒதுங்குங்கள்!

தொற்றைப் பெற்ற மனிதன் ஊடே
தொற்றது விரைந்து அடுத்தவரேறும்
சுற்றம் காக்க சுத்தம் பேணி
சுவாசக் கவசம் அணிதல் நன்று!

மூக்கு வடிதல் தொண்டை நோதல்
மூளும் காய்ச்சல் இருமலோடு
ஆக்கும் சுவாச சிரமங்கூட்டி
அமிழ்த்தும் இந்த அறிகுறிகள்!

புளிப்பாய் பழங்கள் உண்டுவந்து
புரிந்தே தொண்டை ஈரம்பேணி
விழிப்பாய் மருத்துவ உதவிபெற்றால்
விரட்டலாம் பாம்புக் காய்சலதை!

இறைச்சி முட்டை நன்றாய் அவித்து
இயைபாய் சமைத்து உண்டிடுவீர்
மறைவிடக்காட்டு விலங்குடனுறவை
மறந்திட நினைவு கொண்டிடனும்!

தொற்றி அறிகுறி தோன்றநாள்கள்
தொகையால் பதினான்கு ஆகிடுமே
தொடங்கு அறிகுறி காட்ட முன்பே
தொற்றாத விரைவாய்ப் பரவிடுமே!

குழந்தைகள் முதியோர் நோயாளர்கள்
குறைந்த எதிர்ப்பு சக்தி உடையோர்
இழந்திடாது உயிரைக் காக்க
இன்றே பெறுவீர் விழிப்புணர்வதனை!

வைத்தியசாலையில் வசதிகளுண்டு
வாய்ப்பாய் அதனைப் பயன்படுத்தி
பைத்திய அச்சம் தவிர்த்தினி நாளும்
பாரினில் சுகமாய் வாழ்ந்திடுவோம்

சூரிய நிலா, உசன்

# இவர்கள்தான் ஊனமுள்ளோர்...!




மாடென்றும் ஏச்சு
மந்தையென்றும் பேச்சு
நாய் என்றும் திட்டு
குரங்கென்றும் சொல்கிறார்கள்
கழுதையென்றும் கூறுகிறார்கள்

ஏசியவன், பேசியவன்
திட்டியவன், பாய்ந்தவன்
சொல்கிறவன், கூறுகிறவன்
அவன் எவனோ?

மாடென்றால் செல்வம்
நாய் என்றால் நன்றியுள்ளது
குரங்கு என்றால் மனித பிறப்பின் ஆரம்பம்
கழுதை சுமக்கும் உருவம்
இத்தனை நல்லது தெரிந்தும்
அத்தனையும் மறந்து
உதவாத விடயத்தை
உதாரணம் காட்டி
உதவாக்கரையாக்கும்
உயிரற்ற உடம்புகளே
ஊனமுள்ள பிறப்புக்கள்

வ.துசாந்தன்



# நெல் கொள்வனவு

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடை வேலைகள் மும்முரமாக இம்பெற்று வரும் நிலையில் அரசின் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை களஞ்சியங்களில் மட்டுமன்றி சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளையும் முகவர்களாக நியமித்து நெல்கொள்வனவு வியாபிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாவட்டத்தில் 80 ஆயிரம் ஹெக்டேயரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் 4 லட்சம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் ஒரு லட்சம் மெற்றிக் தொன் நெல்லையாவது உத்தரவாத விலையில் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளதாக அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் தெரிவித்தார். எனினும் பெரும்பாலான விவசாயிகள் அறுவடை நெல்லை சேமித்து வைப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**நெல் விலை உயருமாம்**



# பிரதி மேயர் தெரிவு

கல்முனை மாநகர சபையின் புதிய பிரதி மேயராக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரஹ்மத் மன்சூர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவரை பிரதி மேயராகவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் காத்தமுத்துகணேஷ் கட்சியிலிருந்துநீக்கப்பட்டமையை அடுத்து பிரதி மேயர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

மாநகர மேயர் சட்டத்தரணி எம்.எம்.றகீப் தலைமையில் பிரதி மேயர் தெரிவுக்கான சபையின் விசேட கூட்டம் இடம்பெற்றதுடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்என்.மணிவண்ணனினால் தெரிவு நடத்தப்பட்டது. இதன்போதே புதிய பிரதி மேயராக ரஹ்மத் மன்சூர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

**தமிழ் மகன் ஒருவர் இருந்த கதிரையப்பா இது!**

■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....



# பகிஷ்கரிப்பு



கல்முனை மாநகர சபையின் புதிய பிரதி மேயர் தெரிவுக்கான விசேட சபை அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் முன்னிலையில் இடம்பெற்றபோது சபையின் அதிக உறுப்பினர்கள் சபை அமர்வைப் பகிஷ்கரித்து தெரிவில் கலந்து கொள்ளவில்லை. குறிப்பாக 41 உறுப்பினர்கள் பங்குபற்ற வேண்டிய இந்த விசேட அமர்வில் 15 உறுப்பினர்கள் மட்டுமே (மேயர் உட்பட) கலந்து கொண்டிருந்தபோது கோரம் போதுமானது என்பதால் பிரதி மேயர் தெரிவு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட சாய்ந்தமருது சுயேச்சைக்குழு உறுப்பினர்களும் இந்த விசேட சபை அமர்வுக்கு வருகை தராது பகிஷ்கரித்திருந்தனர்.

**பின்னணிதான் என்னவோ?**





# முன்னகரும் கிழக்கு

கல்வித் தரத்தில் ஒன்பதாவது மாகாணமாக இருந்த வந்த கிழக்கு மாகாணம் 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றினடிப்படையில் நான்காம் இடத்துக்கு முன்னேற்றமடைந்துள்ளது. இவ்வாறு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் பெருமிதத்துடன் கூறினார்.

நிந்தவூரில் நடைபெற்ற சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றில் கௌரவ அதிதியாகக்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். கிழக்கின் கல்வித் தரம் முதலிடத்துக்கு வரவும் வாய்ப்புண்டு எனத் தெரிவித்த அவர் சிறந்த ஊக்குவிப்பைச் சகல தரப்பினரும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**சளைக்காது முன்னகர்வோம்!**

# அக்கினி அறிவுச் சவால்

நிந்தவூர் சனசமூக அறிவியல் ஒன்றியம் 2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அம்பாறை மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ள இரு மாணவிகளைப் பாராட்டி கௌரவித்துள்ளது. 'அக்கினி அறிவுச் சவால்' எனும் தலைப்பில் நடைபெற்ற இந்தப் பாராட்டு விழாவில் வவுனியா மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம்.றியாழ் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். கணித விஞ்ஞானத்துறையில் மாவட்ட ரீதியாக முதலிடம்பெற்ற மாணவி நப்றத் ஆயிஷா, வணிகப் பிரிவில் முதலிடம் பெற்ற அப்துல் அஸீஸ் ரஸ்ரக் நுஹா ஆகிய இரு மாணவிகளுமே பாராட்டப்பட்டமையுடன் இரு மாணவிகளுக்கும் அமைப்பின் சார்பில் தலா ஒரு லட்சம் ரூபா கல்வி ஊக்குவிப்புப் பணமும் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

**கல்விக்குக் கரம் கொடுப்போம்**

# சமூக நல்லிணக்கம்

சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தியும் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் யாழிலிருந்து சக்கர நாற்காலியில் நாட்டைச் சுற்றிவரும் மாற்றுத் திறனாளிகள் கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களூடாகவும் பயணித்தனர்.

மூன்று மதங்களையும் சார்ந்த மூன்று மாற்றுத் திறனாளிகள் சமூக நல்லிணக்கத்துக்கான இச்சக்கர நாற்காலி சுற்றுலாவை ஆரம்பித்ததுடன் எம்.முகம்மதலி, ஜே.சுதா எனும் இரு மாற்றுத் திறனாளிகளே அம்பாறை மாவட்ட சுற்றுலாவில் பங்குகொண்டனர்.

**துளிர்க்குமா நல்லிணக்கம்?**

# ஏன் பகிஷ்கரித்தோம்?


கல்முனை மாநகர தமிழ் மக்கள் மற்றும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கையை ஏற்றும் கட்சித் தலைமையின் ஆலோசனையின் பேரிலுமே கல்முனை மாநகர சபையின் பிரதிமேயர் தெரிவுப் போட்டியில் பங்குபற்றுவதிலிருந்து தவிர்த்துக் கொண்டதுடன் இதற்கான விசேட சபை அமர்விலும் பங்குபற்றாது பகிஷ்கரித்தோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

**மண்டியிடோம் மண்டியிடோம்**



■ சி. நற்குணலிங்கம்

# சோம்பலை சாம்பலாக்கு...



எந்தவொரு வேலையையும் செய்ய மனமில்லாமல் உடலுக்கு மட்டும் சுகம் கொடுக்கும் ஓர் அனுபவம் தான் சோம்பல். சோம்பல் ஒரு பழக்கம். ஓர் உணர்வு. சோம்பலைத் தன்னுடைய இயல்பு என்று கருதுவது மிகப் பெரிய தவறு. சோம்பல் என்பது இயல்பு அல்ல. இயலாமை. மேலும் பணிகளைச் செய்ய இயலாது போவதாகும். இது பலவீனம் என்பதைத் தாண்டி நெடுநேரம் ஓய்வெடுக்க வேண்டுமென்று தூண்டுவது. இது மனோரீதியாகவோ, உடல் ரீதியாகவோ ஏற்படக் கூடியது. உடல், மனம், உணர்வு, சக்திநிலை போன்றவை புத்துயிர்ப்போடு நிகழவில்லை என்றால் அதுதான் சோம்பலின் அடித்தளமாகும். செயற்படவேண்டிய காலத்தில் செயற்படாமல் அச்செயலை நினைத்திருந்தால் சோம்பல் எனவும் கூறலாம்.

சோம்பல் ஏற்படுவதற்கு உடலியல், உளவியல் காரணங்களைக் கூறலாம். ஒருவர் மிக அதிகமாக உடற்பயிற்சியில் ஈடுபட்டாலோ அல்லது கனமான பொருள்களைத் தூக்கினாலோ உருவாகும் உணர்வு உடல் ரீதியான சோம்பலாகும். ஒரு விடயத்தில் கருத்து ஆழ்த்தி, அதில் மிகவும் ஈடுபட்டால் அதனால் மனோரீதியான சோம்பல் ஏற்படும். வேலை, பயணம், வயது, நோய் ஆகிய காரணங்களாலும் சோம்பல் ஏற்படும். சரியாக தூக்கம் இல்லையாயினும் சோர்வு உண்டாகும் ஆனால் அது சோம்பலாகாது.

எமக்குப் பிடிக்காத வேலையைச் செய்யும் போது அல்லது செய்யச் சொன்னால் சோம்பல் வரும். எதை ரசித்துச் செய்யவில்லையோ அங்கு சோம்பல் வரத்தான் செய்யும். உழைப்பால் மனிதன் சோர்வடைவதைவிட உழைப்பு இன்மையால் சோர்வடைவது அதிகம். சிலர் சேவைகளைச் செய்யாதிருக்க சோம்பல் வந்ததுபோல் நடிப்பதும் உண்டு. ஆளுக்கு ஆள் சோம்பல் உணர்வு வேறுபடும். சோம்பல் சிலருக்கு நாகரிகமாகவும் மாறிவிட்டது.

வெற்றியடையத் துடிப்பவர்களுக்கு சோம்பல்தான் கடுமையான எதிரி.



**உங்களின் நல்ல எண்ணங்கள், முயற்சிகள், செயல்களை, வெளிப்படுத்த உங்களுக்குள் சோம்பல்தான் எதிரியாக இருக்கிறான் எனத் தெரிந்து கொண்டால் சோம்பலை சாம்பலாக்குங்கள். மனிதனாகப் பிறக்க பாக்கியம் செய்திருக்கிறோம். வாழும் காலத்திற்குள் சாதிக்கும் விதத்தில் நல்ல அறிகுறியை விட்டுச் செல்ல வேண்டும்.**

மனிதனின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடைகளில் ஒன்று சோம்பல். மனிதன் சோம்பலில் தன் செயல், சக்தியை இழக்கிறான், சோம்பல் சுகமானதல்ல, முன்னேற்றத்தைத் தடுப்பதோடு. பலவகை நோய்களையும் கொண்டு வந்து சேர்க்கிறது இதில் முக்கியமானது புற்றுநோய், புற்றுநோயைக் கைப்பிடித்து கூட்டி வந்து நம் உடலில் சேர்ப்பது மது, புகையிலை, சிகரெட் என்பனவாகும். இப் பட்டியலில் தற்போது புதிதாக சோம்பலும் இணைந்துள்ளது.

மனதில் சோம்பல் படிந்துவிட்டால் நீக்குவது மிகக் கடினம். சோம்பல் அற்றிருக்க இளம் வயதிலேயே பழகிக் கொள்ள வேண்டும். மனம் தான் மார்க்கங்களுக்குத் தலைவாசல். மனதின் வலிமையைப் புரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். மனதை சோம்பலுக்கு அடிமையாக்கிக் கொள்ளக் கூடாது. சோம்பல் நேரத்தை விழுங்கிவிடும். மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்கிறான் என்றால், அவன் வாழ்க்கையின் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம் என்கிறார் டார்வின்.

உங்களின் நல்ல எண்ணங்கள், முயற்சிகள், செயல்களை, வெளிப்படுத்த உங்களுக்குள் சோம்பல்தான் எதிரியாக இருக்கிறான் எனத் தெரிந்து கொண்டால் சோம்பலை சாம்பலாக்குங்கள். மனிதனாகப் பிறக்க பாக்கியம் செய்திருக்கிறோம். வாழும் காலத்திற்குள் சாதிக்கும் விதத்தில் நல்ல அறிகுறியை விட்டுச் செல்ல வேண்டும். என்றார் விவேகானந்தர். எனவே சோம்பலைச் சொந்தமாக்கக் கூடாது. சோம்பல் விடுப்பும், சுறுசுறுப்புடன் வாழ. சோம்பல் எதனால் ஏற்படுகிறது, எவ்வாறு விடுபடலாம், அதன் பாதிப்புக்கள் எவை? என்பதைப் புரிந்து உங்கள் ஆற்றலை அதிகரித்து மகிழ்வாக வாழ வழிகளை நாட வேண்டும்.

எனக்குச் சந்தர்ப்பம் இல்லை. வாய்ப்புக் கிட்டவில்லை. கிடைக்கவில்லை என்னை யாரும் புரிந்து கொள்ளவில்லை. என்று சோம்பலாக காலத்தைக் கழித்துக் கொண்டிருக்க, வீணாக்கிக் கொண்டிருக்க அடுத்தவர்கள் நீங்கள் புறந்தள்ளிய சந்தர்ப்பங்களை தனதாக்கிக் கொண்டு எளிதில் வென்றுவிடு வார்கள்; சோம்பல் பழக்கமானால் தோல்வி பழக்கமாகும்.

சோம்பல் என்ற ஒன்று பலதையும் தொற்றி எதையும் நிம்மதியாக செய்ய்விடாமல் தடுக்கும். சாதனையாளர்களைப் பாருங்கள் அவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள் உற்சாகமாக இருப்பார்கள்.

சோம்பல் வாழ்வை பாதிக்கும் என்பதை வள்ளுவன் அன்றே புரிந்துகொண்டு 61 ஆவது மடி இன்மை (சோம்பல் தவிர்த்தல்) எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார். ஒருவனுக்கு மங்காத விளக்காகிய குடித்தனமும் அவனுடைய சோம்பல் என்ற மாசுபடிய இருளடைந்துவிடும் என்பதை "குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும் மாசு ஊர மாய்ந்து கெடும்" எனும் குறள் மூலம் விளக்கியுள்ளார்.

ஒருவன் தான் பிறந்த குடியைப் புகழ் பெறச் செய்ய நினைத்தால் சோம்பலை நீக்கி முயற்சியுடன் கடமை செய்ய வேண்டும் என்பதை "மடியை மடியா ஒழுகல் குடியைக் குடியாக வேண்டுபவர்" எனும் குறள் மூலம் விளக்கியுள்ளார்.

"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த குடிமடியும் தன்னினும் முந்து" எனும் குறளில் ஒழித்துக் கட்ட வேண்டிய சோம்பலை துணையாகக் கொண்டவன் குடும்பம் அவனுக்கு முன்பே அழிந்துவிடும் என்றார் வள்ளுவர்.

திருக்குறளில் அதிகாரம் 60 ஊக்கம் உடைமையில் "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையானுழை" எனும் குறள் மூலம் சோம்பல் இல்லாத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமான செல்வம் வழி விசாரித்து தேடி வந்து சேரும் என்றார் வள்ளுவர்.

ஆள்வினையுடைமை (விடாமுயற்சியுடைமை) எனும் அதிகரம் 62 இல் "மடி உளாள் மாமுகடி என்பமடி இலான் தாள் உளாள் தாமரையினாள்" எனும் குறளில் சோம்பல் உடையவனுக்கு தரித்திரம் துணையாகும். விடாமுயற்சி உடையவனுக்குச் செல்வமே துணையாகும் என விளக்கியுள்ளார்.

சோம்பலை விரட்ட மூன்று முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டும் ஒரு காரியம் செய்ய வேண்டியிருக்குமாயின் முதலில் இருக்கும் இடத்தைவிட்டு நகர வேண்டும். அடுத்து என்ன செய்யப் போகிறோமோ அதற்கான தயாரிப்புக்களில் ஈடுபட வேண்டும். இறுதியாகச் செயலில் இறங்க வேண்டும். ஒருவர் தனக்குத்தானே ஆதரவு ஊக்குவிப்புக் கொடுக்க வேண்டும். தன்னம்பிக்கை வரும்வரை இவை கொடுக்கப்பட வேண்டும். நாம் செய்யப்போகும் செயலை நேசிக்கப் பழக வேண்டும். ரசித்துச் செய்தால் சோம்பல் வராது. செயலில் பிடிப்பு ஏற்பட வேண்டும். எனது சோம்பலை நீக்க வேறு யாராவது ஊக்குவிப்பு வழங்காவிட்டால், கவலை ஏது? சுய பாராட்டின் மூலம் என்னை நானே ஊக்குவித்து முயற்சியை வரவழைத்துக் கொள்ள வேண்டும். உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கைதான் நோய்கள் அணுகக் காரணம். நேரத்துக்குத் தூங்கி எழும் பழக்கத்தைக் கைக் கொண்டால் நாள் முழுக்க உடலின் ஆற்றல் சீராக இருக்கம். புத்துணர்ச்சி ஏற்படும் சோம்பல் வரும் போது தேனீ, எறும்பு ஆகியவற்றை நினைவில் நிறுத்துங்கள். அதன் செயற்பாட்டைப் பாருங்கள்.

சுறுசுறுப்புடன் இருப்பீர்கள் புத்துணர்வு கிடைக்கும். தினமும் யோகாவில் ஈடுபடுங்கள். ஆரோக்கியம் பெறலாம். அஞ்சாமை குணமிருந்தால் கூட சோம்பல் அதனும் உடற் சோர்வு, மனச் சோர்வு என்பன புறபயமான பழக்கங்களால் சீர் செய்து கொள்ள முடியும். ■




பெருமை மிகு மாந்தர்
புகழ்ந்துரைத்த ஊர்
பசுமை சேர் கோணமலையின் மூதூர்

அங்கெழில் மிகுந்த மாந்தர் மனம் புகுந்த
கங்குவேலி அதற்கு அழகென இரு கரை
சூழ் மகாவலி

இப்பதி தனில் திருக்கரையம்பதியாகி
ஆதி சிவன்.
இதை திரிகூடம் ஆக்கி
ஆண்டமைந்தான் இராவணன்.

அகத்தியன் அவன் தன் நாமமிட்டு
புகழ் பரப்பிய செம்மை நிலம்.
அகந்தை விலக்கி அன்பை புகட்டும்
அருமை நிலம்.

பிடி பிணி பிடியா பிணி எப்பிணி
தோன்றினும்
அப்பிணி தன் தன்மை இழந்து இங்கு
தோற்றிடும்.

**லக்சன்,**
திருகோணமலை





# பூரிக்க வைக்கும் பூச்சிய உள்ளீட்டு விவசாயம்

இ.ரஜிதன்
விரிவுரையாளர்
விவசாயக் கல்லூரி

ஒரு காட்டுக்கு யார் இரசாயன பசளை போடுகிறார்கள்? யார் கிருமிநாசினி தெளிக்கிறார்கள்? யார் பூச்சி நாசினிகள் தெளிக்கிறார்கள்? யார் உழவு செய்கிறார்கள்? இயற்கை விவசாயம் சாத்தியமே இல்லை என்று சொல்பவர்களுக்கும் அது ஒரு கட்டுக்கதை என்று சொல்பவர்களுக்கும் பல்தேசிய கம்பனிகளின் கதைகளில் மயங்கிப் போய் இருப்பவர்களுக்கும் இது நேர விரயம் என்று சொல்பவர்களுக்கும் ஒரே ஒரு பதில்தான் இருக்க முடியும். ஒரே ஒரு உதாரணம் தான் இருக்க முடியும். அதுதான் காடு!

மேற்சொன்ன அத்தனை கேள்விகளையும் கேட்டு பாருங்கள் ஏதோ சொல்ல வருகிறது இயற்கை. ஒரு காடு எப்படி எதுவித செயற்கை பசளைகளும் இன்றி சேர்க்கை நாசினிகளை இன்றி தனது இருப்பை இந்த உலகில் நிலைத்து வைத்திருக்கிறது. இதற்கான விடையை நாம் கண்டுபிடிப்போமாக இருந்தால் இயற்கை விவசாயம் சாத்தியம் தான் என்பதும் எப்படி செய்ய முடியும். என்பதும் புரிய வரும்.

### காடு இயற்கையான சமநிலை

காடுகளில் நன்மை தரும் பூச்சிகள் தீமை தரும் பூச்சிகள் நன்மை தரும் உயிரினங்கள் தீமை தரும் உயிரினங்கள் என அனைத்துமே உள்ளன. காடுகளுக்குள்ளும் மாவுப் பூச்சி உண்டு அந்துப் பூச்சி உண்டு சிங்கம் உண்டு புலி உண்டு மான் உண்டு மழை உண்டு சேனை புழுக்கள் உண்டு வைரஸ் உண்டு என அனைத்துமே உண்டு. கவனித்துப் பாருங்கள் எதுவுமே எதனையும் முழுமையாக அழித்து விடாது. அதுதான் இயற்கையின் சூட்சுமம். அங்கு எல்லாமே ஒரு சம நிலையில் காணப்படும். அங்கு எல்லா இயற்கை வட்டங்களும் பூரணமாக காணப்படும். நைதரசன் வட்டம் காபன் வட்டம் என அனைத்து வட்டங்களும் நல்ல நிலைமையில் காணப்படும். அங்கு விருத்தியடைந்த பூரண உணவுச் சங்கிலிகள் காணப்படும். விருத்தியடைந்த உணவு வலை காணப்படும். ஒரு சூழல் தொகுதியாக தென்படும்.


யானை காட்டை இடிக்கும். புலி மானை கொல்லும். சேனைப் புளு செடிகளை அழிக்கும். மைனா புழுக்களை உண்ணும். பாம்பு தவளையை பிடிக்கும். தவளை குடம்பிகளை உண்ணும். இப்படி எவ்வளவோ கொலை திட்டங்கள் நிறைவேறும். கொலைக் காட்சிகள் அரங்கேறும். ஆனால் அந்த காட்டில் எதுவும் அழிந்து விடாது. அத்தனையும் அங்கேயிருக்கும். அத்தனைக்குள்ளும் ஒரு சமநிலை காணப்படும்.

சேனை புழுவின் எண்ணிக்கை அதிகரித்தால் அதனைப் பிடித்து உண்ணும் மைனாக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மைனாக்களின் எண்ணிக்கை அதிகரித்து சேனைப் புலிகளின் எண்ணிக்கையை கட்டுக்குள் கொண்டு வரும். சேமிப்புக்களை முழுவதும் அழித்து விடாமல் இருக்க மைனாக்களின் எண்ணிக்கையை கழுகும் பாம்பும் கட்டுக்குள் வைத்திருக்கும் அவற்றின் எண்ணிக்கை அதிகரித்து விடரமல் இருக்க அவற்றை பிடித்துண்ணும் உயிரினம் பார்த்துக் கொள்ளும். இப்படி எல்லா உயிரினங்களுக்கும் இடையே ஓர் இயற்கையான சமநிலை பேணப்படும். இதுவே காடுகள் நிலைத்திருக்கும் இரகசியம்.

எதுவித உள்ளீடுகளையும் நாம் கொடுக்காமலே வெளியீடுகளை மட்டும் காடுகள் தருவதன் ரகசியம் இதுதான். சனத்தொகை அதிகரித்து விட்டது. காலநிலை மாறி விட்டது. என்று விவாதம் புரிவோருக்கு நாம் நிரூபிக்க வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அத்தனையும் சமநிலைப்படுத்தும் தன்மை இயற்கையிடம் உண்டு. அதிகரித்த சனத்தொகைக்கான உணவுகளை உணவு உற்பத்திகளை நாம் இவ்வடிப்படை நுட்பங்களுடன் சில மேலதிக தொழில்நுட்பங்களைக் இணைப்பதன் மூலம் உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

### தோட்டங்கள் காடு

இன்னும் எம்முடன் வாழும் பல மூத்தோர்கள் தோட்டங்களை காடு என அழைப்பதை காணலாம். தெளிவாக காணலாம். தெளிவாக விசாரித்து பார்த்தால் அந்தக் காலங்களில் தாம் தமது தோட்டங்களை காடுகள் என அழைத்ததை நினைவு கூர்வார்கள். இதன் அர்த்தம் தோட்டங்களை காடு போன்று



வைத்திருந்ததே ஆகும். மேலும் பல பழமொழிகள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அந்தக்கால நாகரிகங்களை எடுத்துக் காட்டி நிற்கின்றன. மாட்டுக்கு பாதி பூச்சிக்கு பாதி கள்ளனுக்கு பாதி எனக்கு பாதி உனக்கு பாதி என்று கூறி விதை விதைப்பதையும் நாற்று நடுவதையும் அவர்கள் இன்னும் நினைவு கூர்வார்கள் இப்படி பசுமை புரட்சிக்கு முந்தைய இன்னும் நிலைத்திருக்கும் தலைமுறைகளிடமிருந்து நாம் அறிய வேண்டியவை பல உள்ளன. நாம் அன்று சர்வ சாதாரணமாக பயன்படுத்திய பல தொழில்நுட்பங்களை கொள்ளையடித்து தாம் உற்பத்தி செய்து பல பல விளம்பரங்கள் செய்து எமது நாட்டின் அந்நியச் செலாவணியை அள்ளிச் செல்வதை கண்கூடாகக் காண்கிறோம்.

நம் பாடப் புத்தகங்கள் இனிமேல் எமது தொழில்நுட்பங்களை கற்பிக்க வேண்டும். நமது பல்கலைக்கழகங்கள் இனிமேல் இயற்கை விவசாய தொழில்நுட்பங்களை கற்பிக்க வேண்டும். பல்தேசிய கம்பனிகளின் முகவர்கள் தயாரித்த பாட விதானங்கள் மாற்றப்பட வேண்டும். எதிர்க்கப்பட வேண்டும். தாவரம் வளர யூரியா போட வேண்டும் என்று ஒன்றுமறியா பச்சை பாலகனுக்கு கற்பிக்கப்படுகிறது. நமது விதி அங்கே எழுதப்படுகிறது இது மாற்றப்பட வேண்டும். இது மாற்றப்பட வேண்டும் எனில் நாம் மாற வேண்டும் அதுவும் உடனடியாக மாற வேண்டும்.

### இயற்கை விவசாயத்தின் பொருளாதார முக்கியத்துவம்

எம்மைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் ஓர் அருமையான வரப்பிரசாதம் இயற்கை விவசாயம்.. ஏனெனில் எல்லா மேலை நாடுகளும் ஏதோ ஒரு வகையில் கைத்தொழில் புரட்சி தொழில்நுட்ப புரட்சி என்ற பெயர்களில் உற்பத்திகளை பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்திய பொழுதிலும் தமது இயற்கை வளங்களைப் பாதுகாக்க மறந்ததனால் அவர்களது நாடு அவர்களது சூழல் மாசு ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் பசுமைப் புரட்சி உற்பத்தியை அதிகரிக்கின்ற உலகத்துக்கு உணவு கொடுக்கிறோம் என்ற பெயரில் விவசாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நச்சு நாசினிகள், நச்சு உரங்கள் காரணமாக விவசாய நிலங்கள் மேன்மேலும் நஞ்சு ஆக்கப்பட்டன. இதன் காரணமாக அதிகரித்த நோய்களும் அதிகரித்த ஆரோக்கியக் குறைபாடு களும் அங்கு காணப்படுகின்றன.

இதற்கான காரணம் தமது மாசடைந்த சூழலும் அதில் விளைவிக்கப்படும் பயிர்களும் தான் என கண்டறிந்த அந்நாட்டு மக்கள் சுத்தமான சூழலில் வளரும் பயிர் உணவுகளை வாங்க விரும்புகிறார்கள் ஆனால் அந்த நாடுகளில் இனிமேல் அப்படி பயிரிட முடியாத சூழல் உருவாகி விட்டது. இதன் காரணமாக எவ்வளவு விலை கொடுத்தேனும் ஆரோக்கியமான உணவுகளை எந்த நாட்டிலும் இருந்து பெற அவர்கள் முனைப்பு காட்டுகிறார்கள். இதுவே தான் சந்தர்ப்பம் என்று இந்த சந்தர்ப்பத்தை கப்பென்று பிடித்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு பாய்ச்சலை நிகழ்த்த வேண்டிய தருணத்தில் நாம் உள்ளோம்.


வரப்பிரசாதமாக எமது நாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஓர் அமைவிடத்தை கொண்டுள்ளது. ஓர் இயற்கை விவசாய நாடாக பிரகடனப்படுத்தக் கூடிய அனைத்து தகுதிகளும் இந்த நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு நாட்டுக்கு உண்டு. இதற்கு விவசாயிகள் ஆகிய நாம் மிகுந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதிக இலாபம் பார்ப்பதற்காக நச்சு மருந்து பசளைகளை அதிகமதிகம் மண்ணில் போடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் இறக்குமதியை நிறுத்தட்டும் என பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.

இது அரசாங்கம் மதுபானசாலைகளை மூடட்டும் நாம் குடியை நிறுத்தலாம். என காத்திருத்தலுக்கு ஒப்பானது. இது நமது நாடு நமது மண் நாம் தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பல் தேசியக் கம்பனிகளின் இலாபத்துக்காக எமது நாட்டின் எமது மண்ணின் வளங்களை விட்டுக் கொடுக்க முடியாது.

இனிமேலும் அவர்களது விளம்பரங்களுக்கு அடிபணிய முடியாது. இயற்கை விவசாயியாக மாறுவோம். எந்த இலாபத்துக்காக எமது நாட்டை நமது மண்ணின் வளத்தை அழிக்க இங்கு வந்தார்களோ அவர்களுக்கு எமது நஞ்சில்லா உற்பத்திகளை ஏற்றுமதி செய்து நாம் இலாபம் உழைக்கலாம். இதுதான் உண்மையான யுத்தம்.

காடுகளுக்குள்ளும் மாவுப்பூச்சி உண்டு அந்துப் பூச்சி உண்டு சிங்கம் உண்டு புலி உண்டு மான் உண்டு மழை உண்டு சேனை புழுக்கள் உண்டு வைரஸ் உண்டு என அனைத்துமே உண்டு. கவனித்துப் பாருங்கள் எதுவுமே எதனையும் முழுமையாக அழித்து விடாது. அதுதான் இயற்கையின் சூட்சுமம்.



## மேடம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். இஷ்டதெய்வ அருள் பலம் துணை நிற்கும். முக்கியமான பணி எளிதாக நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சியைத் தரும். பிள்ளைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவீர்கள். எதிர்ப்பாளரால் உருவான தொல்லை விலகும். மனைவி இணக்கமுடன் நடந்து கொள்வார். சுற்றுலா பயணங்களில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் நலன் சிறக்க பாடுபடுவர்.

## இடபம்

சுக்கிரன், புதன், சந்திரன் சுபபலன் தருவர். பணிகளில் நேர்மை மிகுந்திருக்கும். உறவினரிடம் நற்பெயர் பெறுவீர்கள். பிள்ளைகள் அறிவாற்றல் செயல்திறனில் மேம்படுவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். நோய் தொந்தரவு குறையும். பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் வளர்ச்சி பெற கூடுதல் வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களைக் கற்க முயல்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## மிதுனம்

குரு, சந்திரன் நற்பலன் தருவர். அனுகூல நிகழ்வுகள் மனதில் ஊக்கம் தரும். செலவில் சிக்கனத்தை மேற்கொள்வீர்கள். தம்பி, தங்கையர் சொந்த பணிகளில் கவனம் கொள்வர். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை தயக்கமுடன் ஏற்றுக்கொள்வர். பூர்வீகச் சொத்தில் வருமானம் வர வாய்ப்புண்டு. பகைவரிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் குறித்து பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உண்டு. பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தவும்

## கடகம்

பெரும்பான்மை கிரகங்களால் நற்பலன் கிடைக்கும். குடும்பத்தின் எதிர்கால நலனைக் கவனத்தில் கொண்டு செயல்படுவீர்கள். உறவினர், நண்பர்களின் உதவி கிடைக்கும். புதிய வாகனம் வாங்க வாய்ப்புண்டு. பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கு, விவகாரங்களில் சுமுக தீர்வு ஏற்படும். வெளியூர் பயணங்களில் மாற்றம் ஏற்படலாம். ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் அன்பு, பாசம் மகிழ்ச்சியை தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழிலில் போட்டி குறைந்து உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

## சிம்மம்

குரு, சூரியன், ராகு, சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். மன உறுதியுடன் முக்கிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். தம்பி, தங்கையர் தேவையறிந்து உதவுவீர்கள். புத்திரர் எதிர்கால வாழ்வுக்கு தேவையானதை செய்வீர்கள். பூர்வ சொத்தில் தாராள பணவரவு கிடைக்கும். எதிர்ப்பாளர்கள் உங்களின் நல்ல எண்ணங்களை புரிந்து கொள்வர். உடல்நலம் மேம்படும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். மனைவிவழி சார்ந்த உறவினர்கள் இணக்கமுடன் இருப்பர். தொழில், வியாபாரம் செழித்துவளரும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர்.

## கன்னி

புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். மன அமைதியை பாதுகாப்பது நல்லது. பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டு. பிள்ளைகள் உங்களின் சொல் கேட்டு நடந்து கொள்வர். உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள். மனைவியின் எதிர்பார்ப்பை தாமதமாக நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது அவசியம். தொழில் வளர்ச்சிப்பணிகளில் கவனம் செலுத்துவீர்கள்.

# இந்த வார ராசிபலன்

**16.02.2020 முதல் 22.02.2020 வரை**

## துலாம்

சனீஸ்வரர், செவ்வாய், கேது சந்திரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். புத்தி சாதுரியத்துடன் பணிபுரிவீர்கள். உங்கள் நற்செயலை நண்பர்கள் வாழ்த்துவர். குடும்பத்திற்கான தேவையனைத்தும் நிறைவேறும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளலாம். பிள்ளைகள் பெற்றோர் சொல்லை வேதமென ஏற்றுக் கொள்வர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் நேர்த்தியாக பணிபுரிவது அவசியம். மாணவர்கள் படிப்பில் புதிய அணுகுமுறையை பின்பற்றுவர்.

## விருச்சிகம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன், சந்திரன் அதிர்ஷ்ட பலன் தருவர். மனதில் குழப்பம் விலகும். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் விவேகமுடன் செயல்பட்டு வருவர். எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் உருவாகும் இடையூறு சுவடு தெரியாமல் விலகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் சிறப்பபதோடு நண்பருக்கும் உதவுவர்.

## தனுசு

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தாய்வழி உறவினர்கள் அன்பு பாராட்டுவர். குடும்பத்திற்கான செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். மனைவியால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் ஆதாயம் அடைவர். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் தவிர்க்கவும்.

## மகரம்

புதன், ராகு, சுக்கிரன், சந்திரனால் தாராள நற்பலன் கிடைக்கும். உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். பணிகளை முன்யோசனையுடன் செயல்படுத்துவது நல்லது. வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல்களை ஒழுங்குபடுத்துவீர்கள். நண்பருடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். வழக்கு, விவகாரத்தில் தீர்வு கிடைக்க தாமதமாகலாம். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் நற்செயல்கள் பெருமை தேடித் தரும். தொழில் வியாபாரத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் ராஜயோக பலன் கிடைக்கும். திட்டமிட்ட செயல் எளிதில் நிறைவேறும். வசீகர பேச்சால் நற்பெயர் காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசத்துடன் நடப்பர். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டுப் பெறுவர். மறைமுக எதிரிகள் விலகிச் செல்வர். மனைவி குடும்பநலன்களைப் பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவர். பெண்கள் உறவினர்களின் குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். இஷ்ட தெய்வ அருளால் செயல் எளிதாக நிறைவேறும். தாய்வழி உறவினரால் உதவி கிடைக்கும். பூர்வீகச் சொத்தில் வருமானம் உயர வாய்ப்புண்டு. பிள்ளைகளின் மனதில் நம்பிக்கை வளர்ப்பீர்கள். அவர்கள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேறுவர். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவி அன்புடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.

# ஆதரவ...



அழைப்பொலி செவிவழி மூளைக்குள் நுழைந்து தூக்கத்தில் இருந்த ஆரூரனை தட்டி எழுப்பியது. கனவா நனவா என்ற குழப்பம் தீராமலே அலைபேசியை எடுத்தான். மறுமுனையில் இருந்து கிடைத்த செய்தியின் அதிர்வில் சில நொடிகளிலே முழு விழிப்பு ணர்வையும் அடைந்தான். இருந்தும் திரும்பவும் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டு அவசர அவசரமாகப் புறப்பட்டு மோட்டார்சைக்கிளை எடுத்துக்கொண்டு அன்னை இல்லம் நோக்கி விரைந்தான்.

போகும் வழியெல்லாம் நினைவுகள் அவனை பாடாய் படுத்தின. அவனால் அவன் மனதை அமைதிப்படுத்த முடியவில்லை. கற்பனைகள் தாறுமாறாக ஓடின. பல குழப்பங்கள் அவன் மனதை அல்லல்படுத்தி அலைக்களித்தது. பின்னோக்கி விரையும் மரங்களோடு அவனது நினைவுகளும் பின்நோக்கி நகர்ந்தது.

முனிவர்களின் தவக்காலம் போல் அது பட்டப்படிப்பு முடித்து வேலைக்காக காத்திருந்த காலம். மனச்சுமைகளோடும் தங்கி வாழ்கின்ற கனத்தோடும் நேரம் போகாமல் கண்டதையும் செய்து பொழுதுபோக்கிய காலம். அன்று காலையும் வழமையான சோம்பலான விடியலாகவே ஆரூரனுக்கு விடிந்தது. எழுந்தும் செய்வதற்கு ஏதுமில்லை என்ற எண்ணமே அவனை கட்டிலோடு கட்டிவைத்தது. அரைத்தூக்கத்தில் கிடந்தவனின் மனதை நேற்று பின்னேரம் சிவா அன்னை இல்லத்திற்கு போக வேண்டும் என்று சொன்னது நினைவு வரவே சோம்பலை புறந்தள்ளி விட்டு எழுந்து புறப்பட்டு சென்றான்.

அன்னை இல்லம் அழகான அமைதியான சூழலில் அமைந்திருந்தது. அதை பார்த்ததும் இயற்கை விரும்பியான ஆரூரன் உள்ளத்தில் உற்சாகத்தை அள்ளிக் கொடுத்தது. 'மச்சான் சிவா வாழ்ந்த இப்படியான இடத்தில வாழனும்டா, என்ன வாழ்கையடா" அவன் சொன்னதை காதில் வாங்காது அவனது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அன்னை இல்ல பிரதான மண்டபத்திற்கு சென்றான் சிவா.

அங்கு இவர்களை போலவே கழக உறுப்பினர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் மேசையிடப்பட்டு உணவுப்பொதிகள் அடுக்கப்பட்டு இருந்தன. உறுப்பினர் ஒருவர் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் தமது புகைப்பட கருவிக்குள் பதிவெடுத்து கொண்டிருந்தார். அது போதாதென்று அழுக்காள் அலைபேசியை எடுத்து தமது இஸ்டத்திற்கு வெளுத்து வாங்கி கொண்டிருந்தார்கள். இவர்களை கண்டதும் கழகத் தலைவர் 'என்ன சிவா நீங்க பொறுப்பில்லாம இப்ப வாறீங்க நேரமாச்சுதெல்லோ" என கடிந்து கொண்டார். அசட்டு சிரிப்போடு அவரை சமாளித்துக்கொண்டு தமது உறுப்பினர்களோடு கலந்து கொண்டு முதியவர்களை அழைத்து வந்து வரிசையில் இருத்தும் பணியில் ஈடுபட்டான்.

அன்றுதான் முதல் முதலாக அங்கு வந்த ஆரூரனுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியை கொடுத்தது. இளைஞர்கள் முதியவர்களை அன்போடு அழைத்து வந்து இருக்கையில் இருத்துவதும் அவர்களை பார்த்து அந்த வயதானவர்கள் முகத்தில் மலரும் மகிழ்ச்சியும் பார்க்கும் போதே பரவசத்தை கொடுத்தது. நிகழ்வுகள் வழமை போல சம்பிரதாயங்கள் நடந்தேறி வாழ்த்துகள், கஷ்டங்கள், பெருமைகள், நன்றிகள் பேசப்பட்டு வந்திருந்த முதியவர்களோடும் உணவுப்பொதிகளோடும் இணைந்து புகைப்படம் எடுக்கப்பட்ட பின் கடமை முடித்த திருப்தியோடு கலைந்து சென்றனர்.

சிவாவின் அழைப்பை ஏற்று ஆரூரனும் அங்கிருந்த முதியவர்களுக்கு உணவுப்பொதிகளை கொடுக்க ஆரம்பித்தான். அப்போது அவன் கொடுத்த உணவுப்பொதியை இரண்டு கைகளாலும் வாங்கி அவனைப்பார்த்து "நன்றி தம்பி றொம்ப நன்றிப்பா.. நல்ல சுவையான சாப்பாடு தந்திருக்காயப்பா.. நீ நல்லா இருக்கனும்பா நன்றிப்பா" என்று பாட்டி ஒருத்தி நிற்காத நன்றிப்பெருக்கோடு அவனுக்கு திரும்பத் திரும்ப நன்றி கூறிக்கொண்டிருந்தாள். அது ஆரூரனின் மனதில் சங்கடத்தை ஏற்படுத்தியது. பாட்டிக்கு நல்ல பசிபோல இங்க இவங்கள் ஒழுங்கான சாப்பாடு போடமாட்டாங்கள் என்று எண்ணிக் கொண்டு நகர்ந்தான். எல்லோருக்கும் கொடுத்து முடிந்ததும் அந்த பாட்டியை தேடிச் சென்றான். பாட்டி யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் சாப்பாட்டு பாசல் பிரிக்கப்படாமலே இருந்தது.

இதை பார்த்ததும் பசியோட இருந்த பாட்டி பார்சலை கூட பிரிக்காம இருக்காவே என்ற ஆச்சரியத்தோடு "என்ன பாட்டி சாப்பிடலையா? இங்க சாப்பாடெல்லாம் ஒழுங்கா தாறாங்களா? வசதியெல்லாம் எப்படி? நல்லா கவனிச்சுக் கிறாங்களா?" அவசர அவசரமாய் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான். அவனைப் பார்த்து சிரித்த பாட்டி "வாப்பா, இப்படி இருப்பா" என்று தான் இருந்த வாங்கில் இடம் விட்டு கொடுத்தாள். நகர்ந்து செல்ல முடியாது தயக்கத்தோடு வாங்கின் நுனியில் உட்கார்ந்தான் ஆரூரன்.

மீண்டும் ஒருமுறை நன்றிப் பாவை தொடக்கத்தில் இருந்து பாடி முடித்த பாட்டி ஆறுதலாய் அவன் கேள்விகளுக்கு பதிலளிக்க தொடங்கினாள். "அதெல்லாம் ஒரு குறையும் இல்லப்பா இங்க நல்ல சாப்பாடு போடுறாங்கப்பா, பொழுதுபோக்க ரீவி இருக்கு, புத்தகம் இருக்கு, கிழமைக்கு ஒருக்கா டாக்ரர் வந்து சோதிச்சுட்டு மருந்தும் தந்திட்டு போவாரப்பா நல்லாதான்பா இருக்கன்" என்றாள்.

ஏதோ ஒரு குறையோடு தான் நிறைவாய் இருப்பதாய் சொல்வது போல இருந்தது அவனுக்கு. அப்போது 'ஆரூரன் வாடா இனி சிறுவர் இல்லம் போகனும் நேரமாகுது வாடா" என்று சிவா அழைக்க அவனும் பாட்டியிடம் விடை பெற்றான். அப்போது பாட்டியின் கண்கள் இன்னும் கொஞ்சம் என்கூட இருக்க கூடாதா என கெஞ்சுவது போலிருந்தது அவனுக்கு. அவனுள் ஏதோ ஒரு துக்கம் பரவியது. அவன் உடல் எடை கூடியது போல் உணர்ந்தான். இருந்தும் மறுபடியும் வருவதாய் பாட்டிக்கு உறுதியளித்து விடை பெற்றான். அப்போது தான் புரிந்தது அங்கிருப்பவர்களிற்கு வயிற்றில் பசியில்லை மனதின் தனிமைப் பசிபோக்க ஆதரவுக்காய் காத்திருக்கிறார்கள் என்பது.

மாலை கழகத்தின் செயற்றிட்டங்கள் நிறைவேற்றிய திருப்தியுடன் திரும்பி சிவாவும் ஆரூரனும் அன்னை இல்லம் வழியாக வரவேண்டி ஏற்பட்டது. அன்னை இல்லத்தை பார்த்ததும் ஆரூரனுக்கு பாட்டியின் ஞாபகம் வந்தது. அவள் கண்களில் தெரிந்த ஏக்கம் அவனை அந்த இடத்தை கடந்து போகாதபடி தடைபோட்டது. 'என்ன மச்சி அதுக்குள்ள உனக்கு வயசாகிடிச்சா இங்க வந்து குடியேற நிக்குறாய்" சிவாவின் நையாண்டியை பொருட்படுத்தாது அன்னை இல்லத்துள் பாட்டியை தேடிச் சென்றான் ஆரூரன்.

> செல்லடியில அவரும் போக சின்னப் பிள்ளைகளை வைச்சுட்டு சரியா கஸ்டப்பட்டன். என்ர அண்ணாவின்ட உதவியோட வயல் வேலை, கூலி வேலைனு செய்து ஒரு மாதிரி பிள்ளைங்கள நல்லபடியா வளர்த்திட்டன். கண்முன்னே இல்லாட்டியும் இப்ப எங்கையோ நல்லபடியா இருக்கிறாங்க பல வருச கஷ்டங்களையும் துயரங்களையும் சில நிமிடத்தில் சொல்லி முடித்து பெருமூச்சு விட்டாள்.

அங்கு அவன் பார்த்த காட்சி அவனை மேலும் சங்கடப்படுத்தியது. அதே வாங்கில் பிரிக்கப்படாத சாப்பாட்டு பார்சலோடு பாட்டி அவன் வருவான் என எதிர்பார்போடு காத்திருப்பதுபோல் இருந்தது. அவனைக் கண்டதும் கனிவான புன்னகை மலர வாஞ்சையோடு அவனை அழைத்து அருகே இருத்திக்கொண்டாள். 'என்னப்பா உங்க வேலை எல்லாம் முடிஞ்சுதாப்பா" வினாவிற்கு மனதில் கனத்தோடு 'ம்ம்ம்" கொட்டினான். பாட்டி சிரித்துக் கொண்டே தொடர்ந்தாள். 'இங்க உங்களப் போல சின்னப் பிள்ளைகள் லீவு நாட்களில வருவாங்கள் அவுங்களை பார்க்கும் போது என் பேரப் பிள்ளைகளை பார்க்கிற சந்தோசம் வரும். இல்லன்னா இந்த மரத்தடியும் இங்க சுத்திட்டு இருக்கிற அணிலும்தான் எனக்கு துணை" எனக் கூறி கன்னங்களின் சுருக்கங் களையும் மீறி அழகாய் சிரித்தாள் பாட்டி.

"உங்களுக்கு பிள்ளைகள் இருக்காங்களா பாட்டி?" ஆச்சரியத்தோடு வினாவினான். "ம்ம்ம்ம்" தலையாட்டியபடி ஆழ்ந்த யோசனையோடு பதில் சொலத் தயாரானாள். 'அவங்கள் எல்லாம் இங்கதான் இருந்தாங்க இப்ப ஜேர்மன், கனடாவில இருக்காங்கப்பா. அந்தகாலத்தில மண்டதீவில பெரிய விவசாயி சொத்துப்பத்துகாரர் எங்கட அப்பர். பள்ளிக்கூடம் போறதே பெரிய விசயமாக பார்க்கப்பட்ட காலத்தில என்னை மானிப்பாய் மகளிர் கல்லூரி கொஸ்டல்ல விட்டு படிப்பிச்சார். கொஸ்டல்லுக்கு போறதுக்கு வண்டில ஏத்தி விட்டுட்டு மண்டதீவு சந்திவரைக்கும் பின்னாலையே நடந்து வருவர் அந்த மனுசன்" ஏக்கம் கண்ணில் மின்ன பெருமூச்சு விட்டாள் பாட்டி. அவளையே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தான் ஆரூரன்.

"படிச்சு முடிச்சு ரீச்சரா வேலை பார்த்தன். பிறகு கடை வைச்சிருக்கிறவருக்கு என்னை கட்டி வைச்சாங்க. அவங்க வேலைக்கு போகாம நிப்பாட்டிடாங்க. இரண்டு ஆணும் ஒரு பொண்ணுமா மூணு பிள்ளைங்க பிறந்தாங்க. சந்தோசமாதான் இருந்துச்சு தம்பி, இனப்பிரச்சனையும் இடப்பெயர்வும் ஆரம்பிச்சுது எல்லாம் போச்சு. பிள்ளைளையும் தூக்கிட்டு மாறி மாறி அலஞ்சம்.

செல்லடில அவரும் போக சின்னப் பிள்ளைகளை வைச்சுட்டு சரியா கஷ்டப்பட்டன். என்ர அண்ணாவின்ட உதவியோட வயல் வேலை, கூலி வேலைனு செய்து ஒரு மாதிரி பிள்ளைங்கள நல்லபடியா வளர்த்திட்டன். கண் முன்னே இல்லாட்டியும் இப்ப எங்கையோ நல்லபடியா இருக்கிறாங்க" பல வருச கஷ்டங்களையும் துயரங்களையும் சில நிமிடத்தில் சொல்லி முடித்து பெருமூச்சு விட்டாள். பாட்டியின் சோகம் தன்னுள் வாங்கி சிலையாக சில நொடி அமர்ந்திருந்த ஆரூரன் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டு "ஏன் பாட்டி எல்லாரும் வெளிநாட்டுக்கு போனவை? உங்களோட ஓராளாவது இருந்திருக்கலாம் தானே? "கேள்விகள் தொடுத்தான்.

கனவில் சிரிப்பதுபோல் சுவாரசியமாக சிரித்த பாட்டி "மூத்த பெடிய சுட்டதால கடைசிப் பொடியன் பயத்தில கப்பலால இந்தியாவுக்கு போய்ட்டான். அவனும் அங்க முகாமில இருக்கேக்க இங்க வயசுக்கு வந்த பெட்டய வச்சுட்டு கல்யாணம் கட்டி குடுக்க அலஞ்சன். இங்க இருக்கிறவங்க கேக்கிற சீதனம் குடுக்க என்கிட்ட ஏதப்பா வசதி. அப்பதான் கனடாவில இருந்து சீதனம் வேண்டாம், பொம்பிள்ளை வடிவா இருந்தா போதுமெண்டு சம்மந்தம் வந்திச்சு.

(26ஆம் பக்கம் பார்க்க)



## மூளையை இளமையாக்க சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 2 | | | 3 | |
| 8 | | | 1 | | 7 | 2 | | |
| | 1 | | | | | | | 9 |
| | 8 | | | | | | 4 | |
| 7 | | | | 3 | | | | 1 |
| | 3 | | | | | | 7 | |
| 3 | | | | | | | 8 | |
| | | 2 | 4 | | 6 | | | 3 |
| | 9 | | | 1 | | 4 | | |

முந்தைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 9 | 2 | 3 | 8 | 1 | 7 |
| 8 | 9 | 7 | 1 | 5 | 6 | 3 | 2 | 4 |
| 2 | 1 | 3 | 8 | 7 | 4 | 9 | 5 | 6 |
| 7 | 5 | 4 | 2 | 9 | 8 | 6 | 3 | 1 |
| 6 | 2 | 8 | 3 | 1 | 7 | 4 | 9 | 5 |
| 1 | 3 | 9 | 6 | 4 | 5 | 2 | 7 | 8 |
| 9 | 7 | 2 | 4 | 8 | 1 | 5 | 6 | 3 |
| 3 | 8 | 1 | 5 | 6 | 2 | 7 | 4 | 9 |
| 5 | 4 | 6 | 7 | 3 | 9 | 1 | 8 | 2 |

சுடோக்கு என்பது 9x9 என அமைந்த 81 சிறு கட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன், ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்துமாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு. தற்போது உலகெங்கும் மிகவும் விரும்பி விளையாடும் ஓர் எண் விளையாட்டாக இது உள்ளது.

# திரிஷாவை மறந்துவிடுவார்கள்

-சமந்தா





விஜய் சேதுபதி திரிஷா நடித்த '96' படத்தின் தெலுங்கு ரீமேக்கான 'ஜானு'வில் சர்வானந்தும், சமந்தாவும் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலி வெளியானதில் இருந்தே திரிஷாவின் நடிப்புடன் சமந்தாவை ஒப்பிட்டு பேசி வருகிறார்கள். இந்த நிலையில் அண்மையில் பேட்டியில் சமந்தா கூறியதாவது:

இதுவரை நான் நடித்த அனைத்து படங்களையும் விட சிறப்பான நடிப்பை இந்தப் படத்தில் வெளிப்படுத்தி இருக்கிறேன். முக்கியமாக திரிஷாவின் நடிப்பை நகலெடுக்க விரும்பாமல் எனது சாயலில் நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறேன். அதனால் அவரது நடிப்பில் இருந்து ஜானுவில் மாறுபட்ட சமந்தாவை பார்க்கலாம். 96 படத்தைப் பொறுத்தவரை திரிஷா சிறப்பாக நடித்திருந்தார். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆனபோதும் ஜானு படம் பார்க்க தியேட்டருக்கு வரும் ரசிகர்கள், திரிஷாவை மறந்து விடுவார்கள். ஜானுவான சமந்தாவைத்தான் மனதில் கொள்வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## மகிழ்ச்சியாக வாழ...

எம்மில் யாருமே இன்னும் பல ஆண்டுகள் உயிரோடு இருக்கப்போவதில்லை.

போகும் போது எதையும் எடுத்துக்கொண்டு போகப் போவதில்லை. ஆகவே சிக்கனமாக இருக்காதீர்கள். செலவு செய்ய வேண்டியவற்றுக்குச் செலவு செய்யுங்கள். மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய நேரத்தில் மகிழ்ச்சியாக இருங்கள். உங்களால் முடிந்த தான தர்மங்களை யோசிக்காமல் செய்யுங்கள்!

எதற்கும் கவலைப்படாதீர்கள். நீங்கள் கவலைப்படுவதால் எதையும் நிறுத்த முடியுமா? வருவது வந்தே தீரும்!


பணத்தைவிட உங்களின் ஆரோக்கியம் முக்கியம். பணம் ஆரோக்கியத்தை மீட்டுத் தராது! ஆயிரம் ஏக்கர் விளைநிலம் இருந்தாலும், நாளொன்றுக்கு அரை கிலோ அரிசிக்கு மேல் உங்களால் உண்ண முடியாது.

அரண்மனையே என்றாலும் கண்ணை மூடி நிம்மதியாகத் தூங்க எட்டுக்கு எட்டு இடமே போதும். ஆகவே ஓரளவு இருந்தால், இருப்பது போதுமென்று நிம்மதியாக இருங்கள்!

ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள் இருக்கும். பிரச்சினை இல்லாத மனிதன் இல்லை.

ஆகவே உங்களை யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் இருந்து மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழுங்கள்!



HBD மச்சா
காலம் தளர்ந்து
போவதில்லை
கவலைகளின் உருவம்
தான் காலத்துகேற்றபடி
மாறிக்கொள்கிறது..


உள்ளூராட்டக்காரன்
@shivaas_twitz
நடுத்தர வயசுல
ஒருத்தருக்கு தேவை சொந்த
வீடோ, காரோ இல்லை
செய்யிற வேலை
பிடிக்கலேன்னா உடனே
அதை தூக்கி எறிஞ்சிட்டு
வெளியே வர்ற தைரியமும்,
திறமையும் தான்




### ஆர்ப்பாட்டம் பண்ண Boards வச்சியே!





ஆர்ப்பாட்ட பிரச்சினையை தீர்த்துவச்சியா??






### கொரோனாவை வென்ற குழந்தை

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்ணுக்கு பூரண நலத்துடன் பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை என டாக்டர்கள் உறுதியளித்தனர். தற்போது தாயும், சேயும் பூரண நலத்துடன் உள்ளனர் எனவும், தொடர்ந்து தீவிரக் கண்காணிப்பில் உள்ளனர் எனவும் மருத்துவமனை தரப்பில் கூறப்படுகிறது.



# மிகப் பெரிய பூ!

உலகில் மிகப் பெரிய பூக்களில் ஒன்று டைட்டன் ஆரம். இது நீண்ட கால வகையைச் சேர்ந்த தாவரம். இந்தோனேஷியாவின் மழைக்காடுகளில் காணப்படுகிறது.

செடிதான் என்றாலும் மரம்போல் 20 அடி உயரத்துக்கு வளரும். 3 கிளைகளுடன் ஏராளமான இலைகளுடன் 15 அடி அகலத்துக்குக் குடை போல் நிற்கும்.

இதன் இலைகள் சூரியனிலிருந்து ஆற்றலைப் பெற்று, தண்டுப் பகுதியில் சேமித்து வைக்கும். இது பூப்பதற்குத் தேவையான ஆற்றலைத் தரும்.

12 முதல் 18 மாதங்களில் இலைகள் மடிந்து விடும். செடி செயலற்ற நிலைக்குச் சென்றுவிடும். மணியைக் கவிழ்த்து வைத்ததுபோல் பாளைத் தண்டு இருக்கும். இது சுமார் 100 கிலோ எடை வரை இருக்கும். செடி செயலற்ற காலகட்டத்தில் தண்டிலிருந்து மொட்டு உருவாகிறது. மொட்டு வளர்ச்சியின் வேகம் அபரிமிதமாக இருக்கும்.

முழுமையாகப் பூ மலரும்போது, மடலின் மஞ்சரியிலிருந்து வெப்பம் வெளியேறும். அதிலிருந்து அழுகிய விலங்குகளின் சடலம்போல் துர்நாற்றம் வெளிவரும். இதனால்தான் இந்தப் பூவை, 'பிண மலர்' என்று அழைக்கிறார்கள். துர்நாற்றத்தின் மூலம் பூச்சிகள், வண்டுகளைக் கவர்ந்து மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்துகிறது, இந்தச் செடி.

பூ ஒரே நாளில் வாடிவிடும். பாளைத் தண்டிலிருந்து பெர்ரி போன்ற தோற்றமுடைய கனிகள் உருவாகும். மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என நிறமாற்றம் அடையும். கனியில் உள்ள விதைகள் இருவாச்சி போன்ற பறவைகள் மூலம் பரவி, மீண்டும் புதிய செடிகள் முளைக்கும்.

2 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை செடியிலிருந்து பூ உருவாகிறது. ஒரு செடி 4 முதல் 6 பூக்களைக் கொடுத்துவிட்டு, மடிந்துவிடுகிறது. செடி பூக்காத காலகட்டத்தில் கிளைகள், இலைகள் அற்ற மரம்போல் காணப்படும். பூப்ப தற்கான ஆற்றலைப் பெற்ற பிறகே, பூக்கும்.

1878ம் ஆண்டு தாவரவியலாளர் ஒடோர்டொ பெக்காரி மூலம் சுமத்ரா தீவில் இந்த மலர் கண்டறியப்பட்டது. மழைக்காடுகள் அழிக்கப்படுவதால் டைட்டன் ஆரமும் அழியும் ஆபத்தான சூழலில் இருக்கிறது

# உடைந்த பானை



ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்தப் பானைகளை ஒரு நீளமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.


இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. கேலி பொருக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின் வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங்களுக்கும் தினமும் என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப் பளு மிகவும் அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய்யுங்களேன்"


அதற்கு விவசாயி, "பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழி நெடுக பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்"

இதைக் கேட்ட பானை கேவலமாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது

**நீதி: அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் பட்டால், நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது.**



# சரியான எழுத்துகளை எழுதிக் கட்டங்களை நிரப்புங்கள்!




## புத்தகம் படிக்கலாமா!

தேன் இருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டு போல்,

சீனி உள்ள இடத்தினைத்
தேடி ஊறும் எறும்பு போல்,

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப் போல்,

வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்,

பள்ளமான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம் போல்,

நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயில்வோம்!

# வர்ணம் தீட்டுவோம்





# விடுகதை



1. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?
2. பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துகள் ?
3. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
4. ஓர் அரண்மனையில் முப்பத்திரண்டு காவலர்கள் அது என்ன?
5. உணவை எடுப்பான். ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?
6. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
7. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?
8. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி? அவள் யார்?
9. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கறுப்பு அது என்ன ?
10. நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?

# விடை

10. சிலந்தி
9. அடுப்புக்கரி
8. முட்டை
7. கண்
6. சைக்கிள்
5. அகப்பை
4. பற்கள்
3. வெங்காயம்
2. வெண்டைக்காய்
1. பட்டாசு




# நித்திய சுகம் 457

உடலே கோயில்

வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜ்
*நரம்பியல் நிபுணர்,*
*யாழ். போதனா மருத்துவமனை*

வைத்திய கலாநிதி சிவதி. பிரதீபன்,
*நரம்பியல் பிரிவு,*
*யாழ். போதனா மருத்துவமனை*

# நீரிழிவு



## உலகை அச்சுறுத்தும் பேரரக்கன்

நீரிழிவு நோயானது, சதையினால் சுரக்கப்படும் இன்சுலின் ஓமோன் சுரப்பு பெருமளவில் குறைவடையும்போது அல்லது அதன் தொழிற்பாட்டில் பாதிப்பு ஏற்படும்போது குருதியில் குளுக்கோஸ் எல்லை மீறி அதிகரிப்பதால் ஏற்படுகிறது. அதிகரிக்கும் குருதிக் குளுக்கோஸானது உடலின் பல அங்கங்களில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. முக்கியமாக கண், நரம்புத் தொகுதி இருதயம் மற்றும் சிறுநீரகத்தை இது வெகுவாகப் பாதிக்கின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் நீரிழிவு நோயானது பெருமளவில் அதிகரித்துள்ளது. ஆண், பெண் இருபாலாரையும் நீரிழிவு சரிசமனாகவே பாதிக்கிறது. நீரிழிவு ஏற்படும் சந்தர்ப்பமானது பின்வரும் காரணிகளால் அதிகமாகியுள்ளது.

குடும்பத்தில் நீரிழிவு நோயாளர்கள் உள்ளமை, அதிக உடல் நிறை, உடற்பயிற்சியின்மை, இனம், ஏற்கனவே அறியப்பட்ட நீரிழிவுக்கு முன்னான நிலை, கர்ப்பகால நீரிழிவு அல்லது உடல் நிறை கூடியபிள்ளைப்பேறு, உயர்குருதியமுக்கம், அதிகரித்த கொலஸ்ரோல், சூலக நீர்க்கட்டிகள், தோல் மடிப்புக்களில் கருமை படர்ந்த நிலை என்பன அவற்றில் சில.

### நீரிழிவு நோயாளர்களில் ஏற்படும் நரம்புப் பாதிப்புக்கள்

நீரிழிவினால் ஏற்படுகின்ற உயர்மட்ட குளுக்கோஸ் ஆனது குருதிக்குழாய்களில் இருவேறு விதமான சிக்கல்களை உருவாக்கும்.

1. பருமனான குருதிக்குழாய்ச் சிக்கல்கள் (உதாரணம் - பாரிசவாதம்)
2. நுண்ணிய குருதிக்குழாய்ச் சிக்கல்கள் (உதாரணம் - நீரிழிவு நரம்புப் பாதிப்பு)

### பாரிசவாதம்

மூளைக் குருதியானது இரு பெரும் நாடிகளூடாக வழங்கப்படுகிறது. அந்த நாடிகளிலோ அல்லது அதன் கிளைகளிலோ ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும் அவை உடையும் போது ஏற்படும் இரத்த உறைவுக் கட்டிகளாலும் உண்டாகும் அடைப்பு மூளையில் ஏற்படுத்தும் பாதிப்பினாலேயே பாரிசவாதம் உருவாகிறது.

திடீரென ஏற்படும் இரத்தோட்டக் குறைவினால் மூளையில் அப்பகுதி படிப்படியாக இறப்படைய நேரிடுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மூளைப்பகுதி யின் கட்டுப்பாட்டில் இருக்கும் உடல் பகுதி செயலிழக்கிறது. பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரிலும் பார்க்க நீரிழிவு நோயாளர்களில் இரு மடங்காகவும் துரிதமாகவும் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

நீரிழிவு நோயாளர்களில் பாரிசவாதம் ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள், குருதிக் குளுக்கோஸ் கட்டுப்பாடில்லாமல் இருத்தல், அதிகரித்த உடற்பருமன், அதிகரித்த குருதிக்கொலஸ்ரோலின் அளவு, புகைப்பிடித்தல், குடும்பத்தில் பாரிசவாதம் உள்ளமை, அதிகரித்த வயது சிறுநீரில் அல்புமின்வெளியேறல் என்பனவாக அமைகின்றன.


### பாரிசவாதத்தை தடுக்க மேற்கொள்ள வேண்டியவை

1. குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
2. உடல்பருமனை குறைத்தல்
3. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல்
4. இரத்தத்தில் குளுக்கோஸின் அளவைக் குறைத்தல்
5. புகைப்பிடித்தலை தவிர்த்தல்
6. பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் போன்றவற்றை தவறாது உள்ளெடுத்தல்.

பாரிசவாதம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுமாயின் (ஒரு பக்ககையோ அல்லது காலோ அல்லது கையும் காலுமோ செயலிழத்தல், பேச்சுத்தடை, நடைத் தள்ளாட்டம், திடீர் கண்பார்வைக் குறைவுகள்) உடனடியாக வைத்தியசாலைக்குகொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் குருதிக்கட்டியை கரைக்கும் மருந்து பாரிசவாத அறிகுறி ஏற்பட்டு முதல் நான்கரை மணித்தியாலயங்களுக்குள் வழங்கப்படல்வேண்டும். பாரிசவாதம் ஏற்பட்ட பின்னும் தவறாது மருந்துகளை உட்கொள்வதோடு உடற்பயிற்சிகள் ஆலோசனைகள் என்பவற்றை ஒழுங்காக பெற்றுக்கொண்டு மேலுமொரு தாக்கம் வராமல் பாதுகாக்கவேண்டும்.

### நீரிழிவால் ஏற்படும் நரம்பு நோய்

நரம்புகளிற்கு குருதியை வழங்கும் நுண் குருதிக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் நீண்ட கால உயர்குருதிக்குளுக்கோஸ் ஆகியவற்றால் அது ஏற்படுகிறது.



வயதானநோயாளர்களில் இது நீரிழிவைக் கண்டு பிடிக்கும்போதே இனங்காணப்படலாம்.

ஆனால் இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவை உடையவர்களில் நீரிழிவு ஏற்பட்டு பல வருடங்களின் பின்பே இதுவெளிக்காட்டப்படுகிறது. இது பின்வருமாறு வகைப்படும்.

1. சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு.
2. சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு
3. ஒற்றை நரம்புப் பாதிப்பு (பல்வேறு ஒற்றை நரம்புகள் தனித் தனியாகப் பாதிக்கப்படல்)'
4. சமச்சீரற்ற இயக்க நரம்புப் பாதிப்பு
5. தன்னியக்க நரம்பு நோய்கள்.

### சமச்சீரான உணர்ச்சி நரம்புப் பாதிப்பு

இதன் ஆரம்ப அறிகுறிகளாவன நோயையோ வெப்பத்தையோ அல்லது அதிர்வுகளையோ உணரமுடியாத விறைப்பு நிலையாகும். இதன் நாள்பட்ட நிலைகளில் பஞ்சின்மேல் நடப்பதுபோல் உணர்வார்கள். கால்களே கைகளைவிட அதிகம் பாதிப்படையும். உணர்ச்சிகள் குறைவுறுவதால் சிறுசிறு காயங்களும் கவனிக்கப்படாமல் கொப்புளங்களாகவோ அல்லது புண்களாகவோ காணப்படும்.

### சடுதியான நோவுடன் கூடிய நரம்புப் பாதிப்பு

நோயாளிகள் கால்கள் பாதங்கள் போன்றவற்றில் எரிவு, நோ போன்றவற்றைக் கொண்டிருப்பர். இரவுகளில் வலி கூடுதலாக இருக்கும். படுக்கை விரிப்பின் அழுத்தமே தாங்க முடியாமல் அவதியுறுவர் இது நீரிழிவைக் கண்டுபிடிக்கும் போதே காணப்படலாம். அத்துடன் குருதிக்குளுக்கோஸை திடீரென கட்டுப்பாட்டில் கொண்டு வரும்போதும் இது ஏற்படுகிறது. நீரிழிவை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் இதுதானாகவே 3-12 மாதங்களில் மாறும். இதில் ஒரு வகையானது நாள்பட்ட நோவுடனான பாதிப்பு. நீண்ட கால நோயாளிகளிலே இது ஏற்படுகிறது. சிகிச்சை பயன் அளிப்பதும் கடினம்.

### தனித்தனி நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு

இந்த வகையான பாதிப்பு உடலின் எந்த நரம்பையும் பாதிக்கலாம். கண் தசை நரம்புகள் கூடுதலாகப் பாதிக்கப்படும். தானாகவே 3-6 மாதங்களில் முழுமையாக குணமடையும்.

### நீரிழிவால் ஏற்படும் தசை மெலிவு

வயதான ஆண் நீரிழிவு நோயாளர்களிலே இது கூடுதலாக ஏற்படும். நோவுடன் கூடிய தசை மெலிவு ஏற்படும். தொடைகள் மற்றும் தோள்களே பாதிக்கப்படுகின்றன. தொடவே முடியாதவாறு நோவாக இருக்கும். இது சரியாக குருதிக்குளுக்கோஸை கட்டுப்படுத்தாதவர்களிலேயே காணப்படுகிறது. இது குருதியில் குளுக்கோஸை கட்டுப்படுத்த சுகமாகிவிடும்.

### தன்னியக்க நரம்பு நோய்கள்

நீரிழிவு நோயாளர்களில் இந்தப் பாதிப்பு கூடுதலாக குணங்குறிகள் வெளிக்காட்டப்படாமலே இருக்கும். அரிதாகவே குணங்குறிகள் வெளிக்காட்டப்படும். படுக்கையிலிருந்து எழும்போது ஏற்படும் தலைச்சுற்று ஓய்வுநிலையிலும் அதிகரித்த இதய ஓட்டம், தொடர்ச்சியான வாந்தி, இரவில் வயிற்றோட்டம் போன்றவை இதனால் ஏற்படுகின்றன.

ஆண்மைக்குறைவும் இதனாலேயே ஏற்படுகிறது. நீரிழிவு நோயாளர்கள் நரம்புப் பாதிப்பை தவிர்க்க குளுக்கோஸை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கால்களை கிரமமாக அவதானித்து காயங்கள் புண்கள் ஏற்படுவதை உடனுக்குடன் கண்டு சிகிச்சை பெறவேண்டும். நீரிழிவை வெற்றி கொண்டு பாதிப்புக்கள் ஏற்படாமல் வாழ்வோமாக.

■ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*




# கோயம்புத்தூர் பாரதியார் பல்கலையின் அங்கீகரிக்கப்பட்ட நிலையமான

# பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பட்டமளிப்பு விழா - 2020

இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிலையமான பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பட்டமளிப்பு விழா அண்மையில் நடந்தது. அதுபற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

கத்தோலிக்க அச்சக பாதுகாவலன் மண்டபத்தில் கடந்த 25ஆம் திகதி இந்தப் பட்டமளிப்பு விழா இடம் பெற்றது. இந்த விழாவின் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தி னர்களாக யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை தலைவர் கலாநிதி எஸ்.ரகுராமும் யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ஏ.சண்முகதாஸும் யாழ். பல்கலைக் கழக மேநாள் ஊடக விரிவுரையாளார் கிருத்திகா தர்மராஜாவும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் தலைவராக பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஆலோசகர் ஏ.ஜீவா போல் அ.ம.தி அடிகளாரும் நிகழ்ச்சி அறிவிப்பாளராக கிறிஸ்துராசா ஜெகனும் அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்தவராக யாழ் பல்கலைக் கழக மேநாள் ஊடக வருகை விரிவுரை யாளர் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஊடக வருகை விரிவுரையாளார் மற்றும் இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் இணைப்பாளர் அருள்திரு ரூபன் மரியாம் பிள்ளை அடிகளாரும் செயலாற்றினர். மேற்படி நிகழ்வில் 35 இளங்கலைமாணி மற்றும் முதுகலைமாணி பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

தலைவர் அறிமுக உரையை அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் நிகழ்த்தினார். அருள்திரு ஜீவா போல் அ.ம.தி அடிகளார் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2000ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காலம் முதல் அதன் ஆலோசகராக பணியாற்றி நிலைய செயற்பாடுகளில் சிறப்புப் பணியாற்றி வருகிறார். இவர் அமலமரித்தி யாகிகளின் மேநாள் வடமாகாண முதல்வர் ஆவார். யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர் அங்கு வருகை விரிவுரையாளராக 12 ஆண்டுகள் பணியாற்றியவர். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிலையமான பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் ஊடகவியல் முதுகலைமாணி பட்டத்தை இன்று பெறுகிறார். கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவு ரையாளராக இற்றைவரை பணியாற்றி வருகிறார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2000ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் பெயரில் ஊடகவியற் பணிகளை ஆற்றுவதற்காக அமைக்கப்பட்டது. போராட்ட காலம் என்றபடியால் பணிகள் மட்டுப்படுத்தப் பட்டிருந்த போதிலும் 2000ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுக்குள் 12 ஊடகவியல் தமிழ் நூல்களை வெளியிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டில் இருந்து அதன் பணிகள் விரிவாக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டில் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத் தளமாக ஆரம்பிக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டு தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா கேபிள் தொலைக்காட்சி எல்.பி.என் சேவை மூலமாக ஆரம்பிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழக இணைப்புப் பெற்று ஊடகவியல் இளங்கலைமாணி ஊடகவியல் முதுகலைமாணி பட்டக்கல்வியை வழங்கத்தொடங்கியது. பலரின்வேண்டுகோளுக்குஇணங்க 2014ஆம் ஆண்டு முதல் ஊடகவியல் பாடநெறியுடன் மற்றைய பாடங்களையும். வழங்கத்தொடங்கியது. 2015ஆம் ஆண்டு 13 ஊடகவியல் இளங்கலைமாணி மற்றும் 2 ஊடகவியல் முதுகலைமாணி மாணவர்களுமாக 15 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவை நிறைவு செய்தது. இன்று 12 முதுகலைமாணி மற்றும் 23 இளங்கலைமாணி மாணவர்களுமாக 35 பேருக்கு பட்டமளிப்பு நடைபெறுகிறது. 16 மாணவர்கள் 2 முதுகலைமாணி மாணவர்களும் 14 இளங்ககலைமாணி மாணவர்களும் கல்வியை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்காலத்திட்டங்களாக 3 ஊடகவியல் நூல்கள் வருகின்ற மாதங்களில் வெளியிடப்படவுள்ளன. கத்தோலிக்க செய்தி பணியாற்றுகின்ற செய்தியாளருக்கான விருது வழங்கும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது பின்னர் தமிழ் மறைமாவட்டங்களுக்கும் விரிவு செய்யப்படலாம். ■

# ஆதரவு...

*(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஒருமாதிரி இருந்த காணி, பூமிய வித்து அந்த சம்மந்தத்தை முடிச்சு பெட்டையை வெளிநாட்டுக்கும் அனுப்பி வைச்சன். அவள் போய் தம்பியாரையும் கூப்பி ட்டாள். அவன் இப்ப ஜேர்மன் பொம்பிளையை முடிச்சு பிள்ளை குட்டியோட நல்லா இருக்குதுகள்" கற்பனையின் சந்தோசம் கண்களில் மின்ன நிமிர்ந்தாள் பாட்டி.

"ஏன் பாட்டி உங்களுக்கு வீடு இல்லையா?" கதைகேட்கும் ஆவலோடு அடுத்த வினாவை தொடுத்தான். "மண்டதீவு வீடு பிரச்சினையளுக்குள்ள தரைமட்டம் ஆச்சு. இங்க மானிப்பாய்ல வாடகைக்கு தான் இருந்தன். பிள்ளையளும் இல்லாம தனியா இருக்க பயமா இருந்திச்சு. பிள்ளையள்ட சொல்லிட்டு இங்க வந்திட்டன். இல்லத்துக்கு போகப் போறன் எண்டு சொல்லவே பேசினாங்க. புதுசா வீடு வாங்கித்தாறம் நீங்க இருங்கோ எண்டாங்க. எனக்கெதுக்குப்பா வீடு. வயசான காலத்தில எங்கள பாக்கிறதே பெரிய பாடா கிடக்கு இதுக்குள்ள வீடு வாசல பராமரிக்க முடியுமோ? நான் வேண்டாமெண்டு பிடிவாதமா வந்திட்டன். கடைசி போனில அழுது கெஞ்சினான். அவன் அழும்போது மனசு கேக்கல அவன் அவளோ பாசம் என்னில பள்ளிக்கூடம் போகும் போது நானும் அவனோட போய் இருக்க வேணும். பெரிய பொடியனா வளந்த பிறகும் தூங்கிறதுக்கு நான் பக்கத்தில வேணும் அவனுக்கு. என்னதான் சாப்பிட்டாலும் நான் சாப்பிடும் போதும் வந்து நிப்பான். என் கையால அவனுக்கு ஊட்டி விட்ட பிறகுதான் நான் சாப்பிடுவன். ம்ம்ம் என்ன பண்ண இப்ப அவங்களுக்கும் பிள்ளைங்கள் வளர்ந்திட்டாங்கள். அதுகளை ஒருமுறை பார்த்திடனும் தம்பி" கண்கலங்க கண்ணீரை வொயில் சேலை தலைப்பில் ஒற்றி எடுத்தபடி சுருக்கம் விழுந்த உதட்டோரம் லேசாக புன்னகையை வரவழைத்துக்கொண்டு ஆரூரனை பார்த்தாள் பாட்டி.

சிந்தனைகள் அவனை குழப்ப 'ஓஓஓ" என்ற அழுத்தமற்ற முனுகலோடு பாட்டியின் வாழ்க்கைகுள் இருந்து வெளியில் வந்தான். நேரத்தை பார்த்தபடி 'நேரமாச்சுப் பாட்டி நான் வெளிக்கிடப்போறேன். அதுசரி உங்க பேரென்ன? "அவசரத்தோடு எழுந்தவன் பாட்டியின் பெயரை அறியும் ஆவலோடு நின்றான். கொஞ்ச நேரம் தன்னை மறந்து சிரித்த பாட்டி "நீதான் மோனே பேர் தெரியாமலா கதச்சனி. அந்த காலத்தில ஊருக்க ஆர் புதுசா வந்தாலும் பரம்பரை வரைக்கும் விசாரிப்பம் இப்ப எங்க உங்களுக்கு நிண்டு கதைக்கவே நேரமில்லையேபா" என்றாள் சிவகாமி பாட்டி.

பாட்டியின் வழியனுப்புதல்களோடு திரும்பவும் வருவேன் என்ற உறுதிமொழியோடும் விடைபெற்றான். அன்றிலிருந்து வாராவாரம் கோயிலுக்கு போவது போல் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவகாமி பாட்டியை சந்திப்பது ஆரூரனின் வழக்கமாகிப் போனது. பலகதைகள் பேசி அனுபவங்கள் பரிமாறி அன்போடு அவர்களது உறவுப் பிணைப்பு உருவாகி பாட்டி என்று அழைத்தவன் சிவகாமி என்று ஒருமையில் பாசத்தோடு அழைக்கும் அளவிற்கு இறுக்கமாகி இன்றுவரை தொடர்ந்தும் வருகின்றது.

"எல்லாம் நல்லாத்தானே இருந்திச்சு போனகிழமை கூட போய் பார்க்கும் போது பாட்டி நல்லாத்தானே இருந்தாங்க என்னாச்சு நிர்வாகி சீரியஸ் என்று போன் பன்றாங்க. கடவுளே! பாட்டி நல்லா இருக்கனும் வாற மாதம் பிள்ளைகள் வாறம் எண்டு சொல்லியிருக்காங்க அதுவரைக்கும் ஏதும் ஆகக்கூடாது" ஆலயங்களே போய் அறியா ஆரூரனின் பலத்த வேண்டுதல்களோடு அன்னை இல்லத்தை அடைந்தான்.

வாசலில் இறங்கும் போதே அவனது மனம் பதைபதைத்தது. இருதயத் துடிப்பு எகிறியது. நடக்க தடுமாறிய கால்களை கஷ்டப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வரவேற்பறையை அடைந்தான். அங்கு அவனுக்கு முன்னரே சிவகாமி பாட்டியின் உறவினர்கள் குழுமியி ருந்தனர். பலர் அலைபேசியும் கையுமாக அவசரப்பட்டு அலைந்து கொண்டிருந்தனர். கூட்டத்தை விலக்கி பாட்டியின் அறை வாசலை அடைந்தான். அவனைக் கண்ட நிர்வாகி துக்கம் நிறைந்த குரலோடு 'வாப்பா" அழைத்துச் சென்றார். அங்கு சிவகாமி பாட்டி வாழ்க்கையின் சோகங்கள் கலைந்து நிரந்தரமாய் நிம்மதியான உறக்கத்திற்கு சென்றிருந்தாள் அவளது வலது கையில் பிள்ளைகளின் பழைய புகைப்படம் கசங்கிக் கிடந்தது.

"என்ன எண்டே தெரியல தம்பி சத்தம் சாவடி இல்லாம போய்டா. விடிய துப்பரவாக்க வந்த பிள்ளைதான் சொல்லிச்சு பாட்டி ஒருமாதிரி இருக்கானு. நானும் டொக்ரரைக் கூப்பிட்டுப் பார்த்தன். சீவன் இரவே போய்ட்டு என்டார்" நிர்வாகி சம்பவத்தை விளக்கிக் கொண்டிருந்தார். எதுவும் ஆரூரனின் காதோடு நின்று கொண்டது மூளையை எட்டவே இல்லை. அவன் மனம் பேரமைதியுள் ஆழ்ந்து போயிருந்தது. அங்கு நிலை கொள்ள முடியாமல் பின்வாங்கி அறையின் வெளியே வந்தான். 'தம்பி சொல்லிட்டான் எல்லாம் நல்லபடியா நடகனுமாம். அம்மா ஆசைப்பட்டமாதிரி ஒரு குறையும் இல்லாம சிறப்பா இறுதிச் சடங்கு இருக்கனும், என்ன செலவானாலும் பரவாயில்லை எண்டுடான். என்ன வர் மூனு நாள் ஆகுமாம் அதுதான் என்ன பண்றதென்று தெரியல" உறவுகளின் உரையாடல் காதில் விழுந்து வேதனை மிக்க சிரிப்பை உண்டாக்கியது ஆரூரனுக்கு. அங்கிருந்து மெதுவாக வெளியேறி மோட்டார் சைக்கிள்ளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் கண்கள் ஓரத்தில் காயாத ஈரத்துளிகளையும் மனதின் ஆழமான துயரத்தையும் மீறி ஏதோ ஒரு நிம்மதியும் ஆத்மதிருப்தியும் அவனுள் குடியேறி இருந்தது. ■

# போதைப் பொருளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கிறது அரசு

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, பெப்.16

**பாடசாலை மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் போதைப்பொருள் பாவனையை முற்றாக இல்லாதொழிக்க அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பிரஜைகளின் குழந்தைகளை கவனிக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

பாடசாலை மாணவர்களின் கல்வியைச் சீர்குலைப்பதில் போதைப் பொருள் பாவனையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதனால் அதனை முழுமையாக நிறைவுக்கு கொண்டுவர நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக்கு பாடசாலை மாணவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாணவர்களின் நலன் கருதி அரசாங்கம் வழங்கும் புலமைப் பரிசில்களை மாணவர்கள் பயனுடையதாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்- என்றார். (எ)



## சித்திவிநாயகர் கல்லூரிக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

மன்னார், பெப். 16

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் தொழில் நுட்பகூடத்துக்கென்று ஒரு தொகுதி உபகரணங்கள் நேற்றுமுன்தினம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. மன்னார் வேள்ட் விஷன் லங்கா அமைப்பு அவற்றை வழங்கியது.

அவற்றைக் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ரி.தனேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் வேள்ட் விஷன் லங்கா அமைப்பின் முகாமையாளர் எஸ்.பி.பிறேமச்சந்திரன், திட்டப் பணிப்பாளர் எம்.உதயகுமார், மன்னார் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சுகிர்தன், தொழில் நுட்பப் பிரிவு பொறுப்பாசிரியர் துரைராஜா ஜோன்சன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (த-56)

## பளைக் கோட்டத்துக்கு அதிகாரி நியமனம்

பளை,பெப். 16

கிளிநொச்சி கல்வி வலய பளைக் கல்விக் கோட்ட அதிகாரியாக கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய பிரதி அதிபர் தி.திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். பளைக் கோட்டக் கல்வி அதிகாரியாக பணியாற்றிய ஐ.குகானந்தராஜா கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்றுச் சென்றமையை அடுத்து வெற்றிடத்துக்கு வலயத்தில் முன்னர் விவசாய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் பணியாற்றி அதன் பின்னர் பிரதி அதிபராகக் கடமையாற்றிய தி. திலீபன் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## செயற்பட்டு மகிழ்வோம்



கிளிநொச்சி சேரன்பற்று சி.சி.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பாட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக, பழைய மாணவியும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமான திருமதி.ச.சிவநீதீஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி.ரேணுகா ஜீவரட்ணம் கௌரவ விருந்தினர்களாக, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இ.செல்வராசா, கரந்தாய் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இ.வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களும் பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ந)


## கலைஞர்களுக்கு கலாவிபூஷண விருது

யாழ்ப்பாணம்,பெப்.16

சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தால் கலைஞர்களுக்கு தேசிய கலாவிபூஷண விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுக்கு ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்கும் ஆண் ,பெண் இரு பாலரும் எவ்வயதினரும் விண்ணப்பிக்கலாம்.

திரைப்படம், ஊடகம், இசைத் தயாரிப்பாளர், இயக்குநர் நடிகர், நடிகை, பாடகர் ,பாடகி, அறிவிப்பாளர், கவிஞர், எழுத்தாளர், நடனத்தாரகை, புகைப்படக் கலைஞர், சிற்பத்துறை, பாரம்பரியக் கலைகள், நூலாசிரியர், நாட்டுக்கூத்து, பரதம், இசை, குறுந்திரைப்படம் மேடை நாடகம், வீர விளையாட்டுக்கள் உள்ளிட்ட கலைகளில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவ் விருது வழங்கப்படவுள்ளது. (ஐ)



## கலாசார மண்டபத்தின் கட்டுமானம் இழுபறியில்

### *விரைவில் முடிக்குமாறு மக்கள் கோரிக்கை*

வவுனியா, பெப். 16

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டக் கலாசார மண்டப கட்டடப் பணிகளை நிறைவுசெய்து விரைவில் திறந்து வைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கட்டடப் பணிகள் ஆரம்பித்த 6 ஆண்டுகள் கழிந்த நிலையிலும், கட்டுமானப் பணிகள் நிறைவடையவில்லை. இந்த நிலையில் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியிலுள்ள கலாசார மண்டபத்தில் கலாசாரச் சீர்கேடுகள் இடம் பெறுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மக்களின் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் மற்றும் சன சமூக நிலைய அமைப்பினரின் கூட்டங்களை நடத்த இடமில்லை. இதனால் மரநிழல் அல்லது தற்காலிக, குறைந்த வசதியுடைய முன்பள்ளிக் கட்டடத்தில் இவை நடத்தப்படுகின்றன. சகலரும் கலந்துகொள்ளக்கூடியதாக இங்கு இடவசதியும் போதாது.

எனவே கலாசார மத்திய நிலையத்தைச் சீரமைப்பதன் மூலமாக கலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், பொது மக்கள் ஒன்றுகூடி கூட்டங்கள் நடத்தவும் வசதியாக விரைவில் கட்டடத்தைத் திறந்துவைப்பதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-402)

## செயலமர்வு

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தும் நோக்குடன் உள்ளூராட்சி மன்றங்களின் தொலைநோக்கு மறுசீரமைப்பு தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் விடுதியில் இந்தச் செயலமர்வு இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மு.சுலோச்சனா அறிவித்துள்ளார். (ஐ-9)

## பொங்கல் விழாவும் கலைஞர் கௌரவிப்பும்



முல்லைத்தீவு,பெப்.16

கற்சிலைமடு பரந்தாமன் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் பொங்கல் விழாவும், கலைஞர் கௌரவிப்பும் பண்டார வன்னியன் உருவச் சிலை வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில், பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன. தொடர்ந்து பண்டார வன்னியன் வரலாற்று நாடகக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் 15 பேருக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-500)

## சஜித்தின் தனி வழி பயணம் சிறந்ததல்ல

### கோத்தாபயவுடன் இணையவும் விடோம் என்கின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, பெப்.16

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருக்கின்றமையால் பிறிதொரு கட்சியை ஆரம்பிப்பது தலைமைத்துவப் பண்புக்குப்பொருத்தமானதாக இருக்காது. இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமைத்துவம் மற்றும் சின்னம் தொடர்பான முரண்பாடுகளால், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தற்போதுள்ள நிலைவரத்தை நோக்கும்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க. இரு குழுக்களாகப் பிரிந்தே போட்டியிடும்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சஜித் பிரேமதாஸ பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று சஜித் தரப்புக் கூறிக் கொண்டிருக்கின்றது. இதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் இணங்காது-என்றார். (எ-22)

## எம்.ஜி.ஆர். பிறந்த தினம்



சங்கானை,பெப்.16


தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 103 ஆவது பிறந்தநாள் நிகழ்வு வல்வெட்டித்துறையில் அண்மையில் ஆதிகோவிலடி எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தால் கொண்டாடப்பட்டது. மன்றத் தலைவர் தி.ஜெயராஜ் தலைமையில் வல்வெட்டித்துறையில் உள்ள எம்.ஜி.ஆர் சதுக்கத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் 200 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், சிறப்புத்தேவையுடையோருக்கு ஆடைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளிகள் கௌரவிக்கப்பட்டனர். (ஜ)

# பதிவு செய்த கூட்டணியே தேர்தலில் களம் இறங்கும்

## மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.16

இதயம், யானை ஆகிய சின்னங்கள் இல்லை என்றால் அன்னப் பறவையை ஏற்றுக் கொள்வோம். ஆனால் தேர்தலை பதிவு செய்யப்பட்ட கூட்டணியிலேயே எதிர்கொள்வோம். கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாசவும், கூட்டணியின் தலைமைக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளுடன், கூட்டணிப் பங்காளிக் கட்சித் தலைவர்களும் இடம்பெறுவோம்.


இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: பதிவு செய்யப்பட்ட கூட்டணி, கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாச, தலைமைக் குழுவில் பங்காளி கட்சி தலைவர்கள், பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, வேட்பாளர் தெரிவுக்குழுத் தலைவர் சஜித் பிரேமதாச என்னும் எங்கள் குறைந்தபட்ச நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், சஜித் பிரேமதாச தலைமையிலான பெரும்பான்மை ஐ.தே.க. அணியினரும், அனைத்துப் பங்காளி கட்சிகளும், இணைந்து நாம் ஏற்கனவே பதிவு செய்து, தயார் நிலையில் வைத்திருக்கும் எமது கூட்டணியின், "இதயம்" சின்னத்தில் பொது தேர்தலை சந்திப்போம்.

இதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

இந்த நிலைப்பாட்டிலேயே சஜித் பிரேமதாசவும், அனைத்து கூட்டணி பங்காளி கட்சி தலைவர்களும் இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டணியில் பிரதான கட்சி. அந்தக் கட்சி பிளவுபடக்கூடாது.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவு படக்கூடாது என்ற சஜித் தலைமையிலான எமது ஒட்டுமொத்த நல்லெண்ணத்தை எவரும் எமது பலவீனமாகக் கருதி எம்முடன் விளையாட முயலக்கூடாது. அப்படியான விளையாட்டு முயற்சியில் எவரும் ஈடுபட்டால், சஜித் பிரேமதாச தலைமையிலான எமது கூட்டணியின் இதயம் சின்னத்தில் நாம் நிச்சயம் களமிறங்குவோம்.

அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நிறைவடைந்து விட்டன. எங்களுடன் முரண்படுகின்றவர்கள் யார் எனமக்களுக்கு தெரியும். ஐ.தே.க. பிளவுப்படுமானால் அதற்கான முழுபொறுப்பை எம்முடன் முரண்படுகின்றவர்கள் தான் ஏற்க வேண்டும். இவ்வாறு நடந்து கொண்டு ஆளும் அரசை மகிழ்ச்சியடைய செய்து, அரசுக்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொடுத்து விட வேண்டாம் என சம்பந்தப்பட்டோரை கேட்டுக்கொள்கிறேன். என்றார். (ஏ)



மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 103 ஆவது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் , பாசையூர் கடற்கரையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் கடந்த வாரம் நடைபெற்றன. யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் சிலைக்கு மாலை அணிவித்தமையைத் தொடர்ந்து, உலர் உணவுப் பொதிகள் மற்றும் உடைகள் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (க-23)


### பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

குருநகர்,பெப்.16

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள யாழ். சென்றோக்ஸ் சனசமூக நிலைய வருடாந்தப் பொது கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ் சென்றோக்ஸ் சனசமூக நிலைய படிப்பக மண்டபத்தில் தலைவர் க.திருவம்பலம் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஜ-51)

# கொழும்புத்துறை இந்துவின் இல்லமெய்வன்மைப் போட்டி





கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. பாடசாலை முதல்வர் க.க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ். கல்வி வலயத்தின் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் சசிக்குமார் சிறப்பு அதிதியாகவும் யாழ். மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

முதலில் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய முன்றிலில் இருந்து விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றல் இறைவணக்கம் கொடியேற்றம் என்பன இடம்பெற்று விளையாட்டு போட்டிகள் ஆரம்பமாகின. தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-17)



முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (க-222)

## ST. JOHN'S ACADEMY & COLLEGE OF TECHNOLOGY

TVEC Centre Registration No. P25/0076
Available Courses

கல்வியாண்டு - 2020 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் வகுப்புக்கள் நடைபெறும்

- Information and Communication Technology NVQ Level – 05 Diploma
- Pre School Teacher NVQ Level - 03 & 04
- Spoken English For office Staff & A/L Students (மாலை நேரம்)
- Spoken Sinhala For office Staff & A/L Students (மாலை நேரம்)

முழுநேர கற்கை நெறிகள் (Full Time courses)

- Pre School Teacher NVQ Level - 03 & 04
- Computer Hardware Technician Level - 03 & 04 (Full Time)
- Information and Communication Technology NVQ Level – 03& 04 (Full Time)

Limited number of students will be admitted.

| | |
|---|---|
| Issue of Application Forms | : 17. 02. 2020 |
| Closing Date for Applications | : 02. 03. 2020 |
| Course Commencement | : 21.03.2020 |
| (Admission Test on 14th March 2020) | |

For more details, contact:
The Manager,
St. John's Academy & College of Technology
446 Main Street, Chundikuli, Jaffna.
T.P.No:- 021 221 6680 , 0777292199
E Mail: stjohnsaccademy@sltnet.lk

(in 12583) (13.17)



# முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD முறைப்படி வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்
யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

**SINGER FINANCE**

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance



விளம்பர தொடர்புகளுக்கு உதயன் advt@uthayan.com, 021 493 1111



SINCE 1960
ලංකා සංස්ථා වානේ
தேசத்திற்கு வலுவூட்டும் உருக்குக் கம்பி

ISO 9001: 2015
ISO 14001: 2015
SLS 375




பழைய இரும்பு கலக்கப்படாத ஒரே உருக்குக் கம்பி

QTBARS

www.ceylonsteel.com
Ceylon Steel Corporation Limited,
Oruwala, Athurugiriya.
Tel: 011 220 6000



DAMRO

Opportunity to develop your career as a

# SHOWROOM MANAGER...

DAMRO is recognized as the largest manufacturer of furniture in South Asia, having altogether 260 showrooms in Sri Lanka and in neighboring India. The group also possess two major plantation companies and the latest addition to the conglomerate being "Marino Beach Hotel" and the "Marino Mall".

With the recent expansions in the showroom network in **Northern area**, we seek to recruit a dynamic & hard working individual as a **Management Trainee** from **Vavuniya, Medawachchiya** or **Anuradhapura** area.

Upon successful completion of the training period, based on individual performance, he will be placed as a showroom manager with an attractive remuneration package.

**Applicant should :**

- ☑ have a degree or part qualification in CIM/SLIM or equivalent
- ☑ be a male below 30 years of age.
- ☑ be fluent in Tamil & English languages
- ☑ have flair for customer relations & good PR skills.
- ☑ have willingness to work long hours and commitment to achieve targets.

**Total earnings within the training period will not be less than Rs. 50,000/- p.m**

If the above position is of interest to you, please forward a detailed resume with contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

**The Human Resources Manager,**
**DAMRO**
**No: 361, Kandy Road,**
**Nittambuwa.**
**E-mail: hrm@damro.lk**

**காணி விற்பனைக்கு**

கொட்டமனை வீதி, கம்பர் மலையில் அமைந்திருக்கும் 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

கந்தசாமி சுப்பிரமணியம்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
021 226 3176

**காணி விற்பனைக்கு**

யாழ் தொட்டிலடி சந்திக்கு அருகாமையில் விளான் வீதியில் வீதியோரமாக 14 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 077 245 3990

**எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை**

- ஸ்பெயாபாட்ஸ் தெரிந்தவர்கள் பழகுபவர்கள் } பெண்கள்
- சேவிஸ் வேலை தெரிந்தவர்கள் பழகுபவர்கள் } ஆண்கள்
- கிளினிங் வேலை

இல. 102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5202

**சுப்பர்மார்க்கெற்றுக்கு வேலையாள் தேவை**

- விற்பனையாளர்
- கணக்காளர்


} பெண்கள்

இல. 102, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5202









## வகுப்புக்கள்

A/L 2021 ICT Past Paper and Model Paper Classes @ Kannathiddy, Jaffna
உயர்தரம் **2021** தகவல் **தொழில்நுட்ப** பாடத்திற்கான கடந்த கால மாதிரி வினா - விடை வகுப்புக்கள் கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தில்.

தொடர்புகளுக்கு
077 724 0707, 071 864 4838

## சாரதி தேவை

யாழ்.நகரில் உள்ள வீடு ஒன்றுக்கு கார் (Car) மற்றும் வான் (Van)சாரதி தேவை.

**077 773 0567**

## இயந்திரம் விற்பனை

டென்மார்க் தயாரிப்பான உழுந்து உடைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு.

**071 906 7287**

## வேலையாள் தேவை

நாதன் உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு: **076 6620 227**

## மணமகள் தேவை

யாழ் இந்து 1977 உத்திரட்டாதி கி.பா 17 ¼. உயரம் 5'2" சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.

நேரடித் தொடர்புக்கு: **076 449 6275**

## தேவை

வெள்ளவத்தையில் APARTMENT இல் சுத்திகரிப்பு வேலைக்கு ஆண்கள் தேவை, சம்பளம் 30,000/= தங்குமிட வசதி வழங்கப்படும்

**077 35 40 632 , 077 77 33 122**

## அலுவலக கட்டடம் வாடகைக்கு

மல்லாகம் - தெ/புன்னாலைக்கட்டுவன் 764 பஸ் வீதியிலுள்ள புதிய 5 மாடிக்கட்டடத்திலுள்ள இரு வேறு வேறு மாடிக்கட்டடம் நிறுவன அலுவலக உபயோகத்துக்கு உடன் வாடகைக்குண்டு.


**(Whatsapp உட்பட) 077 344 4801**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை கணக்கர் சந்திக்கு அண்மையில் மூன்றே முக்கால் பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு.
20 காய்க்கும் தென்னைகளும் நல்லதண்ணி கிணறும் உண்டு.

**077 725 0587, 076 835 9276**

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்

(பாலா - பெயின்ரர்)

காசிப்பிள்ளையார் கோயிலடி. தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும். மட்டுவில் வடக்கு. சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம் (பாலா - பெயின்ரர்) கடந்த **(13.02.2020)** வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பவளக்கொடி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பெயின்ரர்)- சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரதீபன் (லண்டன்). காலஞ்சென்ற கஜதீபன், கஜனா. துளசிகா (ஆசிரியர். கச்சாய் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷாந்தன் (UKS- Multi Centre- Tellipalai). ரேணுகா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும். ஷஜானன். ஜிதுஷன் ஆகியோரின் தாத்தாவும் ஆதுராவின் அப்பப்பாவும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி. இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை இன்று **(16.02.2020)** ஞாயிற்றுக் கிழமை மு.ப **10** மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்று ஊரிப்பிட்டி இந்துமயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

**இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

மட்டுவில் வடக்கு.
077 378 7984, 077 679 0603

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி சபாரத்தினக்குருக்கள் அலமேலு அம்மா (அமிர்தாம்பிகை)



மலர்வு 14.05.1945 — உதிர்வு 14.02.2020

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி அலமேலு அம்மா 14.02.2020 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் கிருஷ்ண ஐயர் - இலட்சுமி அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், நடராஜ ஐயர் - கமலாம்பிகை அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சபாரத்தினக் குருக்களின் அன்பு மனைவியும், றஞ்சனா, சுகர்ணா (உதவித் தபால் அதிபர், சுன்னாகம்), நிரோசனா (பிரான்ஸ்), ஸ்ரீசந்தனக் குருக்கள் (கொக்குவில் - ஜெயா ஐயா), ஸ்ரீகுகந்தனசர்மா (குகன் ஐயா - புன்னாலைக்கட்டுவன் குளத்தடி நாச்சிமார் கோயில்) ஆகியோரின் அன்புத் தாயும், பூர்ணானந்தசர்மா (பெரியகல்லாறு), பாலகிருஷ்ண சர்மா (பிரான்ஸ்), வத்சலா, ஜெயராமக் குருக்கள் (தும்பாலை), மஞ்சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2020) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலடி ஒழுங்கை,**
**ஊரெழு மேற்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

021 224 0949, 077 617 6529 (சுகர்ணா)

## தேவை

நெல், தேங்காய், கொப்பறா, கணினி அறிவு உள்ளவர்கள், கூலியாள்கள் தேவை.

தொடர்பு: **077 772 2215**

**29/9, ராஜா மில் ஒழுங்கை, கொக்குவில்.**


## தோட்டக்காணி விற்பனைக்கு

ஏழாலை மத்தி J/206 GS பிரிவு தோப்பில் சோலையன் சீமா என்னும் சுற்றிவர முள்ளுக்கம்பி வேலியிடப்பட்ட குழாய்க் கிணற்றுடன் கூடிய பிரதான வீதியில் இருந்து தார்சாலை வசதி உடைய 6 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

**077 630 6697 - ஜெகன்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 05 . 1938



மறைவு 13 . 02 . 2020

### வேலுப்பிள்ளை சின்னராசா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும். எம்.எஸ்.வீதி. கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னராசா கடந்த 13.02.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும். காலஞ்சென்றவர்களான முருகேசு - இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும். செல்லம்மாவின் அன்புக் கணவரும். நடராஜா (மலேசியா). காலஞ்சென்றவர்களான தங்கராசா. பூமணி (மலேசியா) மற்றும் செல்வமணி. செல்லக்கண்டு. அற்புதராணி. தியாகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும். காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சாந்தினி. சிவநேசன். சாரதாதேவி (சுவிஸ்). ராகவேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். ஜெயசீலன். புஸ்பலலிதா. ராஜசேகர் (சுவிஸ்). திலகவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும். ஜெயஆனந்தி. காலஞ்சென்ற சாந்தரூபன். பிரசாத் (சுவிஸ்). பிரதீபன். சாந்தன். சந்தோஸ். கஜராம் (சுவிஸ்). கபில்ராஜன். விதுஷா (சுவிஸ்). ஜதுஷன் (சுவிஸ்). ஜகிலா (பிரான்ஸ்). ஆருசன் (பிரான்ஸ்). வசந்தன். ஜிவிந்தன் (சுவிஸ்). பிரபாலினி (சுவிஸ்). காலஞ்சென்ற விஜி ஆகியோரின் பாசமிகு பேரனும். சாம்போல். சாமுவேல். அபிலேஷ். அஷ்வின் (சுவிஸ்). அஸ்மிதா (சுவிஸ்). பிறிஸ்கில்லா. மோனிசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2020) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**எம்.எஸ்.வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

077 436 3992

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 .. 01 .. 1949



இறப்பு 14 .. 02 .. 2020

### செல்வநாயகம் பாலச்சந்திரன்

(Retired Draughtsman, Colombo Municipal Council)

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும் இல.66. ஸ்ரீ கதிரேசன் வீதி. கொழும்பு-13ஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வநாயகம் பாலச்சந்திரன் (14.02.2020) வெள்ளிக் கிழமையன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி விமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் திருபரன் (Firmware Engineer, Verb Surgical Inc, California, America). திருமதி கலைமதி சிவரூபன் (Vice President / The One P.E Group LLC, Taxas, America). கிருபரன் (Assistant Manager - Senior Data Scientist, John keels Holdings PLC) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி கர்ஜினி திருபரன் (QA Engineer,Welocalize California, America), நவரத்தினராஜா சிவரூபன் (President / CEO The One P.E Group LLC, Texas, America). திருமதி கௌசிகா கிருபரன் (Assoicate Tech Lead, Unicorn Soloutions Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வி சயனிகா திருபரன். செல்வன் நேத்திரன் சிவரூபன். செல்வன் யதுசன் கிருபரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (15.02.2020) சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அன்னாரது இல்லத்தில் (இல.66. ஸ்ரீ கதிரேசன் வீதி. கொழும்பு-13) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் The Respect (by Jayaratne's) (பௌத்தாலோக மாவத்தை. கொ... கொழும்பு-8) பொரளை இந்து மயானத்திற்கு முன்னால் உள்ள மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிமுதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் - 077 1965512

## அறை வாடகைக்கு

கல்வியங்காடு கட்டப்பிராய் பகுதிகளில் படிக்கும், வேலைப்பார்க்கும் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலில் அறைகள் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 369 8553, 077 769 8553**

## வாடகைக்கு

யாழ் நகரில் (ஆனைப்பந்தி) கட்டடத்தொகுதி வாடகைக்கு மேல் மாடி 3 கடைகளும் கீழ்மாடி 3 கடைகளும் ஒரு களஞ்சிய அறையும் வாடகைக்கு உண்டு. இரு வேறு நிறுவனங்களிற்கு பிரித்துக்கொடுக்கும் வசதி உண்டு.

தொடர்புகளுக்கு - 076 831 3674

## கடை விற்பனைக்கு

இல.226, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கடை விற்பனைக்கு (கிருபா லேணர்ஸ்)

**தரகர் தேவையில்லை.**

தி.யோகம்மா

021 222 5048, 077 928 7846

## வேலையாள் தேவை

உணவகத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள சமையல் உதவியாளர், Tea Maker, ரொட்டி, ரைஸ், தயாரிப்பாளர், Supplier, கணினி அனுபவமுள்ள System தில் bill போடத் தக்க **Cashier** தேவை. தங்கிநின்று வேலை செய்யக்கூடிய ஆண்/பெண் (இருபாலரும்) தேவை

**தொடர்பு: 077 841 5689**

## மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒருசதுர அடி 45 ரூபா

**தொடர்பு: 077 334 1281**

### கூட்டுறவு காப்புறுதிக் கம்பனியில் பதவிவெற்றிடங்கள் உள்ளது

1)எழுதுவினைஞர் - சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை

2) அணித்தலைவர்கள் - Team Leaders

(1.2 ஆகியவற்றுக்கு அடிப்படைச்சம்பளம் வழங்கப்படும். மற்றும் நிரந்தர நியமனம்) (EPF, ETF)

3) அலுவலக உதவியாளர்

நேர்முகத் தேர்வு 17ம், 18ம் திகதிகளில் (17.18/02/2020) அன்று காலை 9.00am - 3.00pm வரை இல.570, வைத்தியசாலை வீதி, 2ஆம்மாடி,யாழ் கிளையில் இடம்பெறும்.

**076 711 2102, 071 023 2473**

## விற்பனைக்கு

மணப்பந்தல் விற்பனைக்குண்டு

**தொடர்பு: 077 113 6745**

## வேலைவாய்ப்பு

கொக்குவில் கிழக்கில் புதிதாக ஆரம்பிக்கபடவுள்ள மூலிகை மருத்துவ நிலையம் ஒன்றுக்கு நேர்ஸ் உடனடியாக தேவை. பயிற்சியும் சான்றிதழும் வழங்கப்படும்.

தொலைபேசி: **077 912 8944**

## மந்திகை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம்

### வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பதற்கு தகுதியான விண்ணப்பதாரரது விண்ணப்பங்களை கோருதல்

இவ் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க காரியாலயத்தில் 17.02.2020 தொடக்கம் 27.02.2020 வரை சனி, ஞாயிறு போயா நாட்கள் தவிர்ந்த காலை 9.00 - 12.00 மணி வரையுள்ள காலத்தில் நோயாளர் நலன்புரிச்சங்கத்தில் 25 ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய விண்ணப்பங்களை மூடிய தபாலில் மந்திகை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கம் எனும் விலாசத்திற்கு 29.02.2020 பிற்பகல் 2 மணிக்கு முன் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## INVITATION

JAFFNA COLLEGE · CEYLON

*A service of thanksgiving for our Jubilarians*

**Mr.A.C.Francis**
**Miss.J.G.Ganesan**
**Mr.M.Partheeban**

will be held on
Wednesday, February 19th, 2020
at 11.30 a.m
in the
Cathedral, Vaddukoddai.

*Alumni, Friends and Well wishers are cordially invited.*

**Principal**

## தொழிற்கற்கைகள் நிறுவனம்

திருநெல்வேலி யாழ்ப்பாணம்

பட்ட, பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2020 (Topup/3 years)

**பட்டக்கற்கைகள்**

- B.A in English
- B.Sc in ICT/ Computer Science
- B.Sc in Nursing (Training 6 months)
- B.Sc in Psychology
- BBA in Management
- BA in Education

UGC Approved

**பட்ட மேற்படிப்புக்கற்கைகள்**

MA, MBA, M.Sc, M.Ed

- கற்கைகள் யாவும் UGC அங்கீகாரமுடையது
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக விபரங்களை அலுவலகத்தில்/ இணையத்தளத்தில் பாரவையிட முடியும்.
- கற்கைகள் யாவும் நிபுணத்துவமிக்க பேராசிரியர்கள் வழிநடத்தலுடன் ஆய்வுக்கற்கைகள் உள்ளடங்கியது.
- பட்டமளிப்பு ஒவ்வொரு வருடமும் BMICH இல் இடம்பெறும்

பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று கருத்தரங்கில் கலந்து கொள்ளமுடியும்

**கற்கை வழிகாட்டல் கருத்தரங்கு 21.02.2020 வெள்ளி - 10AM**

### தொழில்சார் கற்கைகள் நிறுவனம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

கிளைகள் - சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி

T.P 021 434 0229/ 077 602 1794

## கடைகள் வாடகைக்கு

யாழ்/ பல்கலைக்கழக சூழலில் கடைகள் வாடகைக்குண்டு. கிழமை நாட்களில் 5 மணிக்கு பின் பார்வையிடமுடியும்

T.P 076 685 2529

## மணமகள் தேவை

லண்டன் PR, 28 வயது சைவ கௌரவ குடும்பம் 2ல் சூரியன் செவ்வாயுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P 077 172 5554

## மரண அறிவித்தல்

நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன். (II தீமோ 4:7)

மலர்வு 08 . 05 . 1924



உதிர்வு 14 . 02 . 2020

### மரியப்பிள்ளை ஜோசவ் (முத்தம்மா)

மிருசுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியப்பிள்ளை ஜோசவ் கடந்த (14.02.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசவ் அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் சிசிலியா (கனடா), மாசிலாமணி ஆகியோரின் மூத்த சகோதரியும் லில்லி, றீற்றா, றோசா, திவ்வியநாயகம் (றஞ்சித்), திரவியநாயகம் (தாசன் - தே.உ.கூ.தா), வதனா, நிர்மலா ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், மகான் அஸ்பரி, அழகராஜா மற்றும் கென்றி, சிவகணநாதன், றோஸ், அருந்ததி ஆகியோரின் மாமியாரும் டில்சான் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டடங்கள் திணைக் களம்), றொசான், டேவிட் (ஆசிரியர், மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), லக்சன் (கனடா), நிசாந்தன், டிலான், டினோஜன், ஜெனிஸ், றொயிஸ், லதுசன், அல்வின்ஸ், டிவைன்ஸ், ஜெயந்தி (ஜேர்மன்), றொசாந்தி, ஜெனிற்றா, டினோ (ஆசிரியை), நிசாந்தினி, றொசி, லக்சிகா, கிருசா, றொமி, றஜித்தா ஆகியோரின் பேர்த்தியாரும் சனாஜா, ஒபேசன், சுவெஸ்னா, அஸ்வின், ஜதுசியா ஆகியோரின் பூட்டியம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் நடைபெற்று பின்னர் மிருசுவில் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 774 3057 — தகவல்: குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் செல்லப்பா தம்பிப்பிள்ளை

தோற்றம் 08 . 08 . 1934



மறைவு 17 . 01 . 2020

*திதி: சப்தமி*

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது
உங்கள் நினைவலைகள் ஆறாத்துயர்
எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே!
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்த முகம்
தோன்ற கண்கள் நிறைகிறது கண்ணீர் சொரிகிறது
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம்முள்ளே நீங்கள் எந்நாளும் உ... உயிர் வாழ்கின்றீர்கள்
இனிய நினைவுகளும் இழந்த வலியும் வேதனையும்
இறுதி மூச்சுவரை எம்முள் சுமப்போம்!!!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

உயர் கல்வி நிறுவனமொன்றில் பாவித்த Lecture chairs, white boards, typist chairs, Computer tables, Monitors, C.P.U, நீர் சுத்திகரிப்புயந்திரம், Office Safe என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 071 969 4117

## திருமண சேவை

சகல வகையான உள்நாடு, வெளிநாடு அரச உத்தியோகம், டொக்டர், எஞ்சினியர் மணமக்களும் எம்மிடம் உண்டு.

### விசா ஆலோசனை சேவை

சகல வகையான வெளிநாட்டு விசாக்களும் எம்மால் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

- ருமேனியா வேலை விசா
- மலேசியா வேலை விசா
- கனடா வேலை விசா
- மற்றும் சலக நாடுகளுக்குமான சுற்றுலா விசா

**Ticketing** தெரிந்த பெண்கள் வேலைக்குத் தேவை.

(SS12931)(1.17)

**K.K.S.Rd, யாழ்ப்பாணம். 021 221 1385, 077 295 3667, 077 532 5379**

## GERMANY NETHERLAND SWISS

போன்ற நாடுகளில் படிப்பதற்கான **College மற்றும் University Admission Bank Balance, Sponsor Letter** ஏற்பாடு செய்து தர...

ஆரம்ப தகைமை O/L மட்டும் | முற்பணம் இல்லை | NO IELTS | 2020க்கான விண்ணப்பமுடிவு 20th Feb 2020

- Visiting Visa / Dependent Visa போன்ற விசாக்களுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு Sponsor Letter / Hotel Booking போன்றவை ஒழுங்கு செய்தல். (குடும்பத்தோடு போவதற்கும் / வெளிநாட்டில் ... இருக்கும் குடும்பத்துடன் போய் சேருவதற்கும் விண்ணப்பித்துத் தருதல்)
- விண்ணப்பிப்பவர்களுக்கு Germany / Netherland / Swiss போன்ற நாடுகளில் தொழில் பெற்றுத் தருதல்.
- முதல் விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 21 நாட்களுக்குள் மீள விண்ணப்பித்துத் தருதல்.
- Student Visa விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு Part time Job, PRக்கு விண்ணப்பிக்க வழிசெய்தல்.
- குறைந்த கட்டணத்தில் விண்ணப்பித்துத் தருதல்

17 வருட சேவை | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் Reg. No. PV00210651

**NW SKYLINE INTERNATIONAL COLLEGE (PVT) LTD** ☎ 077 33 47 332, 011 59 44 243

# 42 லட்சம் கிலோ நெல் வடக்கில் கொள்வனவு



யாழ்ப்பாணம்,பெப்.16

வடக்கு மாகாணத்தில் இதுவரை சுமார் 42 லட்சம் கிலோ கிராம் நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பிரிவினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன், நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லைக் கொள்வனவு செய்து வருகிறது.

அரசின் நிர்ணய விலைக்கு அமைவாக, நெல் சந்தைப்படுத்தும் சபை, விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வருகிறது. இதற்கு உதவியாகத் தற்போது இராணுவத்தினர் இந்தச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாதுகாப்பு படைத்தலைமையகங்களில் சேவை புரியும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன், நெல் சந்தைப்படுத்தும் சபைக் கிளை மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்ட செயலகங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்கும் முகமாக, அவர்களால் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான விரைவான ஒத்துழைப்பை வழங்குமாறு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

இராணுவத் தலைமையகத் தகவலின் அடிப்படையில் கடந்த புதன்கிழமை வரை ரூபா 209,620,500 பெறுமதியில் 41 லட்சத்து 92 ஆயிரத்து 410 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கீரிச்சம்பா, சிவப்பு நெல், பெரிய சிவப்பு நெல் ஆகிய நெல் வகைகள், நெல் சந்தைப்படுத்தும் சபை மற்றும் மாவட்ட செயலகங்களால் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. (க-7)



## சவேந்திரவின் மீதான தடை தமிழருக்கான முன்னேற்றம்

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.16

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியத்தினுள் நுழைவதை அமெரிக்கா தடை செய்து கட்டளை பிறப்பித்துள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதிக்காகப் பல வருடங்கள் போராடியதன் விளைவால் இடம்பெற்ற சிறியதொரு முன்னேற்றமாக இதை நாம் காண்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை அரசு இனிமேலாவது சர்வதேச விசாரணைகளில் வெளிவந்த சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

போரின் இறுதிக் கட்டத்திலே இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆக்கியவற்றுக்கான ஆதாரங்களின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தின் 58ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா பொறுப்புக்கூற வேண்டியவராகின்றார்.

சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட வேளை மேற்குறித்த அதே காரணங்களின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரது நியமனத்தைக் கண்டித்திருந்தது.

போர் முடிவடைந்து ஒரு தசாப்தகாலமாகப் பொறுப்புக்கூறலைத் தட்டிக்கழித்து வந்த இலங்கை அரசுகளின் கண்களை இத்தடை திறக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (எ-22)

## கட்சியைப் பதிவுசெய்ய காய் நகர்த்தல் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப். 16

மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினைப் பதிவு செய்வது தொடர்பிலான செயற்பாடுகளை முன்நகர்த்தும் முகமாக அந்தக் கட்சியின் தலைவர் உட்பட குழுவினர் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா மற்றும் அதன் செயலாளர் நா.அன்ரனி உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் கட்சி என்ற அடிப்படையில் மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினைப் பதிவு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து அந்தச் செயற்பாட்டின் மேலதிக நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் முகமாக மேற்படி விஜயம் அமைந்ததாகக் கட்சியின் தலைவர் குறிப்பிட்டார். (ம-150)

## லசந்த கொலை வழக்கு ஜூனுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.16

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன்19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்கிசஸ நீதிவான் மொஹமட் மிஹாயில் முன்னிலையில் இந்த வழக்குநேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்களில் இரண்டாவது சந்தேகநபரான திஸ்ஸ சுகதபால வேறொரு வழக்கில் முன்னிலையானமையால் வழக்கு விசாரணையில் அவரால் முன்னிலையாக முடியவில்லை என அவர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் மூன்றாவது சந்தேகநபரான கொழும்பு தெற்கு பிராந்தியத்திற்கு பொறுப்பாக இருந்த முன்னாள் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை நீதிமன்றம் நீக்கியது.

லசந்த விக்ரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளது என்றும், அதற்கான கடிதம் சட்ட மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் மன்றுக்கு தெரிவித்துள்ளது. (எ)

## மெய்வன்மைப் போட்டி



ஏழாலை,பெப்.16

ஏழாலை தெற்கு விழிசிட்டி அமெரிக்க மிஷன் ஆரம்பப்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பா. கார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமானபா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய ஆரம்பப் பிரிவின் ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜெ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டியில் மாணவர்களின் பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெற்றன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் வெற்றிக்கோப்பைகள் என்பன வழங்கப்பட்டன. (ஐ)

## மெய்வன்மைப் போட்டி



யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்தானசி.சி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், கோட்டக் கல்வி அலுவலக அதிகாரிகள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)



# வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை அரசு!

## ஜனாதிபதி செயலகம் முன்பாக ஆசிரியர் சங்கம் போராட்டம்

**கொழும்பு, பெப். 16**

**கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தொழிற் சங்கங்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கிணங்க சுற்றறிக்கை வெளியிடவில்லை என்று கண்டித்து கொழும்பில் நேற்று முன்தினம் பேரணி நடத்தப்பட்டது.**

**கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக முற்பகல் 11 மணிக்கு பேரணி ஆரம்பிக்கப்பட்டு லோட்டஸ் வீதியூடாக ஜனாதிபதி செயலகத்தை அடைந்தது. இந்தப் பேரணியில் பல ஆயிரக்கணக்கான அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.**

ஆசிரியர், அதிபர்களுக்கு இடைக்கால சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை கடந்த 3 ஆம் திகதிக்கு முன்னர் சுற்றறிக்கையாக வெளியிடவேண்டும் என்ற கோரிக்கை தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் சுற்றறிக்கை வெளியிடப்படாத நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்வோம் என்ற முன்வைப்புக்கிணங்க பேரணி நடைபெற்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

பேரணி ஜனாதிபதி செயலகத்தை வந்தடைந்தபோது தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதியின் பிரதிச் செயலாளர் றோகண அபேரத்னவுக்குமிடையில் பேச்சு நடைபெற்றது.

2மணி நேர பேச்சின் பின்னர், இடைக்கால சம்பள அதிகரிப்புத் தொடர்பாக முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கூடி ஆராய்ந்து வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தொழிற்சங்கத்துடனும் பேச்சு நடத்தி தொழிற்சங்கத்துக்குச் சாதகமான விடயம் குறித்து செய்யக் கூடியவற்றை அறிக்கையாகத் தருவதாக உறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் வரும் 26 ஆம்திகதி நடைபெறவுள்ள சுகவீன விடுப்புப் போராட்டம் திட்டமிட்டவாறு நடைபெறும் என்றும் இடைக்கால சம்பளத் திட்டத்துக்கான சுற்றறிக்கை வெளியிடப்படும்வரை அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிடமுடியாது என்றும் செயலாளர் தெரிவித்தார்.

போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை ஆர்ப்பாராட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு செல்லுமாறு பொலிஸார் கால்களால் உதைத்துத் தள்ளினர். ஆயினும் ஜனாதிபதி செயலகம் முன்பாகவே அதிபர், ஆசிரியர்கள்கூடியிருந்தனர்.

ஜனநாயக முறையில் அதிபர் ஆசிரியர் போராடியவேளை ஆசிரியர்களை தாக்கிய பொலிஸாரின் அடாவடித்தன செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அரசு இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்றும் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (த)

# வாழ்க்கைச் செலவுப்படி வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.16

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கை செலவுப் படிக் கொடுப்பனவை மாதாந்தச் சம்பளத்துடன் இணைத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

கூட்டுறவு அமைப்புக்கள் மாதாந்த வருமானத்தில் இலாபம் ஈட்டும் பட்சத்தில் இந்த வாழ்க்கை கொடுப்பனவை பணியாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்தக் கொடுப்பனவை மாதாந்தச் சம்பளத்துடன் இணைத்து வழங்க வேண்டும் என்று கூட்டுறவுப் பணியாளர் தரப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வாழ்க்கைச் செலவுப் படி கொடுப்பனவை சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்குப் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு வைக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவுக்கு திணைக்களம் பரிந்துரைக்கவுள்ளது.

(ஐ-17)

# திருக்கேதீச்சர பாதயாத்திரை



கொடிகாமம், பெப். 16

சைவப் பெருமைகளால் மகிமைமிக்க சிவ விரதமான மகா சிவராத்திரிப் பெருநாளை முன்னிட்டு, ஆரம்பித்த திருக்கேதீச்சர திருத்தலப் பாதயாத்திரை வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை சைவசமய எழுச்சியுடன் பயணத்தைத் தொடர்ந்தது.

உலக சைவத்திருச் சபையின் ஏற்பாட்டில் இது நடைபெறுகின்றது.

உலக சைவத் திருச் சபையின் இலங்கைக்கான தலைவர் கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் ஆரம்பமான இந்தப் பாதயாத்திரையில் அடியார்கள் திருமுறை, திருவாசகம் என்பனவற்றைப் பண்ணுடன் ஓதியவாறு கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை காலை வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமான இந்தப் பாதயாத்திரை மறுநாள் வியாழக்ழமைமாலைநல்லைஆதீனத்தை வந்தடைந்தது.

இந்தநிலையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 7.45அளவில் நடைபெற்ற விஷேட வழிபாடுகளில் கலந்து கொண்ட பாதயாத்திரைக் குழுவினர் பின்னர் ஆலய முன்றிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளையும் மேற்கொண்டது. அதனைத்தொடர்ந்து நல்லூர்த் தேரடியை வலம்வந்தனர்.

அதனைத்தொடர்ந்து திருவண்ணாமலையிலிருந்து எடுத்துவரப்பட்ட சிவலிங்கம் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்திப் பவனியுடன் கூடிய பாதயாத்திரைக் குழுவினர் காலை8.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து திருக்கேதீச்சரத்தை நோக்கிப் பாதயாத்திரையைத் தொடர்ந்தனர்.

யாத்திரை செல்லும் வழியில் இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு இந்தப் பாதயாத்திரை தொடரும். மகாசிவராத்திரி நன்னாளான எதிர்வரும் 21 ஆம் திகதி காலை திருக் தீச்சர ஆலயத்தை இந்த யாத்திரை சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-159)

### திருக்கேதீச்சரத்துக்கு வவுனியாவிலிருந்து தீயணைப்புச் சேவை

திருக்கேதீச்சர மஹாசிவராத்திரி விழாவுக்கான தீயணைப்புப் படையினரை வவுனியாவிலிருந்து பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

திருக்கேதீச்சரத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள மஹா சிவராத்திரி தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் கேதீச்சரம் சம்பந்தர் மடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் இதைத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்துக்கு மிக அவசியமாகவுள்ள தீயணைப்புப் படைப்பிரிவு இன்னும் நிரந்ரமாக வழங்கப்படவில்லை. தீயணைப்புப் பிரிவை நிரந்தரமாகப் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அது கிடைக்கும் தருவாயில் சில காரணங்களால் தள்ளிப் போகின்றது. என்று தெரிவித்தார். (த-213)

# நாட்டின் பாதுகாப்பில் பிரச்சினை இல்லை!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16

இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் செயற்படுகின்ற தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக வாரந்தோறும் ஒன்றுகூடி ஆராயப்படுகின்றது.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கண்டி தலதா மாளிகைக்குச் சென்றார். அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாங்கள் வாரந்தோறும் ஒன்றுகூடி நாட்டின் பாதுகாப்பு குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உலகில் செயற்பட்டு வருகின்ற தீவிரவாத அமைப்புக்கள் குறித்தும், ஏனைய அமைப்புக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

எமக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய எமது நாட்டின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. அனைத்து பொலிஸ் நிலையங்கள், முப்படையினர் தெளிவுபடுத்தப்பட்டு தயாரான முறையில் உள்ளனர். என்றார்.

2019ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களை அடுத்து தேசிய பாதுகாப்பு மாநாடு நடத்தப்படுவதில் ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை கிடைத்திருந்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவுகள் உரிய முறையில் வழங்கப்படாமை தொடர்பில் பல விடயங்கள் அம்பலப்படுத்தப்பட்டிருந்தன. (எ)

## உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

**மலேசியா, சிங்கப்பூர், லண்டன், அமெரிக்கா, கனடா உட்பட**
13 வெளிநாடுகளில் தரமான உயர்கல்வியை மலிவாக பெற்றுக்கொள்ளவும், கப்பல் வேலை வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் 0766674945 தொலைபேசி இலக்கத்திற்கு உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பன வற்றை அனுப்பிவையுங்கள், நாங்கள் உங்களைத் தொடர்பு கொள்கிறோம்.

## தவறவிடப்பட்டது

நேற்று (15.02.2020) சனிக்கிழமை திருநெல்வேலிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சாரதி அனுமதிப்பத்திரம் (B730859) ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**077 604 1063, 077 203 2245**

## சாயி பாபா திருமணசேவை

யாழ்.இந்து 1989, விசாகம் 1ம் பாதம், கி.பா.35 (சூரி.செவ்), உயரம் 166 cm, லண்டனில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 043 2333**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்திற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **075 593 5814**

## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக. காரைநகரில் அமைந்து இருக்கும் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் 50 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக எந்த தடையுமின்றி எவருக்கும் எதிரான ஆட்சியிலிருந்து குறித்த ஆலயத்தை நிர்வகித்து வந்ததன் அடிப்படையில் குறித்த ஆலயமானது பயிரிக்கூடல் பொது மக்களுக்கு உரித்தும், சொந்தமும் ஆனது என இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

**பயிரிக்கூடல்**
**பொதுமக்கள்,**
**காரைநகர்.**

## மருந்து இல்லா/ மருந்து வைத்தியம்

பலகாலமாக சிகிச்சை எடுத்தும் சுகமாகாத எல்லா விதமான நோய்களை உடையவர்களுக்கான அதி உன்னத வைத்தியம் தலைக்கு இரத்தம் போகாமை. முள்ளந்தண்டு விலகல், கைகால் தூக்க முடியாமை, கை, கால் விறைப்பு, மாறாத படுக்கைப் புண்கள், தலைவலிகள், மூலம், தோல் நோய்கள், குழந்தைப் பேறு இன்மை, பெண்களின் அனைத்து நோய்கள்.

**Dr.R.Sivagurunathan**
**077 730 1 669**
சந்திப்பு இலவசம்.
இல.41, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

முன்னனுபவம் உள்ள பாரவூர்தி சாரதி தேவை.

**077 704 0356**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது வாகன சுத்தி கரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவைப் படுவதால் உடன் தொடர்புகொள்ளவும்.

**சம்பளம் நேரில் பேசப்படும்.**

வேலை நேரம் 8.45Am - 07.00Pm மணிவரை

**தொடர்புக்கு:- 077 776 3533**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**077 210 6155** 221. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## யாழ்.நகரில் இயங்கும் சுப்பர்மார்கட் ஒன்றுக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை

- முகாமையாளர் - 30000 - 40000/- வரை
- மேற்பார்வையாளர் - 20000 - 30000/- வரை
- காசாளர் - 18000 - 21000/- வரை (பெண்)

**021 492 7080**

நேர்முகத்தேர்வு :- 17.02 - 22/02 வரை சமுகமளிக்கலாம்.
நேரம் :- 9.00 - 12.00 வரை
வருகை தருவது :- அன்னை நாகபூட்சிற்றி
இல.175, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

## யாழ்.நகரில் இயங்கும் உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை

- பலகாரம் செய்யக்கூடியவர் - ஆண், பெண்
- சமையல்வேலை செய்யக்கூடியவர் - ஆண்.பெண்

**021 492 7080**

நேர்முகத்தேர்வு :- 17.02 - 22/02 வரை
நேரம் :- 9.00 - 12.00 வரை
அன்னை நாகபூட்சிற்றி
இல.175, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.






## வேலையாள் தேவை

நிரந்தர வேலைவாய்ப்பு தொழில்நுட்பவிய லாளர் (T.O) வேலையாள் தேவை.

தொடர்பு: 077 358 3879

## விற்பனைக்கு

மிளகாய் வறுக்கும் இயந்திரம், தேங்காய் எண்ணை பில்ரர், மிளகாய் கட்டர், ஈர உழுந்து மெசின் + கட்டர், என்பன விற்பனைக்கு உண்டு.

077 991 2304

## தங்க மோதிரம் தவறிவிட்டது

நல்லூருக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் தங்கமோதிரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 318 6416

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சத்திரத்துச்சந்தியில் மூன்றுமாடி கடைக்கட்டடம் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.

076 541 2833, 077 958 6996


## Room வாடகைக்குண்டு

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் அறைகள் வடகைக்குண்டு. பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனைய-வர்களும் தொடர்புகொள்ளலாம்.
கடை ஒன்றுக்கும் வேலையாள்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

077 658 1506, 077 700 9628

## RIDER

ANY WHERE - ANY TIME



# மாதாந்தம் ரூபா 500,000

## ஐந்து லட்சத்துக்கு அதிகமான வருமானம் பெற

மாவட்ட ரீதியான முகவர்களுக்கு இது ஒரு உன்னதமான வியாபார வாய்ப்பு

மாதாந்தம் ரூபா500,000க்கு மேல் வருமானம் பெறக் கூடிய கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள முன்னணியில் திகழும் வளர்ந்து வரும் ஸ்தாபனமானது தமது டெக்சி மற்றும் தூதஞ்சல் (Courier) சேவைகளை விரிவாக்கி நாடலாவிய ரீதியல் சகல மாவட்டங்களுக்கும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உட்பட) பொறுப்பு வாய்ந்த வர்த்தக முகவர்களை இணைக்க விண்ணப்பம் கோருகின்றது.

**மேலதிக விபரங்களுக்கு இன்றே அழையுங்கள்**

**070 777 8822, 070 777 8855, 011 767 2746**

ரைடர் டெக்னோலோஜீஸ் (தனியார்) நிறுவனம்

இல 549/1-1/1, காலி வீதி, கொழும்பு 06

ஈ மெயில் info@rider.lk இணையத்தளம் www.rider.lk

ஈழத்து நிறுவனம்

உங்களுடைய கட்டுமான ஒப்பந்தக்காரர் ஸ்ரக்டா கவர் பிளொக்கை பயன்படுத்துகின்றாரா ?



Rs. 9

ஒரு ஸ்லாபிற்கு வெறும் ரூ.2000 க்கு 20 ஆண்டுகள் கட்டமைப்பு உத்தரவாதம்

(Eurocode : EN 1992-1-1)



வெடிப்பிலிருந்து பாதுகாப்பு | நெருப்பிலிருந்து பாதுகாப்பு | துருப்பிடிப்பிலிருந்து பாதுகாப்பு

STRUCTA ENGINEERING
Lvl 26 & 34, World Trade Center, Colombo 01
Hotline: 077 657 5699

## சேவை

உங்களின் வீட்டை அமைத்துக் கொள்ளவும். இருக்கும் வீட்டினை நவீன முறையில் புனரமைப்பு செய்யவும். வரைபடம் தயாரித்தல் உள்ளூராட்சி அனுமதி பெறல். உத்தேச மதிப்பீடு தயாரித்தல் (BOQ) போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ள எம்மை அழையுங்கள்

**தொடர்புகளுக்கு: சுகந்தன்**

077 296 0017, 071 690 1064
071 4156 325

# BLC CAMPUS

*your success... our achievement...*

## IMMEDIATE VACANCIES

### at JAFFNA BRANCH



BLC Campus is a well-established institution and is a pioneer in providing a variety of internationally accredited tertiary education programmes catering to the demands of both Sri Lankan and foreign students. With our growth, we are looking forward to have smart, dedicated and dynamic people joining our team in the following positions:

### Lecturer - Information Technology

Job Requirments:

- HND or Bachelor's Degree in IT or Computing is a must.
- Minimum 2 Years experience in a similar capacity.
- Age 20 to 45 years.
- Excellent communication & presentation skills in English & Local Languages.
- Should be able to work on weekends.

### Visiting Lecturer - Information Technology

Job Requirments:

- Age 22 to 40 years.
- G.C.E. A/L Qualification, with a Diploma or Higher National Diploma in IT Field.
- Prior experience in similar positions will be added an advantage.
- Excellent communication skills in English & Local Languages.
- Should be able to work on weekends.

Preference will be given to those who reside in Jaffna District.
Send your detailed CV to **info@blccampus.edu.lk**
with the position applied for in the subject line of your e-mail.

BLC CAMPUS

JAFFNA CAMPUS
4th Lane, Brown Road,
Jaffna.

COLOMBO CAMPUS
NO.15, Aloe Ave,
Colombo.

T - 021 493 5555, 021 437 4443 | E - info@blccampus.edu.lk

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள்

**16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 18 ஆம் திகதிவரை ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில்** அருள்வாக்கு கூறுவார்.

அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச் செல்க.

**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**திங்கட்கிழமை அன்னதானம் வழங்கப்படும்**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு - 021 221 9127, 077 801 2226

## விற்பனையாளர்/ உதவியாளர் தேவை

கொழும்பில் இயங்கிவரும் டிஷ் அன்டெனா மற்றும் கேபிள் டீவி உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு மேற்படி பொருள்கள் கையாளக்கூடிய மற்றும் விற் பனை செய்யக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் ரூபாய் 40000/= வரை கிடைக்கும் அத்துடன் உணவு தங்குமிடம் இலவசம். அனுபவமற்ற வேலை பழக ஆர்வம் உள்ளோரும் டிஷ் அன்டெனா பிற்றிங் வேலை தெரிந்தவர்கள். பழக ஆர்வம் உள்ளோரும் தொடர்பு கொள்ளலாம்.

**Sats Tech Engineers Pvt Ltd.**
**Colombo-13**

**Cantact to KUMAR 077 7710 785**

## கணக்காளர் தேவை

**AMT** ரான்ஸ் போர்ட் நிறுவனத்திற்கு யாழ்ப்பாண கிளை அலுவலகத்திற்கு கணக்காளர் (ஆண்/பெண்) தேவைப்படுகின்றனர்.

**தகுதி**

- க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் 3' பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கணக்கியல் தொடர்பான மேலதிக தகைமைகள் கொண்டிருப்பதுடன் முன் அனுபவமும் கணினி அறிவும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தகைமையுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை **25.02.2020** ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**AMT ரான்ஸ் போர்ட் நிறுவனம்
230, 232 ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13**

A member of the IDOL family

**UV Water Solution**
water science technologies
Right solution for water issues

நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு

**T.P: +94775092737**

## தூக்குத்துரை

அவரின்ர திருகுதாளங்கள் கச்சேரியில இருந்து எப்பிடியோ பேப்பர்காரருக்கு கசியிறதால் , ஆள் கடும் அப்செட்டாம். இடைக்கிடை அதிகாரிகளைக் காணேக்க, இதைப்பற்றித்தான் ஆள் கூடக் கதைக்கிறதாம்.

இஞ்சயிருந்து ஆரோ உதயனுக்கு தகவல் குடுக்கிறியள், ஆரெண்டு கண்டு பிடிச்சால் உடன ஆளை வேலையிலை இருந்து தூக்கிடுவன் என்று தூக்குத்துரையாக மாறி சன்னதம் போட்டு விட்டாராம். பாவம், அவருக்கு ஒரு அரச அதிகாரியை வேலையிலை இருந்து தூக்கிறது அவ்வளவு லேசுப்பட்ட வேலையில்லை எண்டு ஒருத்தரும் சொல்லிக் குடுக்கேலை போல. அதைவிட இன்னும் ஒரு மாதத்தில பார்லிமெண்டும் கலைச்சு, தேர்தலும் முடிஞ்சா கைத்தடியின்ர கதி..? தூக்குத்துரையைச் சனம் தூக்கிடுமே!!

## ராக்கிங்கில்...

தாக இரண்டாம் வருட மாணவர்கள் மீது குற்றம்சுமத்தப்பட்டது. இது தொடர்பில் 10பேர் கொண்ட விசாரணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தது. அவர்களின் பரிந்துரைக்கு அமைவாக இரண்டு மாணவர்களுக்கு பல்கலைக்கழத்துக்குள் நுழைவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 6 மாணவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த மாணவனின் வீடு மீது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனையடுத்து மாணவனின் பெற்றோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியிடம் முறையிட்டுள்ளனர். தமது மகனுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற முக்கிய கூட்டத்தில் இந்த விவகாரம் ஆராயப்பட்டுள்ளது. பகிடிவதையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட மாணவர்களின் வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கக் கோரவேண்டும் என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு கடந்த வாரம் இரண்டு தடவைகள் கிளிநொச்சிக்குச் சென்று மாணவர்களிடத்தில் விசாரணை மேற்கொண்டுள்ளது. இதன்போது, கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகத்தில் சிற்றுண்டிச்சாலை இல்லை, மலசலகூடம் ஒழுங்காக இல்லை என்று மாணவர்கள் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்துள்ளதுடன், பகிடிவதை தொடர்பான விசாரணையை உரிய முறையில் முன்னெடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

கிளிநொச்சி பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பகிடிவதைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனுடன் தொடர்புடைய மாணவி, பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகள் என்றும், அவருக்கு எதிராக வகுப்புத் தடை விதிக்குமாறு பரிந்துரைக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப பீடத்தின் உயர்மட்டத்தினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் இப்போது தெரியவந்துள்ளது. (ஒ.5)

## அலைபேசி...

பில் முன்வைக்கப்பட்ட அலைபேசி இலக்கங்களின் விவரங்கள்- தரவுகளை இணைப்பு வழங்குனரான நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள பொலிஸாருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றிம் அனுமதியளித்துள்ளது.

தொழில்நுட்ப பீட நிர்வாகத்தால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்த குற்றச் செயல் தொடர்பான அறிக்கைக்கு அமைய இந்த உத்தரவு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடத்தில் மூத்த மாணவர்கள் சிலர் பகிடிவதை என்ற போர்வையில் புதுமுக மாணவிகள் சிலருக்கு அலைபேசியில் பாலியல் தொல்லை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதுதொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த விசாரணைக்கு மேலதிகமாக குற்றச்செயல் ஒன்று இடம்பெற்றுள்ளமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு தொழில்நுட்ப பீட நிர்வாகத்தால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அந்த முறைப்பாட்டில் குற்றச்செயல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் அலைபேசி இலக்கங்கள் பொலிஸாரிடம் வழங்கப்பட்டன. அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் முறைப்பாட்டில் கோரப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக நிர்வாகத்தால் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள அலைபேசி இலக்கங்களின் விவரங்கள் தரவுகளை அவற்றின் இணைப்புவழங்குனர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குற்றச்செயல் ஒன்று தொடர்பான அறிக்கையைத் தாக்கல் செய்தனர். அலைபேசி இலக்கங்களின் விவரங்கள் தரவுகள் அறிக்கையை வழங்க கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ரி.சரவணபவராஜா, அலைபேசி இணைப்பு வழங்குனர் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார். (ஒ.5)

## கால...

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு தானும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நாவில் கால அவகாசம் கோரியது. இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது. முதலாவது ஆண்டு எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், கோத்தாபய அரசு ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது. இனியும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமா என்பது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களிடத்தில் உதயன் கேள்வி எழுப்பியது.

ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது,

கால அவகாசம் என்பது இலங்கை அரசின் செயற்பாட்டை பன்னாட்டுச் சமூகத்துக்கு நிரூபித்துக் காட்டும் வாய்ப்பு. அவர்கள் எதையும் செய்யமாட்டார்கள் என்பதை சர்வதேச சமூகம் இதன் ஊடாக விளங்கிக் கொண்டிருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை மஹிந்த (2012 - 2014) மூர்க்கத்தனமாக எதிர்த்தார். மைத்திரி - ரணில் அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை ஏற்று நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லியது. ஆனால் நாள்களைக் கடத்தினார்களே தவிர செயற்படுத்தவில்லை. இரண்டுதரப்புமே ஒன்றுதான். இனியும் ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது. அது உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்குவதானது, ஐ.நா. மனித உரிமைகள் சபை தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதாகத் தான் நாம் கருதவேண்டிவரும். தமிழர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும்.

இலங்கை அரசுக்கு எதிராக காத்திரமான, இறுதியான உறுதியான நடவடிக்கைகள் ஐ.நாவால் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். அது வழுவழுப்பாகப் போகக் கூடாது, என்றார்.

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்ததாவது,

இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டும் ஒன்றும் நடக்கவில்லை. இரண்டாவது கால அவகாசத்தின் முதலாவது ஆண்டு (2019- 2020) மார்ச்சுடன் நிறைவுக்கு வரும் நிலையில், அரசு இணங்கிக் கொண்ட எதையும் செய்யவில்லை. செய்ய முயற்சிக்கவும் இல்லை. ஆட்சியிலிருக்கும் கோத்தாபய அரசு தீர்மானத்தை ஏற்கப் போவதில்லை என்றும், அதிலிருந்து விலகப் போவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளது. இப்படியொரு சூழலில், இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாது. இலங்கை விவகாரம் அடுத்த, முக்கியமான, தீர்க்கமான கட்டத்துக்கு நகர்வதற்கான காலம் வந்துள்ளது. அதனைச் செய்யவேண்டும், -என்றார். (ஒ.5)

## குளத்தி...

கள் பகல் முழுவதும் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை வங்காலை தோமஸ்புரி குதிரை குத்தி குளத்தில் அவரைச் சடலமாக கண்டுபிடித்துள்ளார்கள். இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. (ஒ.5,213)

## ரூ.13...

செய்துள்ளனர். அவர்களிடமிருந்து 13 கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான 14 கிலோ 350 கிராம் தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மாதகலைச் சேர்ந்த டிலான் மற்றும் ருசாந்தன் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் திருடப்படும், கொள்ளையிடப்படும் நகைகளை உருக்கி தங்க கட்டிகளாக மாற்றி இந்தியாவுக்கு கடத்தும் நடவடிக்கையில் குழு ஒன்று ஈடுபட்டு வந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கடல் மார்க்கமாக தங்க கட்டிகளை இந்தியாவுக்கு கடத்த முற்பட்ட போது காங்கேசன்துறை கடற்படையினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் டிங்கிப் படகில் பயணித்துக் கொண்டிருந்தபோதே கடற்படையினரிடம்சிக்கியுள்ளனர். அவர்களின் படகைச் சோதனையிட்டபோது, 14 கிலோ 350 கிராம் தங்கக் கட்டிகளை கைப்பற்றியுள்ளனர். அதன் பெறுமதி 13 கோடியே 70 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களையும், தங்கக் கட்டிகளையும் கடற்படையினர் ஆயத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். (ஒ.5,7,26,111)

## அமெரிக்காவுக்கு...

விதித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அமெரிக்கா செல்வதற்கு இது வரைகாலமும்தான்விண்ணப்பிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

சட்டவிரோதமாக

# ஊடுருவ முற்பட்டோர் மன்னாரில் கைது

மன்னார், பெப். 16

சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைய முற்பட்ட, 5 பேரை கடற்படையினர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான படகு நடமாடுவதை ரோந்துக் கப்பல் மூலம் அவதானித்த கடற்படையினர், இலங்கைக்குள் நுழையும் முயற்சியில் ஈடுபட்ட குழுவினரைக் கைதுசெய்தனர். இந்தக் குழுவில் இந்தியப் பிரஜைகள் 3பேரும், இலங்கையைச் சேர்ந்த இருவருமாக 5பேரைக் கைது செய்தாக கடற்படையினர் கூறுகின்றனர்.

(ஒ.5,105)


ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 15.02.2020 | 2770 | இள நீலம் |

துலாம்
வெற்றி இலக்கங்கள் 05 07 26 36
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,194,024/=
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 5998
ரூ.100 பரிசுக்காக 265
16.02.2020 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ......ஊதா...... நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 884
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,843,295/-
வெற்றி இலக்கங்கள் 21 25 32 37
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 ... 0114 824 824, 0112 333 778 or 1919
... 0114 825 825
5 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3301 திகதி: 2020.02.15
பச்சை சனிக்கிழமை
ශනිදා වාසනාව
வெற்றி இலக்கங்கள் 09 21 29 71
ஆங்கில எழுத்து Y
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,339,125/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### வாகனம் தேவை

TATA 207, அல்லது மகேந்திரா வாகனம் மாத வாடகைக்கு தேவை.

தொடர்பு - 077 300 1763

### காணி விற்பனைக்கு

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:- 077 300 2075

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 02 . 1939

மறைவு 13 . 03 . 2015

**அமரர் சங்கரப்பிள்ளை கனகராசா**

திதி: அபரபக்க ஸப்தமி

விழிகளில் ஒளியாய்
நெஞ்சத்தில் நினைவாய்
எங்களின் இறைவனாய்
எம்மோடு நிரந்தரமாய்
இருந்து வழிநடத்த
வேண்டுகின்றோம்.

31/5, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

### அமெ...

பிலுள்ள அந்த நாட்டு தூதுவரை அழைத்து இது தொடர்பில் விளக்கம் கோருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தமது அமைச்சுக்கு அமெரிக்க தூதுவர் இன்று அழைக்கப்பட்டுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ்குண வர்தன தெரிவித்தார்.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தி னரும் தமது நாட்டுக்குள் நுழைவதை அமெரிக்கா தடை செய்து கட்டளை பிறப் பித் துள்ளது. இதற்கு இலங்கை அரசு கடும் கண்ட னத்தை வெளி யிட்டுள்ளது. அத் துடன் கடும் போக் குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும் போர்க்கொடி தூக் கியுள்ளன.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் கருத்து வெளி யிட்ட வெளிவிவ கார அமைச்சர் தினேஷ் குணவர் தன, அமெரிக்காவால் முன்வைக்கப்பட் டுள்ள விடயங்க ளுக்கு பதிலளிப்ப தற்கு அரசு என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவரு கின்றது. இதன்படி அமெரிக்க தூதுவர் நாளை(இன்று) காலை வெளிவிவகார அமைச்சுக்கு சந்திப்புக்காக அழைக்கப் பட்டுள்ளார்.

இலங்கை என்பது சுயாதீன நாடாகும். எமது நாட்டின் அரசமைப்பின் பிரகாரமே செயற்பட்டுவருகின்றோம். தொடர்ந்தும் அதே வழியில்தான் பயணிப்போம், என வும் அவர் கூறினார். (ஒ.5,44)

### மன்னாரில்...

ளுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

செட்டியார் கட்டையடம்பனில் உள்ள தோட்டப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் இந்தக் கொலை நடைபெற்றிருக்கலாம் என்று முருங்கன் பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டனர்.

கொலை செய்யப்பட்டவர் 52 வயதுடைய நபர் என்றும் கொலைக்கான காரணம் பற்றி விசாரணைகள் நடைபெற்று வரு வதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். கொலை செய்யப்பட்டவரின் சடலம் மன் னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ.5,213)

### அமெரிக்காவின்...

கொழும்பு, பெப். 16

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற் றும் அவரது குடும்பத்தினருக்கு அமெரிக் காவுக்குள் உள்நுழைவதற்கு அந்த நாடு விதித்துள்ள தடைக்கு, இலங்கை தனது கடுமையான ஆட்சேபனையை தெரிவித் துள்ளது. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிவிக்கை வெளியிட் டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சுயாதீனமாக சரிபார்க்கப்படாத தகவல்க ளின் அடிப்படையில், சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதுஅமெரிக்கஅரசால்விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளுக்காக இலங்கை அரசு தனது கடுமையான ஆட்சேப னையை தெரிவிக்கின்றது.

சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில், சவேந்திர சில்வா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதுடன், அவ ருக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் பற்றிய ஆதாரபூர்வமான அல்லது நிரூ பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை என்பதையும் அரசு மீண்டும் வலியுறுத்துகின்றது. அவர் மிகவும் மூத்த இராணுவ அதிகாரி என்ற காரணத் தால், தற்போதைய ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்சவால் பதில் பாதுகாப்புத் தலைவராக தரமுயர்த்தப்பட்டார்.

இராணுவத் தளபதியாக சில்வா நியமிக் கப்பட்ட 6 மாதங்களுக்குப் பின்னர் இந்த பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமை யானது, தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் முக்கிய பதவிகளை வகிப் பதற்கு நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவத்து டன் கூடிய நபர்களுக்கு அழைப்பு விடுப் பதற்கான ஜனநாயக ரீதியாக தேர்ந்தெ டுக்கப்பட்ட ஜனாதிபதியின் சிறப்புரி மையை வெளிநாட்டு அரசு கேள்விக்குட் படுத்துகின்றமை ஏமாற்றமளிக்கின்றது. தகவல் மூலங்களின் நம்பகத்தன் மையை சரிபார்க்கவும், அதன் முடிவை மறுபரிசீலனை செய்வதற்கும் இலங்கை அரசு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுக்கின்றது, என்றுள்ளது. (ஒ.5)

### சவேந்திரவுக்கு...

தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தேசிய முயற்சியை முன்னெடுத்த வீர களத் தளபதிகளில் இவரும் ஒருவர். தேவைப்படும் இந்த நேரத்தில் நாம் அனைவரும் அவருக்கும் அவரது குடும் பத்தினருக்கும் ஆதரவாக நிற்கிறோம். ஒரு நாடு என்ற வகையில் 30 ஆண்டு கால பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த போர்வீரர்களுடன் நாம் எப்போதும் நிற்போம், என்று சஜித் பிரேமதாச தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். (ஒ.5)

## நிறைவாழ்வு மையம்

மக்லியோட் வைத்தியசாலை வளாகம்,
இணுவில்

**சர்வதேச பெண்கள் தினத்திற்கான திறந்த போட்டிகளும், டிப்ளோமா கற்கைநெறி மற்றும் பெண்களுக்கான தொழில்முறை பயிற்சி முடிவுக்கான சான்றிதழ் வழங்கலும், கண்காட்சியும் - 08.03.2020**

**1. உளவளதுணை டிப்ளோமா கற்கைநெறி சான்றிதழ் வழங்கல்.**

நிறைவாழ்வு மையத்தினால் நடாத்தப்பட்ட "Diploma in Psycho logical" Counseling கற்கைநெறியை முடித்து வெளியேறும் 5ஆம் அணி மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மார்ச் 8ஆம் திகதி, JDCSI, "Shiloh Auditorium" இல் பி.ப 2.30 மணிக்கு இடம்பெறும்.

**2. பெண்கள் தொழில்பயிற்சி நிலையம் - ஒற்றுமையும் படைப் பாற்றலும்**

எம் நிலையத்தினால் நடாத்தப்பட்ட பெண்களிற்கான தொழில்சார் பயிற்சியை முடித்து வெளியேறும் பெண்களிற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மார்ச் 8ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு, JDCSI, "Shiloh Audi torium" இல் பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும்.

**3. சர்வதேச பெண்கள் தினம் 2020 - கவிதை, கட்டுரை, சித்திர போட்டிகள்.**

இத்தினத்தையொட்டி " நான் சமத்துவத்திற்கான சந்ததி! பெண்களின் உரிமையை உணர்ந்து கொள்ளுதல்" எனும் தொனிப்பொருளில் போட்டிகள் அமையும்.

- **கவிதை:- A4 தாளில் 25 வரிகளிற்கு மேற்படக்கூடாது.**
- **கட்டுரை:- A4 தாளில் 5 பக்கங்களிற்கு மேற்படக்கூடாது.**
- **சித்திரம்:- 17X18" தாளில் வர்ணங்கள் பாவித்தோ/ இன்றியோ வரையலாம்**

முடிவு திகதி:- 29.02.2020 பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

வெற்றியீட்டியவர்களிற்கு 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசு தொகையாக தலா 5000/=, 3000/=, 2000/= வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:- நிறைவாழ்வு மையம்"
மக்லியோட் வைத்தியசாலை வளாகம், இணுவில்.

பரிசில் வழங்கும் வைபவம் மார்ச் 8ஆம் திகதி JDCSI, "Shiloh Auditorium" இல் பி.ப 4.00 மணிக்கு இடம்பெறும்.

தொடர்பு இல:-
021 205 4443, 077 917 7230

நிர்வாகம்

### வேலையாள் தேவை


159, பலாலி றோட் கோண்டாவிலில் உள்ள சர்மினி புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலையாள் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு - 077 552 1933

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை தியாகராஜா

**(சித்திரகலா ஸ்ருடியோ - உடுவில்)**



உடுவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட ஐயாத்துரை தியாக ராஜா கடந்த (14.02.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தங்கச்சியம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - மாணிக்கம் தம்பதி களின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக்கணவரும் சுதர்ஜினி (சுவிஸ்), சுபாஜினி (சுவிஸ்) சுபோஜினி (பிரதேச செயலகம் - சங்கானை) காலஞ்சென்ற சுகிர்ஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பாஸ்கரன் (சுவிஸ்), மதனபாலன் (சுவிஸ்), கஜன் (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), சங்கர் (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சண்முகராஜாவின் சகோதரரும் பானுஜா, துஷிக்கா, நிஷா, மதுஜன், அபிஷேக், அக்ஷயா, தேசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய், வீதி உடுவில்

தகவல்: குடும்பத்தினர்

# சைவ வீதிப் பெயர்களை மாற்றி நல்லிணக்கத்தை குலைக்காதீர்கள்

## சைவ மகாசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 16

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட சில வீதிகளின் சைவப்பெயர்களை மாற்று மதப் பெயர்களாகவோ பொதுப் பெயர்களாவோ மாற்றுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளமை வருத்தம் அளிக்கின்றது என்று அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

மேற்படி வீதிகளின் பெயர் மாற்றம் தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச சபை விளம்பரப்படுத்தியுள்ளமை தொடர்பாக சைவ மகா சபை ஆட்சேபனை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தீவகத்தின், பாரம்பரியமிக்க துறைமுக நகரான காவலூர் பண்டைய அழகிய சைவத் தமிழ் கிராமங்களையும் அந்நியராட்சியின் பின் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி கத்தோலிக்க மக்களை கொண்ட கிராமங்களையும் கொண்டமைந்த பிரதேசமாகும்.

அங்குள்ள சைவ ஆலய வீதிப் பெயர்கள் சில வருடங்களுக்கு முன்னர் தான்தோன்றித்தனமாக மாற்றப்பட்டு மாற்றுமத பெயர்ப்பலகைகள் இடப்பட்டுள்ளன. பதிவேடுகளில் உள்ள பெயர்களுக்கு முரணாக, சபையினதோ மக்களினதோ அனுமதி இன்றி தவறாக அப்போது செய்யப்பட்ட இந்த பெயர் மாற்றங்களை, இப்போது திட்டமிட்டு சட்டபூர்வமாக மாற்ற முனைவது தவறான முன்னுதாரணமாகும்.

ஊர்காவற்றுறையில் சைவர்களும் கத்தோலிக்கர்களும் மத நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இந் நிலையில் சைவ ஆலயத்தின் பெயரைத் தாங்கிய வீதிகளின் பெயர்களை மாற்றம் செய்ய முனைவது மக்களின் நல்லிணக்கத்தை பாதிக்கும் செயலாகும்.

பிழையை சரியாக்கும் தவறான முயற்சியை கைவிடுமாறும் பதிவேடுகளில் தொன்றுதொட்டு வழக்கிலிருந்த உண்மையான, பதிவேடுகளில் உள்ளமை போன்று பெயர்களைக் காட்சிப்படுத்துமாறும் சைவத்தமிழ் மக்கள் சார்பாக சைவ மகா சபையினராகிய நாங்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபையை கேட்டுக்கொள்கின்றோம், என்றுள்ளது.

(ஒ.5)

சாய்ந்தமருது நகர சபை உருவாக்கம்

# அரசின் அறிவிப்பால் மக்கள் கொண்டாட்டம்

அம்பாறை, பெப். 16

நகரசபை வழங்கப்பட்டதாக வெளியான அரசிதழ் அறிவிப்பையடுத்து சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் முன்னால் மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் நள்ளிரவு வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் பிரதான வீதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அதனை சீர் செய்யும் முகமாக கல்முனை போக்குவரத்து பொலிஸார் கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். மக்கள் திரளாக கூடி பாதசாரிகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடி வருகின்றதுடன் வெடிகளும் கொளுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபையிலிருந்து பிரிந்து புதிதாக உதயமாகின்ற சாய்ந்தமருது நகர சபை குறித்து பின்வருமாறு மக்கள் தத்தமது கருத்துக்களை ஊடகங்களிடம் வெளிப்படுத்தினர்.

சாய்ந்தமருது மக்கள் கல்முனையிலிருந்து பிரிந்து செல்வதற்கு பல காரணங்கள் உள்ளன. சில தரப்பிடம் காணப்பட்ட பிரதேசவாதம் மற்றும் கல்முனைக்குடி முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் அரசியல்வாதிகளின் புறக்கணிப்பு கல்முனை மாநகர சபை முதல்வராக சாய்ந்தமருது சேர்ந்தவர்களை நியமிப்பதில் தடை போன்றவற்றால் சாய்ந்தமருது மாளிகைக்காடு உள்ளடக்கிய பகுதியையும் காரைதீவு எல்லையாக கொண்ட பகுதி சாய்ந்தமருது நகர சபை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது அம்மக்களின் நீண்டகால பிரச்சினையாகவும் இதே நேரம் கல்முனை தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகள் சரிவை எதிர்நோக்கியுள்ளன. சாய்ந்தமருது மக்களிடையே இச்சபை செயற்பாட்டை செயலுருவாக்கிய தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவின் கை ஓங்கியுள்ளதை மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறினார்கள்.

இது கல்முனையில் இருந்து சாய்ந்தமருது பிரிந்து செல்வதால் தமிழ்மக்கள் சந்தோசப்படுவதை விட ஒரு நீண்ட காலமாக மக்களின் ஜனநாயக போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாக அவர்கள் பார்க்கின்றார்கள்.

சாய்ந்த மருதுமக்களை போன்றே கல்முனையில் தனிப் பிரதேசம் கேட்கவில்லையாயினும் நிர்வாக ரீதியில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்று அழைக்கப்படும் தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்வு நீண்ட கால பிரச்சினையாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)

## தென்மராட்சி வி.கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கிய சரா எம்.பி.

சாவகச்சேரி, பெப். 16

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் ஆகியனவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் 40 க்கும் மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு அத்தகைய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர். ஈ.சரவணபவன் கடந்த வருடம் கிராமிய உட்கட்டமைப்புநிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கிய பத்து லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் கழகங்களின் நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் உதயன் நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், ஓய்வு நிலை மாகாண இளைஞர் சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் உட்பட பிரதேச செயலக அலுவலர்கள், விளையாட்டுத் துறை அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பிரதாப் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(து)





# இதயத்தை ஏற்க மறுத்த ரணில்

யானையை விட்டுக்கொடுக்க சம்மதம்!



கொழும்பு, பெப். 16

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உதயமாகியுள்ள புதிய அரசியல் கூட்டணிக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்தை வழங்குவதற்கு முயற்சித்துவருகின்றோம் என்று ரணில் ஆதரவு உறுப்பினரான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டிருந்த பிரச்சினை எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டது. பொதுத்தேர்தலில் கூட்டணியாக களமிறங்குவோம். சஜித் தரப்புக்கு யானை சின்னத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. தேர்தல் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது. சட்டரீதியில் எவ்வித சிக்கலும் இல்லாவிட்டால் நிச்சயம் வழங்குவோம். அவ்வாறு சர்ச்சை ஏதாவது வந்தால் அன்னம் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது, என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, அனைத்து தரப்புகளையும் இணைத்துக்கொண்டு பொதுத்தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வோம். யானையா, அன்னமா என இன்னும் ஓரிரு நாட்களுக்குள் தெரியவரும்.

எனினும், சஜித் தலைமையிலான கூட்டணியின்கீழ்தான் போட்டியிடுவோம். யானை சின்னம் கிடைத்தால் சிறப்பாக இருக்கும் என்று ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் லக்கி ஜயவர்தன குறிப்பிட்டார்.

(ஒ.5.44)

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், பெப். 16

கனடாவில் வசிக்கும் பெண்ணிய எழுத்தாளர் நிரூபாவின் 'இடாவேணி நூல் அறிமுகமும் உரையாடலும்' நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகக் குவிவுமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூல் பற்றிய அறிமுகத்தை சுரேகா பரம், கருத்தியல் சாஙந்த பெண்ணிய அணுகுமுறையில் மதுஷாமாதங்கி, வாசிப்பு அனுபவத்தை பிறைநிலா கிருஷ{ம் நிகழ்த்தினார்கள்.

இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், புலம்பெயர் இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள், சமூக



செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுனைக்குது, அச்சாப் பிள்ளை ஆகிய இவரது முன்னைய படைப்புக்கள் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டன.

(ஒ.5)

## பெண்களுக்கான துடுப்பாட்டத்தில்

# தட்சணா மருதமடு கிண்ணம் வென்றது

மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் தட்சணா மருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

நேற்று சனிக்கிழமை மடு பிரதேச செயலக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் முள்ளிகுளம் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி வெற்றிபெற்ற தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை பெற்றது. 63 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய முள்ளிகுளம் இளந்தளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 48 ஓட்டங் களை மட்டும் பெற்று 15 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. (23)

மொத்த விற்பனைக்கு
நியூ பாட்டா
New Bata


தொடர்பு:-
077 005 8236, 077 879 4148

**கார் விற்பனைக்கு**
வைத்தியரின் Toyota Prius 2014 (zvw30) வெள்ளை NP CAA XXXX இலக்க 34000km, 24km / L எரிபொருள் சேமிப்புடைய கார் விற்பனைக்குண்டு. 62 லட்சம்
076 535 9284

**வாகனம் தேவை**
TATA 207, அல்லது மகேந்திரா வாகனம் மாத வாடகைக்கு தேவை.
தொடர்பு - 077 300 1763

**வேலையாள் தேவை**
**Direct Marketing Sales**
செய்யக் கூடிய வேலையாள் தேவை (இருபாலாரும்).
**சம்பளம் 20000 - 35000**
077 229 7154

**JCB வாகனம் விற்பனைக்கு**
பதிவு செய்யப்பட்ட ஆண்டு - 2012
வாகன இல - ZA
தயாரிப்பு- இங்கிலாந்து
விலை - 4.85m
(விலை பேசித்தீர்மானிக்கலாம்)
இடம் - வங்காலை. மன்னார்.
077 225 5673

**கடைத்தொகுதி வாடகைக்குண்டு**
இராஜவீதி, கோப்பாய் பொலிஸ் நிலையம் அண்மித்த வீதியில் நல்ல சூழலில் தங்குமிட வசதியுடன் கூடிய இரண்டு புதிய கடைத்தொகுதி வாடகைக்குண்டு. வங்கிகள். அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்கள் அமைப்பதற்குப் பாதுகாப்பான உகந்த இடம்.
077 774 3240

**தரமான பொருட்கள் விற்பனைக்கு**
**TVM Transport** கட்டடப்பொருள்களை மிகக் குறைந்த விலையில் சிறந்த தரமான பொருள்களான
- METAL 1", 1 1/2", 1/2", 9x6
- CHIPS
- DUST
- MIX
- SAND
- BLOCK STONE

ஆகியவற்றை தெரிவு செய்து கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும்
077 766 6620

SLGTI
SRI LANKA GERMAN TRAINING INSTITUTE
KILINOCHCHI

**Sri Lanka German Training Institute**
**POSTOF VISITING INSTRUCTORS**
**WALK-IN INTERVIEW**

Walk-in Interview for below positions will be held during **24.02.2020** to **28.02.2020** at the Administrative block of SLGTI, Ariviyalnagar, Kilinochchi.

1. Lecturer-English
2. Lecturer-ICT
3. Lecturer-Construction Technology

**Qualifications:**
An Engineering Degree in the relevant field.
For the candidate appearing for English lecturer should have at least HND in English or higher qualification with recognised English teacher training certifications.
Candidate are requested to appear with original relevant certificates with the copies, National Identity card and a Self-prepared application.

**Director/Principal**
**Sri Lanka German Training Institute**
**14.02.2020**

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில்
**3 அறைகளுடன் கூடிய புதிய வீடு**
விற்பனைக்குண்டு.
077 444 9119

**பணிப்பெண் தேவை**
யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக உள்ள சிறிய குடும்பத்தினருக்கு வீட்டில் தங்கி நின்று வீட்டுப்பணி செய்ய பணிப்பெண் தேவை.
076 047 1123

**மணமகள் தேவை**
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988ஆம் ஆண்டு பிறந்த பரணி நட்சத்திரம் கிரகபாவம் 15 செவ்வாய்க்குற்றமற்ற தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
**(மணமகனுக்கு முதுசம் உண்டு)**
தொடர்பு:- 078 560 3390

**மணமகன் தேவை**
ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஆஸ்திரேலியன் சிற்றிசன் பெற்ற Accountant மணமகளுக்கு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் படித்த மணமகன் தேவை.
071 454 3756, +61 437 99 4004

**IELTS CLASSES**
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS(Academic and General), A1 UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
*Guarnteed to 7.5 in IELTS Exam
*Pass in A1 Exam
*Exam centre
**Please contact:-**
077 780 3970/ 078 521 1351

**வீடு வாடகைக்கு**
நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய 9 அறைகள். 5 குளியல் அறைகள்.
5 வாகனத் தரிப்பிடம் கொண்ட வீடு நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கு ஏற்றது.
(தரகர் வேண்டாம்)
076 845 0010

**பேச்சு மற்றும் மொழிக்கான சிகிச்சைகள்**
சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான பேச்சு மற்றும் மொழியில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும் விழுங்குவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் (Swallowing) குரலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் (Voice), தொடர்பாடலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குமான (Communication) சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
- Speech and language Therapy
- Counseling to Speech disorders
- Consultation

மேலதிக தகவல்களுக்கு:- Medcon Hearing Care Centre
NO:- 171,1st Cross Street, Vembady College Road, Jaffna.
T.P:-021-4923587, 077- 0124415 Email:medconjeeva@gmail.com




**மாணவர்களுக்கான கற்கை நெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்**

**Diploma Course**
- Draughts Person (NVQ Level-4)-1Year(Diploma)

**NVQ Level Courses** - இலவசப் பயிற்சிநெறி -மோதங்கள்(முழு நேரம்)
- அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் (Aluminum Fabricator ( Level-3)
- இயந்திரவியல் Machinist (Level- 3)

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
**(TVEC)** பதிவு இலக்கம் : **P25/0014, Facilities : Hostel & Sports**

For More Information : **DIRECTOR**
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.
Tel : 0213213139/0212250975 E-mail: ejcit@sltnet.lk

**மலிவு விற்பனை**
**போட்டோ கொபி பேப்பர்**
(Photo Copy Paper)
A4, A3, B4, B5 & Legal
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
**Avalon, PPC, IK, Copy Paper**
No:870, K.K.S. Road, Jaffna.
T.P: 021 492 7499
077 9077 521

**வேலைக்கு ஆள்கள் தேவை**
**Phoenix Book Shop** இல் வேலைசெய்வதற்கு ஆள்கள் தேவை.
- Cashier
- Photo copy Operator with computer type setting knowladge must.
Salary - (15000/= - 20000/=) பேசித்தீர்மானிக்கப்படும்.
- வயதெல்லை (20-35)

தொடர்பு - 077 063 3116
386, Clock tower Road, Jaffna (வெலிங்டன், சந்திக்கு அருகாமையில்)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.